
KALKI 1.9.2002
ரூ. 6.00
கல்கி
சக்தி
கொடுத்தாயே!

தமிழ்



வேலூர் நகரசபையில், தந்தை பெரியாருக்கு ஒரு வரவேற்பு அளித்தார்கள். நிகழ்ச்சி நாளன்று, குறிப்பிட்ட நேரத்தில், பெரியார் வந்துவிட்டார். ஆனால் நகரசபைத்



தலைவர், "ஐயா! நிகழ்ச்சி ஆரம்பித்து, கடவுள் வாழ்த்து முடியட்டும். பின் மேடைக்குப் போகலாம்' என்று சொல்ல, 'நீங்கள் அளிக்கும் வரவேற்பை ஏற்றுக் கொள்ள சம்மதித்த பின், அந்த நிகழ்ச்சியில் இறை வணக்கம் பாடும் உங்கள் சம்பிரதாயத்தை நான் ஆட்சேபிப்பது சரியில்லை; நிகழ்ச்சி ஆரம்பமாகிறபோது, நான் மேடையில் இருப்பது தான் முறை" என்று சொல்லி விட்டு, விடுவிடுவென்று நிகழ்ச்சி மேடையை நோக்கி நடக்க ஆரம்பித்தார். மைக்கில் இறை வணக்கம் என்று அறிவிக்கப்பட்ட விநாடி, மற்றவர்களுக்கு முன்னால் தம் இருக்கையை விட்டு எழுந்து நின்றார் பெரியார்.

அரசு நிகழ்ச்சிகள் என்றால் முதலில் கடவுள் வாழ்த்தும், இறுதியில் தேசிய கீதமும்தான் பாடுவது மரபாக இருந்து வந்தது. ஆனால், தி.மு.க ஆட்சிக்கு வந்த பின்னர், கடவுள் வாழ்த்து, விடைபெற்றுக் கொண்டது.

கலைஞர் முதல்வராக இருந்தபோது, அரசு நிகழ்ச்சிகளைத் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. மனோன்மணீயம் சுந்தரனார் எழுதிய 'நீராரும் கடலுடுத்த' பாடலைத் தேர்வு செய்ததும் அவரே. தமிழ், திராவிடம் இரண்டும் இடம் பெறுவதே இப்பாடல் தேர்வு செய்யப்பட்டதன் காரணமாகச் சொல்லப்படுகிறது. இப்போது, அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் பாடப்படும் தமிழ்த்தாய் வாழ்த்து, டி.எம். சௌந்தரராஜன், பி. சுசிலா குரலில் ஒலிக்கிறது. "என் வாழ்நாளில் ஆயிரக்கணக்கான பாடல்களை நான் பாடி இருக்கிறேன் என்றாலும், தமிழ்த் தாய் வாழ்த்து பாடியதை பெருமையாக நினைக்கிறேன். பல்லாண்டுகளாக, அனைத்து அரசு விழாக்களிலும் தவறாமல் அது ஒலித்துக் கொண்டிருக்கிறது. வரும் காலத்திலும் தொடர்ந்து ஒலிக்கும் என்று நினைக்கிறபோது, சந்தோஷமாக இருக்கிறது" என்கிறார் டி.எம்.எஸ்.

நீராரும் கடலுடுத்த பாடலுக்கு இசையமைத்துக் கொடுத்தவர் எம்.எஸ். விஸ்வநாதன்தான், "கிருஷ்ணன் - பஞ்சு டைரக்ஷனில், பிள்ளையோ பிள்ளை படத்துக்கு நான் இசையமைத்துக் கொண்டிருந்த சமயத்தில் கலைஞர் கருணாநிதியிடமிருந்து, தமிழ்த்தாய் வாழ்த்துக்கு மெட்டமைக்கச் சொல்லி, தகவல் வந்தது. கிருஷ்ணன் - பஞ்சு வழிகாட்டுதலுடன், நான் நாலைந்து மெட்டுகள் போட்டு அவற்றைக் கலைஞருக்கு அனுப்பி வைத்தேன். அந்த மெட்டுகளிலிருந்து, இப்போது ஒலிக்கப்படும் மெட்டை கலைஞர் தேர்ந்தெடுத்தார். ஏவி.எம். ரிகார்டிங் தியேட்டரில் அது ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இசைத்தட்டாகவும், பின்னர் கேஸட்டாகவும் வெளியானது" என்றார் எம்.எஸ்.வி.

— மௌலி

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com

புதிய ஈ மெயில் முகவரிகள் :

எடிட்டோரியல் : kalki@kalkiweekly.com சந்தா : subscription@kalkiweekly.com பிற தகவல்கள் : info@kalkiweekly.com

மலையாளம்



தமிழகம், கர்நாடக எல்லையில் உள்ள கேரளா மலைகளுக்கு மேலே கபினி நதி பாயும் இடத்தில் ஆதிவாசிகளோடு ஆதிவாசிகளாக உண்டு உறங்கி அவர்களுக்கானச் சேவையில் ஈடுபட்டு வருகிறார் மலையாள இலக்கியவாதியான கே.ஜே. பேபி.

'மாவேலி மன்றம்' என்ற நூலுக்கு சாகித்ய அகாடமி விருது பெற்றிருக்கிற இவர்தான் மலையாள தெரு நாடகங்களின் முன்னோடி. 'நாடு கெதிகா' என்ற நாடகப் புத்தகத்தின் மூலம் கேரள அரசை கலக்கமடையச் செய்தவர்.

ஆதிவாசி மக்களின் உழைப்பும், உடைமையும் சொத்தும் சுகமும் எவ்வாறு சுரண்டப்படுகிறது என்பதையும் அரசுக்கெதிராக மக்களைக் கிளர்ந்தெழச் செய்யும் நோக்குடனும் வந்த இந்த நாடகத்தை நாயனார் அரசு தடை செய்தது. இருபது வருடங்கள் கழித்து அந் நாடகம் புத்தகமாக வந்தபோது நாயனார் அரசு இருக்கும்போதே பல்கலைக் கழகத்தில் பாடமாக வைக்கப்பட, பேபி இன்னும் பிரபலமானார்.

"தெரு நாடகம் போட்ட காலங்கள்ல, போலீஸ் ஏன் எதுக்குன்னு தெரியாம என்னைக் கைது பண்ணினாங்க. நான் ஜெயிலுக்குள்ளேயே கைதிகளுக்காக நாடகம் போட்டேன். அது ஒரு சந்தோஷமான தருணம். வெளியில் இருந்தப்போ சாப்பாடுக்கே கஷ்டம். ஜெயிலில் சாப்பாடு கிடைத்ததால் சந்தோஷமா இருந்தேன். அந்தச் சமயத்தில்தான் வாழ்க்கையின் சுய ரூபம் எனக்குப் புரிஞ்சுது" என்கிறார் பேபி.

இதன் பிறகு மக்கள் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் விதமாக இவரது எழுத்து மாறியதாம்.

ஆதிவாசி மக்களின் வாழ்க்கையை, ஆராய்ச்சிக்காக வெளியே இருந்து பார்த்துச் செல்பவர்கள் அதிகம். அவர்களுடனேயே வாழ்ந்து, அவர்களின் குழந்தைகளுக்கு 'கனவு' என்று பள்ளிக்கூடத்தையும் நடத்தி வரும் பேபி, "இங்கு புத்தகப் பாடம் மட்டும் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை. வாழ்க்கைப் பாடம் - அவர்களின் போக்கிலேயே... நாடகம், பாட்டு, இசை, எளிமை என்று சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்து கட்டில் வாங்கும் பணக்காரர்களுக்கு அதுவும் திருப்தி தருவதில்லை. ஆனால் அதே பணத்துக்கும் குறைவாக ஓர் ஏழைக்கு வீடு கட்டிக் கொடுக்க முடியும். மகாத்மா காந்தி ஒரு வேஷ்டி, துண்டுதான் வைத்திருந்தார். நூறு ட்ரெஸ் இருந்தும் பலருக்குத் திருப்தி யில்லை; இதைத்தான் சொல்லிக் கொடுக்கிறேன்" என்கிறார் இந்த இலக்கியவாதி.

— ராஜன் பி.ஆர்
மூவாட்டுப்புழா



தெலுங்கு

பத்துவயது பள்ளிக்கூட மாணவி தொடங்கி, அறுபத்து ஆறு வயது ரிடையர் ஆகிவிட்ட ஏர் இந்தியா அதிகாரிவரை சுமார் நூறு பேர் சனி, ஞாயிறு இரண்டு நாட்களிலும் வந்து விடுகிறார்கள். ஒரு மணி நேரம் வகுப்பு நடக்கிறது. வயது வித்தியாசம் இல்லாமல் அனைவரும், புரொபசர் ஜானகிராமன் சொல்லித் தருவதைக் கேட்டுக் கொள்கிறார்கள். அவர்கள் கற்றுக் கொள்வது: அன்னமாச்சார்யா கீர்த்தனைகள்.



ஆம்! 1997ம் ஆண்டு தொடங்கி, அன்னமாச்சார்யாவின் கீர்த்தனைகளைச் சொல்லிக் கொடுப்பதற்காகவே பிரத்யேகமாக வகுப்பு நடத்துகிறார் புரொபசர் ஜானகிராமன். இடம்: தி. நகரில் உள்ள திருப்பதி திருமலை தேவஸ்தான கோவில் வளாகம்.

"ஜூனியர் – சீனியர் என இரண்டு பாட்ச்சுகளாக வகுப்பு நடக்கிறது (வயது அடிப்படையில் இல்லாமல், கீர்த்தனை அடிப்படையில்தான் இந்தப் பிரிவு) வெறுமனே பாட்டு வாத்தியார்கள் போல, கீர்த்தனைகள் இங்கே சொல்லித் தரப்படுவதில்லை. அன்னமாச்சார்யாவின் கீர்த்தனைகள் முழுவதும் தெலுங்கில் இயற்றப்பட்டவை. ஆனால், இங்கே கற்றுக் கொள்ள வருகிறவர்கள் அனைவரும் தெலுங்கு தெரிந்தவர்கள் இல்லையே! ஆகவே, கீர்த்தனைகள் ஒவ்வொன்றையும் வரிக்குவரி பதம்பிரித்து, அர்த்தம் சொல்லி, அதில் உள்ள கருத்து மேன்மையை விவரித்துச் சொல்கிறேன். அதுமட்டுமில்லை; ஒவ்வொரு வகுப்பிலும், இரண்டுபேரை மற்றவர்கள் முன்னால் இரண்டு கீர்த்தனைகளைப் பாடச் சொல்கிறேன். பாடுகிற போது அவர்கள் செய்யும் சில தவறுகளைத் திருத்துகிறேன்" என்று விளக்கம் தருகிறார்



ஏராளமான விருதுகளைப் பெற்றிருக்கும் எழுபத்தைந்து வயது ஜானகிராமன்.

இடையில் ஆறுமாத காலம் அமெரிக்காவுக்குச் சென்று, அங்கே அன்னமாச்சார்யா கீர்த்தனை வகுப்புகளும், அன்னமாச் சார்யா உற்சவமும் நடத்தியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வகுப்புகளில் எவரும் சேரலாம். ஜாதி, மத, மொழி வித்தியாசமும் கிடையாது. கட்டணம் கிடையாது. பரீட்சை கிடையாது, சர்டிபிகேட் கிடையாது.

இங்கே கற்றுக் கொண்ட மாணவ, மாணவியர்கள் ஒரு குழுவாக, கோவில்களிலும் கிருஷ்ண கான சபா, இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைடி போன்ற சபாக்களிலும் கச்சேரிகள் வழங்கி இருக்கிறார்கள்!

— மானஸா

படங்கள்: ஸ்ரீஹரி

மராத்தி



சேவை மனப்பான்மை உடையவர்கள் இரண்டு ரகம் - மேத்தா போன்று, தினம் நான்கு லட்சம் டொனேஷன் கொடுத்தே தீருவேன் என்று பிடிவாதமாக தர்மம் செய்பவர்கள் ஒரு ரகம்; குல்கர்னி போன்று, நித்தம் கொஞ்சம் மராத்தியைச் சொல்லிக் கொடுத்தே தீருவேன் என்று பிடிவாதமாக வகுப்பு எடுப்பவர்கள் பிறிதொரு ரகம்.

மேத்தா போன்ற வைர வியாபாரிகளைப் பற்றி செய்தித் தாள்களில், இதழ்களில் படிக்கலாம். குல்கர்னி போன்ற வைரமான இதயமுடையவர்களைப் பற்றி மனித மனங்களை, அதுவும் தமிழ் இதயங்களைப் புரட்டினால் தான் தெரியும்.

மும்பையிலோ மராத்தியர் அல்லாதவர்கள் தான் அதிகம். ஆனால் அரசுக்கோ மொழிப் பற்று எக்கச்சக்கம். பஸ் நம்பரிலிருந்து, எலெக்ட்ரிசிடி பில் வரை எல்லாம் மராத்தி மயம். மூணாங்கிளாசிலிருந்து பத்தாவது வரை மராத்தியைக் கட்டாய பாடமாக்கியே குழந்தைகளைத் திணறடிக்கிறார்களே! ட்யூஷன் வைக்க கட்டுப்படியாகாதவர்கள் கதி?

இந்நிலையில்தான் 'மும்பை மராத்திய சங்'காரர்களின் பணி, மகத்துவமடைகிறது. சையான், செம்பூர், கோரேகான் போன்ற தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து, இலவச மராத்தி வகுப்புகள் மூலம் நம்மவர்களுக்குப் பாடமெடுக்கிறார்கள். இங்கே பிள்ளைகளுடன், அவர்களுடைய அப்பா அம்மாக்களும் கற்கலாம். பெற்றவர்கள் மட்டுமே கற்றாலும், பிள்ளைகளுக்குப் போய்ச் சேர்ந்து விடுமே?

இப்படியாகவே செம்பூர் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக மராத்தி சொல்லிக் கொடுக்கிறார் குல்கர்னி.

மும்பையில் பிறந்து வளர்ந்து, வில்சன் காலேஜில் எம்.ஏ. முடித்து, கீர்த்தி காலேஜில் விரிவுரையாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கல்லூரி காலங்களிலேயே கிராமப் புறங்களுக்குச் சென்று முதியோர் கல்வி பயிற்றுவித்தவர். இன்று, மராத்தியுடன் கீதை, உபநிஷத் போன்ற சத் விஷயங்களையும் பரப்பிக் கொண்டிருக்கிறார்.

61 வயதிலும் பதினாறு வயதின் குதூகலத்துடன் பாடம் சொல்லிக் கொடுக்கும் குல்கர்னியின் ஊதியம் என்ன தெரியுமா? மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு டீயும் ஒரு தேன் குழலும்!

"சச்சினின் தந்தை ரமேஷ் டெண்டுல்கர் தான் இவரது இன்ஸ்பிரேஷனாம்! இருவரும் சேர்ந்தமர்ந்து, பாடங்களில் சுவை கூட்டுவது எப்படி என்று நெடுநேரம் விவாதிப்பார்கள் என்கிறார், செம்பூர் தமிழ்ச் சங்கத்தின் செயலாளரான கோபாலன்.

இவரிடம் இலவசமாகப் பயின்றுவிட்டு நான்கு நிலைகளிலும் தேறி சான்றிதழ் பெற்றவர்கள், மராத்தி ட்யூஷன்கள் எடுத்து, தமக்கு வருவாய் தேடிக் கொள்வது சுவையான கிளைக் கதை! இவரிடம் பயின்ற தமிழரான (பர்மா ஷெல்) ராமமூர்த்தி ஒருமுறை காண்டேகருக்கு மராத்தி சமூகம் எடுத்த விழாவில், மடைதிறந்த வெள்ளம் போல தொடர்ந்து பத்து நிமிடம் மராத்தியில் உரையாற்றியதைக் கண்டு கூட்டமே அதிசயித்ததாம். இத்தனை வருடங்களில் இவரது அயராத உழைப்பினால் இவர் சேர்த்திருக்கும் சொத்து, தமிழ் இதயங்களில் ஓர் உயர்ந்த பீடம்!

— ஜெ. ஆர்.
முலுந்த், மும்பை



திகைப்பூட்டிய வாய்ப்பு!


தனக்குத் 'திகைப்பு' தந்த முதல் வாய்ப்பு பற்றிச் சொல்கிறார் ஸ்ரீகாந்த்.

"நடிகனாகியே தீருவது என்ற பிடிவாதத்தோடு, கம்ப்யூட்டர் படிப்பைத் தூக்கிப் போட்டுவிட்டு வாய்ப்புத் தேடினேன். நம்பவே முடியவில்லை, தொடர்ந்து வெற்றிப்படங்களைக் கொடுத்த பிரபல இயக்குனர் 'எனது அடுத்த படத்தில் நீதான் ஹீரோ' என்று சொல்லிவிட்டார். பத்து மாதங்கள் ஓடிவிட்டன. நானும் நம்பிக்கையோடு காத்திருந்தேன். ஆனால் கூலாக வேறொருத்தருக்கு வாய்ப்புக் கொடுத்து, படத்தைத் தொடங்கி விட்டார். நான் நொறுங்கிப்போனேன். சரி சினிமா வேண்டாம் என்று முடிவு செய்து விளம்பரங்களில் நடித்துக் கொண்டிருந்தேன். "ரோஜா கூட்டம் படத்திற்கு இரண்டாவது ஹீரோ தேடிக் கொண்டிருக்கிறார்கள், உன்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன் புகைப்படங்களோடு உடனே போ" என்றார் நெருங்கிய நண்பர். எனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. இருந்தாலும் நண்பரின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து அந்த அலுவலகத்திற்கு ஃபோன் செய்து அப்பாயின்மென்ட் வாங்கிக் கொண்டேன். கொஞ்சம் தாமதமாகப் போய்ச் சேர்ந்தேன். அலுவலகத்தில் காலடி எடுத்து வைத்த அடுத்த வினாடி கரண்ட் கட்! யாரோ பின் மண்டையில் அடித்தமாதிரி இருந்தது. அங்கே உதவிஇயக்குனர் மட்டும்தான் இருந்தார். 'இவ்வளவு நேரம் இயக்குனர் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். வாய்ப்பு தேடி வரும் நீங்கள் தாமதமாக வந்தால் என்ன அர்த்தம்? புகைப்படத்தைக் கொடுத்துவிட்டுப் போங்கள்' என்று வாங்கிக் கொண்டு அனுப்பி விட்டார். இரண்டாவது ஹீரோ வாய்ப்பு கூட நமக்கு இல்லை என்று முடிவு செய்து விட்டேன். மனத்தைத் தேற்றிக் கொண்டு அன்று இரவே எனது கம்ப்யூட்டர் டிகிரியை தூசி தட்டி எடுத்து வைத்தேன். ஆனால் மறுநாள் ரோஜா கூட்டம் அலுவலகத்திலிருந்து அழைப்பு. எதிர்பார்ப்பு எதுவுமில்லாமல் போனேன். உதவி இயக்குனர்கள் மட்டுமே இருந்தார்கள். சிறிது நேரம் கழித்து இயக்குனர் வந்தார். என்னைக் கொஞ்ச நேரம் கவனித்தார். 'நாளை காலை ஐந்து மணிக்கு ஸ்கிரீன் டெஸ்ட்' என்றார். ஸ்கிரீன் டெஸ்ட் முடிந்தது. எனக்கோ அரைகுறையாய்ப் பரீட்சை எழுதிய மாணவன் மாதிரி மனகக்குள் பயம். இயக்குனர் சசி என்னிடம் வந்து 'இந்தப் படத்திற்கு நீங்கதான் ஹீரோ' என்றார். இரண்டாவது ஹீரோ என்றல்லவா சொன்னீர்கள் என்றேன். 'அதெல்லாம் இல்லை படத்தில் உள்ள எழுபது காட்சிகளிலும் நீங்கள் வருகிறீர்கள். ஆறுபாட்டுகள் உங்களுக்குத்தான்' என்றதும் திகைப்பில் தலைசுற்றி ஒரு நிமிஷம் சோபாவிலேயே சாய்ந்து விட்டேன்."



— ஜெய்

இவன்



வோட்டுப் போட்டு ஓட்டாண்டியான மக்களுக்கு, தமது வேட்டு வசனங்களால் விழிப்புணர்வு தரும் பார்த்திபன், அநீதிகளைத் தனியொருத்தன் தட்டிக் கேட்டால் உதவாதென்று ஒட்டு மொத்தமாகக் கேட்க வைக்கிறார். இப்படி மக்களைத் தூண்டிவிடும் இவருக்கு வட்டிக்கடை தொடங்கி சட்டசபை வரையிலும், குட்டி, குட்டியாய் நிறைய வில்லன்கள்.

இறுதியில் ஓரணியில் திரளும் இந்த வில்லன்கள், என்ன ஆகிறார்கள் என்பதை ஒரு சோதனை முயற்சி கிளைமாக்ஸ் மூலம் சொல்ல முயன்றிருக்கிறார் பார்த்திபன். ரசிகர்களோ சோதனை மேல் சோதனை போதுமடா சாமி என்பது போல் நெளிகிறார்கள்.

இடையிடையே நாயகனை ஒருதலையாய்க் காதலித்து கவலைப்படும் சௌந்தர்யா, கல்யாணம் செய்து கொண்டு துப்பாக்கி சப்தங்களுக்கு நடுவே குடும்பம் நடத்த மீனா! இப்படி நகரும் முக்கோண மெலோடிராமா திரைக் கதையானது, புதிய சட்டையில் பழைய துணிகளைக் கொண்டு ஒட்டுப் போட்ட மாதிரி இருக்கிறது. அறிமுகக் காட்சியில் புதிய பாதையில் தோன்றிய அதே துடிப்போடு வரும் பார்த்திபன், பேட்டை தாதாவான பிறகு, லாஜிக் பற்றியெல்லாம் கவலைப்படாத ஓவர்டோஸ் ஹீரோயிசத்திற்குள் விழுந்து விடுகிறார்.

நல்லவேளையாக ஆக்ஷன் சீக்குவென்சுகளில் அவர் காட்டும் அதிரடி வேகம், அவரின் உருவத்தோடு ஒத்துப் போய்விடுகிறது.

உயரம் குறைவான ஜாதிக் கட்சித் தலைவரைக் கேலிசெய்யும் காட்சிக்கு மட்டும் விதிவிலக்கு கொடுத்து விட்டுப் பார்த்தால், பார்த்திபனின் வழக்கமான நகைச்சுவை இழையில் முறுக்கு குறைவு.

நிஜ கர்நாடக இசைப் பாடகி போல, சுதாரகுநாதனின் சுறுசுறு சுரங்களுக்குக் கச்சிதமாய் வாயசைத்திருக்கும் சௌந்தர்யா நடிப்பிலும் அசத்தி விடுகிறார். விட்டேனா பாரென்று மீனாவும் அசர வைக்கிறார்.

ஒளிப்பதிவாளர் பௌசியா, இசையமைப்பாளர் இளையராஜா, வசனகர்த்தா பார்த்திபன் மட்டும் தனித்துத் தெரிகிறார்கள்.



தெலுங்கிலும் டப் செய்தால் ஓடும் சாத்தியம் அதிகமுள்ள மெசேஜ் மசாலா இவன்.

— விஷுவல்தாசன்

● ஆவரேஜ்

ஷிவானி: தொடரும் மர்மம்!

ஷிவானி கொலையுண்ட போதே மகாஜனை இணைத்து தலைநகரில் பல கிசுகிசுக்கள் உலவின என்று போலீஸ் அதிகாரிகள் ஒப்புக் கொள்கிறார்கள். மகாஜனும் அத்வானியும் அவருடைய இல்லத்துக்குச் சென்று இறுதி மரியாதை செலுத்தியது அப்போது பத்திரிகைகளில் வெளிவந்தது.

ஆனால் மகாஜனை இந்த வழக்கில் தொடர்பு படுத்தக் கூடிய அளவுக்கு எந்த ஆதாரமும் தங்களிடம் இல்லை என்கிறது டெல்லி போலீஸ்.

இந்த வழக்கில் தாங்கள் முக்கியமாக சந்தேகப்படும் குற்றவாளி ரவிகாந்த் ஷர்மா மட்டுமே என்று டெல்லி போலீஸ் இப்போது அடித்துச் சொல்கிறது.

குற்றம் நடந்ததை நேரில் கண்ட சாட்சி எதுவும் கிடையாது. கொலையுண்டபோது ஷிவானி மூன்று மாதமே ஆன தன் குழந்தையுடன் தனியாகத் தான் இருந்திருக்கிறார். சந்தர்ப்ப சூழ்நிலைகளை எடைபோட்டும் விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கக் கூடிய சில தடயங்களையும் வைத்துத்தான் இந்த வழக்கை அக வேண்டியிருக்கிறது என்று சம்பந்தப்பட்ட புலனாய்வு அதிகாரிகள் சொல்கிறார்கள்.

இந்த வழக்கு தொடர்பாக இதுவரை 194 நபர்கள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டிருக்கிறார்கள். இதில் ஷிவானியின் நண்பர்களும் உடன் பணி புரிந்தவர்களும் அடக்கம். இந்த விசாரணையின் முதல் கட்டத்தில் போலீஸ் சந்தேக வலையில் ஸ்பஷ்டமாக விழுந்தவர்கள் இருவர். ஒருவர் ஷிவானியின் கணவர் பட்னாகர். மற்றவர் இப்போது பரபரப்பாகத் தேடப்படும் போலீஸ் அதிகாரி ரவிகாந்த் ஷர்மா. ஷிவானியின் நட்பு வட்டாரத்தில் போலீஸுக்குக் கிடைத்த தகவல்கள் என்னவென்றால் ஷிவானி - பட்னாகர் மணவாழ்க்கையில் பல விரிசல்கள் இருந்த தாகவும் ஷிவானி விவாகரத்துக்குத் தயாராக இருந்ததாகவும் பலர் சொல்லியிருந்தனர். ஆனால் சந்தர்ப்ப சாட்சியங்களை முன் வைத்து அவரைச் சந்தேக வலையிலிருந்து நீக்கியது டெல்லி போலீஸ். அடுத்து வருபவர் ராகேஷ். இவர் முன்னாள் ஐ.கே. குஜ்ரால் பிரதமராக இருந்த போது பிரதமர் அலுவலகத்தின் விசேஷ அதிகாரியாக இருந்திருக்கிறார். (பல விதிமுறைகளை மீறி இவருக்கு அந்தப்பதவி அளிக்கப்பட்டது என்று இப்போது சர்ச்சைகள் கிளம்பி வந்து கொண்டிருக்கின்றன). அப்போது ஷிவானி இந்தியன் எக்ஸ்பிரஸுக்காக பிரதமர் அலுவலக செய்திகளைச் சேகரிக்க ஷர்மாவை அடிக்கடி சந்திக்க நேர்ந்தது.

ஷர்மா — ஷிவானி இடையிலான இந்த உறவினைப் பற்றித் தெரிய வந்ததும் டெல்லி போலீஸ் மேலும் தோண்டித் துருவ ஆரம்பித்து. அப்படித் தோண்ட ஆரம்பித்தபோது தான் பல விஷயங்கள் வெளிவர ஆரம்பித்தன.

ஷிவானி ஒரு ஸ்காலர்ஷிப் விஷயமாக லண்டனில் தங்கியிருந்தபோது ஷர்மாவை அங்கிருந்து 176 முறை தொடர்பு கொண்டிருக்கிறார் என்றும் ஷர்மா இங்கிருந்து ஷிவானியை 90 முறை தொடர்பு கொண்டிருக்கிறார் என்றும் ஊர்ஜிதமாகியிருக்கிறது. இப்படியாக தொலைபேசி தொடர்பு விஷயங்களை டெல்லி போலீஸ் அடித்துச் சொல்லவும் ஷர்மா பதற்றமடைய ஆரம்பித்தார்.





ஷிவானியின் கணவர் பட்னாகருடன் சேர்ந்து பொய்யைக் கண்டு பிடிக்கும் இயந்திரப் பரிசோதனைக்கு உட்படுமாறு கேட்டபோது ஷர்மா பலமாக மறுத்துள்ளார். அதன் பிறகு தலைமறைவாகி இருக்கிறார் என்கிறது போலீஸ் வட்டாரம். அவர் மீது தவறில்லை யென்றால் ஏன் அவர் விசாரணைக்கு உட்பட மறுக்கிறார் என்றும் கேட்கிறது. தற்போது தலைமறைவாக உள்ள ஷர்மா ஹிமாச்சல் பிரதேசத்தில் ஒரு அரசியல்வாதியின் ஆதரவுடன் பதுங்கியிருப்பதாகவும் சொல்கிறார்கள்.

— ராகவன் தம்பி

ப்ளாஷ் பேக்

★ ஜனவரி 23, 1999. கிழக்கு டெல்லியின் பட்பர்கஞ்சில் உள்ள நவ்குஞ்ச் அபார்ட்மெண்டில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டின் பெண் பத்திரிகையாளரான ஷிவானி பட்னாகர் கத்தியால் குத்தப்பட்டுப் பிணமாக கிடந்தார். அருகில் அழுது கதறியவாறு அவருடைய மூன்று மாதக் குழந்தை. சமையலறையில் இரண்டு கோப்பைத் தேனீர் யாராலும் தொடப்படாமல் இருந்ததை போலீஸ் அப்போது தன் கவனத்தில் குறித்துக் கொண்டது.

★ ஷிவானியின் கணவர், அவருடைய சகோதரி மற்றும் ஷிவானியின் மைத்துனர் ஆகியவர்கள் Lie Detector Test எனப்படும் புலனாய்வுப் பரிசோதனைக்கு ஆட்படுத்தப் பட்டனர். அப்போது சந்தேக வலையில் இருந்த ஹரியானா போலீஸ் மூத்த அதிகாரியான ரவிகாந்த் ஷர்மா அந்தப் பரிசோதனையைத் தவிர்த்தார்.

★ பதினோறு மாதங்கள் இப்படியே கழிந்தன. கிடைத்த தடயங்களைப் பார்த்து மலைத்து நின்றது டெல்லி போலீஸ். உறுதியான தடயங்களோ சாட்சியங்களோ இல்லாது போனாலும் ஷிவானியின் கணவர் பட்னாகர் இந்தக் கொலையைப் புரிந்திருக்கலாம் என்னும் முடிவுக்குத் தள்ளப் பட்டது டெல்லி போலீஸ். நீண்ட நாட்களுக்குப் பிறகு அவர் சந்தேக வலையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

★ ஷிவானியின் குழந்தையின் தந்தை யார் என்று உறுதி செய்யும் வகையில் மரபணுப் பரிசோதனையை ஷர்மா மீது நிகழ்த்த வேண்டும் என்று பணித்தது டெல்லி போலீஸ். இதையும் தவிர்த்தார் அவர்.

★ ஷர்மாவின் நெருங்கிய நண்பர்கள் மீது தன் விசாரணை வலையை நெருக்கியது டெல்லி போலீஸ். ஷர்மாவின் மொபைல் தொலைபேசி தீவிரமாகக் கண்காணிப்புக்கு உள்ளாகியது.

★ ரவிகாந்த் ஷர்மா டெல்லி போலீஸின் சந்தேக வலையில் சந்தேகமில்லாது சிக்கினார்.

★ ஜூலை 29, 2002 - குற்றவாளியாகச் சந்தேகிக்கப்படும் முதல் நபரான ஸ்ரீ பகவான் கைது செய்யப்பட்டான். இவன் கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் பிரதீப் மற்றும் சத்ய பிரகாஷ் ஆகியவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த மூவரும் ஒரே குரலில் ரவிகாந்த் ஷர்மாவுக்கு இந்தக் கொலையில் நேரடி தொடர்பு இருப்பதாக வாக்குமூலம் அளித்தார்கள்.

★ டெல்லியின் கீழ்நிலை நீதிமன்றம் ஷர்மாவுக்கு எதிராக ஜாமீன் கிடைக்காத கைது வாரண்ட் பிறப்பித்தது.

★ ஷர்மாவின் மனைவி, மது ஷர்மா சண்டிகரில் பத்திரிகையாளர் கூட்டத்தைக் கூட்டிக் கொலையுண்ட ஷிவானிக்கும் மத்திய அமைச்சர் பிரமோத் மகாஜனுக்கும் தொடர்பு இருந்தது என்று குற்றம் சாட்டினார்.

★ மகாஜன் மறுத்தார். பா.ஜ.க., மகாஜனுக்கு உறுதுணையாக நின்றது.

★ ஷர்மா போலீஸுடனான தன் கண்ணாமூச்சி விளையாட்டை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.



ஷிவானி விவகாரம் : சில சிந்தனைகள்!

"சமூகத்தில் நடக்கும் அவலங்களை, பத்திரிகைகளும் பிற ஊடகங்களும் எப்படிக் கையாள்கின்றன என்பது பற்றி ஒரு புத்தகம் சமீபத்தில் வெளிவந்தது. 'Branded' என்ற தலைப்புள்ள அப்புத்தகத்தை எழுதியவர் தமது மகனின் நினைவுக்கு அதை அர்ப்பணித்துள்ளார். 'என் மகன் இரண்டு முறை இறந்தான். முதல் முறை அவன் உடல் இறந்தது; இரண்டாம் முறை அவனுடைய தன்மானம் கொலை செய்யப்பட்டது.' என்று குறிப்பிட்டுள்ளார் அந்நூலாசிரியர்! இப்போது ஷிவானி கொலை வழக்கில் நடந்து வருவதும் அதேதான்!" என்கிறார் டெல்லியில் வசிக்கும் பத்திரிகையாளர் சிவந்தி நைனான்.

ஹிந்து நாளிதழில் மீடியா சார்ந்த விஷயங்கள் குறித்து அலசல் செய்து எழுதுபவர் இவர்.

"இன்று செய்தி சேகரிப்பவர்கள், விறுவிறுப்பும் பரபரப்பும் தர விழைகிறார்கள். அந்த முனைப்பில் பின் விளைவுகள் குறித்து சிந்திக்கத் தவறுகிறார்கள்" என்றும் எச்சரிக்கிறார்.

மூன்று வருடங்களுக்கு முன் நடந்த ஷிவானி பட்னாகர் கொலை, இன்று இந்தியா முழுதும் அமர்க்களப்படுகிறது. விகாரமான எல்லைகளைத் தொடும் செய்திகளும் பழி சுமத்தல்களும் சகட்டு மேனிக்கு வீசப்படுகின்றன.

வழக்கு ஒரு புறம் இருக்கட்டும்; ஒரு பெண்ணின் பெயர் அபாண்டமாகப் பழுதாக்கப்படுவதால்? அவர் குடும்பத்தினரின் மனோநிலை எப்படி இருக்கும் என்பது குறித்தெல்லாம் யாரும் யோசிப்பதாகத் தெரியவில்லை.

டைம்ஸ் ஆஃப் இந்தியா டெல்லி கிளையில் பணியாற்றும் நாராயணி கணேஷ் சொல்கிறார் :

"பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் குற்றவாளிகள் குற்றத்திலிருந்து கவனத்தைத் திசைதிருப்பித் தப்பிக்க பார்ப்பது சர்வ சகஜமாகிவிட்டது. சம்பந்தப்பட்ட பெண்ணின் நன்நடத்தையைக் கேள்விக்குள்ளாக்குவது மிகச் சுலபமாயிருக்கிறது" என்கிறார்.

எகனாமிக் டைம்ஸ் ஷோபா மேனனும் இதையே கூறுகிறார். "திறமையாக வாதாடுவதாக நினைத்துக் கொண்டு பெண்கள் மீது அவதூறு பூசுவது திட்டமிட்டு நடைபெற்று வருகிறது" என்கிறார்.

"பத்திரிகைத் துறையில் மட்டும் அல்ல, அனைத்துத் துறைகளிலும் பெண்கள் ஆண்களுடன் சகஜமாகவும் நட்புடனும் பழகத்தான் வேண்டியிருக்கிறது. ஆணாதிக்க சமுதாயம் என்பதால், அவர்கள் தங்களை நிரூபிக்கக் கூடுதல் உழைப்பும் முயற்சியும் வழங்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு செய்ய முன் வரும் துணிவு இன்று பெண்களுக்கு இருக்கிறது. ஆற்றலும் இருக்கிறது. அதை மதித்து, அவர்களுக்குச் சற்றுக் கூடுதல் பாதுகாப்பும் சௌகரியங்களும் செய்து தருவது பத்திரிகை, மீடியா நிறுவனங்களின் பொறுப்பு."

"சில நிறுவனங்களில் இரவு நேர பணிக்கு வரும் பெண்களுக்கு வாகன வசதி செய்து தரப்படுகிறது. அது இயலாத பட்சத்தில் அவர்களை அதிகம் அலைகழிக்காத பணிகளில் ஈடுபடுத்துவதே நல்லது" என்கிறார் சிவந்தி நைனான்.

மக்கள் விரும்புகிறார்கள் என்று மீடியா சில பரபரப்பு யுக்திகளில் ஈடுபடுகிறது. அதனால் இறுதியில் பாதிக்கப்படப்போவது அதே மக்கள்தான்! 'இன்று ஷிவானி... நாளை யாரோ...?' என்று மீடியாவின் வாடிக்கையாளர்களும் சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும்.

— அருணா ஸ்ரீநிவாசன்









கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
பாரதியார்.

சோனியாவுக்கு ஜெ. சவால்!

கனவு காண அனுமதி வழங்கிவிட்டார் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்! "ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் ஒரு பிரத்யேகக் கனவு உண்டு. காமராஜர் ஆட்சி, சோனியாவின் கனவு தான்... கண்டுவிட்டுப் போகட்டுமே!" என்று மனமுவந்து அனுமதி வழங்கிவிட்டார்!


இதையே சவாலாக எடுத்துக் கொண்டு கனவை நனவாக்கிக்காட்ட வேண்டும் என்ற வேகம் இப்போதேனும் காங்கிரசுக்குப் பிறக்க வேண்டும். 'எங்கள் கனவு நனவாகும்; ஜெய லலிதாவுக்கு நாங்கள் சிம்மசொப்பனமாக விளங்குவோம்' என்ற ஆவேசம் பிறக்க வேண் டும்.

மதுரையில் நடந்த காங்கிரஸ் – த.மா.கா. இணைப்பு மாநாட்டில் கூடிய கூட்டம் காங்கிரசுக்கு மக்கள் தரக்கூடிய ஆதரவின் ஆரோக்கியமான அடையாளம்.

ஒரு சில த.மா.கா. எம்.எல்.ஏக்கள் இணைப் புக்கு ஒப்புக் கொள்ளாது போனாலும் இவ்



2002 செப்டெம்பர் 1
சித்ரபானு ஆவணி 16
மலர் : 61
இதழ் : 5



வாண்டில் தமிழகத்தின் முக்கிய அரசியல் நிகழ்வு இந்த இணைப்பு. இதை ஜெயலலிதா ஏற்காது போகலாம்; கடந்த தமிழக தேர்தலில் 59.07 சதவிகித வாக்குப் பதிவு தான் நடந்தது என்பதையும் அவர் மறந்து போயிருக்கலாம். இவ்விரண்டு விஷயங்களையும்தான் இணைந்த தமிழக காங்கிரஸ் இனி தனது உந்து சக்தியாக்கிக் கொள்ள வேண்டும். மதுரையில் தெரிவிக்கப்பட்ட ஆதரவைத் தக்க வைத்துக் கொள்ளவும் பெருக்கிக் கொள்ளவும் திட்டமிட்டு உழைக்க வேண்டும். திராவிட கட்சிகளிடத்திலே சலிப்பேற்பட்டுப்போய் வாக்களிக்க முன்வராமல் முடங்கிப்போகிற மக்களிடையே புத்துணர்வும் நம்பிக்கையும் ஊட்டி, அவர்களை வாக்குச் சாவடிக்கு வர வழைக்க வேண்டும்.

இந்தக் காரியங்களைச் செய்வதற்கு இதைக் காட்டிலும் சிறந்த தருணம் இருக்க முடியாது.


தேர்தல் வருவதற்கு இன்னும் மூன்றரை ஆண்டு காலம் இருக்கிறது. எனவே, கூடிப் பேசி செயல்திட்டம் உருவாக்கி, அமல் படுத்த போதுமான அவகாசம் இருக்கிறது. ஆனால், இதுவே மெத்தனத்தை உருவாக்க அனுமதித்துவிடக் கூடாது. இப்போதே சுறு சுறுப்பு காட்டவேண்டும்.

காங்கிரசுக்கு எதிராக அமையக்கூடிய கட்சிகள் பா.ஜ.க., தி.மு.க., அ.தி.மு.க. இவற்றுள், பா.ஜ.க. இன்னும் தமிழகத்தில் வேரூன்றித் தழைக்க ஆரம்பிக்கவில்லை. தி.மு.கவைப் பொறுத்தவரை, கலைஞர் இனி தேர்தலில் நிற்கப் போவதில்லை என்று அறிவித்துவிட்டதால் நிலவுகிற வெற்றிடம் இன்னமும் நிரப்பப்படவில்லை. உட்கட்சி சிக்கல்களும் குடும்பப் பிரச்னைகளும் அடுத்த தலைமுறையைப் பற்றிய கேள்விக் குறியும் அக்கட்சியின் பலவீனங்கள்.

அ.தி.மு.க., தேர்தலில் பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சியமைத்திருப்பது உண்மையே. ஆனால், அத்தேர்தலில் வாக்குச் சாவடிக்கே வராத வாக்காளர்கள் ஏராளமாக இருந்திருக் கிறார்கள். அவர்களது கவனமும் ஆதரவும் பெற்று வெற்றிகாண காங்கிரஸ் முயற்சி மேற்கொள்ள லாம்.

ஆரோக்கியமான அரசியல் சூழல் நிலவாததாலேயே பெரும்பாலான மக்கள் வாக்களிப் பதில்லை என்று கொள்வது தவறாகாது. அத்தகைய சூழல் உருவாக அறிவு பூர்வமான விவாதங் கள், நேர்மையான அரசியல் பாதை, ஆக்கபூர்வமான முன்னேற்றத் திட்டங்கள் என்று காங்கிரஸ் சிந்தித்துச் செயல்படலாம்.

அ.தி.மு.க. இதுவரையில் வழங்கியுள்ள ஆட்சி தமிழக மக்களிடையே நிறைய அதிருப்தியையே ஏற்படுத்தியுள்ளது என்பதையும் காங்கிரஸ் நினைவில் கொள்ளவேண்டும்.



இவற்றைக் காட்டிலும் முக்கியம், காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் முறை வைத்துக் கொண்டு தமிழகமெங்கும் சுற்றுப் பயணம் செய்து மக்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுடைய பிரச்னைகளைப் புரிந்து கொண்டு அடுத்த தேர்தலுக்குள் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து, தயார் நிலையில் வைத்திருக்கலாம். வேலை வாய்ப்புக்கு வழி செய்யும் திட்டங்களை உள்ளடக்கி, தேர்தல் அறிக்கைகளை வடிவமைக்கலாம். பொருளாதார மேம்பாட்டுக்கும் விவசாயம் தழைப்பதற்கும் யோசனைகளை முன் வைக்கலாம். இவற்றையெல்லாம் செய்வதற்கான மனித வளம் இப்போது காங்கிரஸின் வசம் உள்ளது. ஜி.கே. வாசன், இளங்கோவன் போன்ற தலைவர்கள், ஒப்புநோக்க வயதில் இளையவர்கள். ஆற்றல் மிக்கவர்கள். அறிஞர் பெருமக்களை ஈர்க்க வல்லவர்கள்.

காங்கிரஸ் கட்சியினரிடையே இல்லாத ஒரே விஷயம் ஒற்றுமை! அதையும் சமீபத்தில் இணைப்புக்குப் பிறகு அடைய முடியும் என்ற நம்பிக்கை இந்நேரம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

காங்கிரஸ் மத்திய தலைமை மட்டும் உட்கட்சித் தேர்தல் நடத்த உத்தரவு போட்டுவிட்டால், காங்கிரஸ் மீண்டும் உயிர்த்தெழுந்துவிடும். அவ்வாறன்றி, மாநிலத் தலைமைப் பொறுப்புகளை நியமன முறையிலேயே சோனியா நிரப்புவாரானால் உட்கட்சிப் பூசல்களேதான் தொடரும்.

சோனியாவை நோக்கி ஜெயலலிதா சொன்ன வார்த்தை அவரை உசுப்புவதோடு இளங்கோவனையும் முடுக்கிவிட்டு இயங்கச் செய்ய வேண்டும். 'காங்கிரஸ் ஒரு சிறந்த மூன்றாவது அணியாகச் செயல்படலாம்' என்று ப.சிதம்பரம் கூட பேசியிருக்கிறார்.

பொதுவாக, மூன்றாவது அணி, வோட்டுகளைப் பிரித்து முதல் அல்லது இரண்டாவது அணி வெற்றி பெறத்தான் உதவும். இந்த மூன்றாவது அணி வித்தியாசமான அணியாய் அமையட்டும். ஓட்டுக்களைப் பிரிப்பதற்குப் பதிலாக, வாக்குகளைத் தன்பால் குவிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளட்டும்.

சாதனைகள் எல்லாமே கனவுகளில்தான் தொடங்குகின்றன என்பதை ஜெயலலிதாவுக்கு உணர்த்துவதற்கு முன்னதாக, அதனை காங்கிரஸ் உணர்ந்து எழுச்சி பெறவேண்டும். ○



அன்னமே பிரம்மா! அன்னமே விஷ்ணு! அன்னமே சிவன்!

புண்ணியக்ஷேத்ரம் இராமேஸ்வரத்தில் மாதந்தோறும் அமாவாஸை திதியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். ராமஸேது என்றும், ஸேது ஸ்தலம் என்றும் போற்றப்படும் இராமேஸ்வரம் புகழ்மிக்க புண்ணிய க்ஷேத்ரமாகும். இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் அழியாத புண்ணியப் பலன் கிடைக்கும்.

இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். அனைவரும் நலம் பெறுவர். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். அன்னமளிப்பது அமிர்தமளிப்பதற்கு சமம். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். வறுமை நீங்கி, பெரும் பணக்காரனாவான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

- ★ சிறியதொகை மற்றும் அரிசி போன்ற உணவு பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
- ★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.10,000 அனுப்பும் அன்பர்களுக்கு ஆயுள்காலம் முழுவதும் கோபுர தரிசனம் மாத இதழ் அனுப்பி வைக்கப்படும்.

ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் அல்லது பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும். ரூ. 5,000 மற்றும் ரூ. 10,000 அளிக்கும் அன்பர்களுக்கு கவி-ந்யாய-மீமாம்ஸ சிரோமணி ஸ்ரீமான் திருவெண்காடு டி.கே. முத்துஸ்வாமி சாஸ்திரிகளால் தயாரிக்கப்பட்டு பூஜையில் வைத்த யந்திரம் அன்பர்களின் விருப்பத்திற்கேற்ப எந்த யந்திரம் தேவையோ அந்த யந்திரம் இலவசமாக வழங்கப்படும். மேலும் பகவத்கீதை புத்தகம் அல்லது கந்தபுராணம் புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். ரூ. 10,000 அனுப்பும் அன்பர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மாதந்தோறும் பிரசாதம் அனுப்பிவைக்கப்படும். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு அணில் செய்த ஸேவை போல் இந்த லோகக்ஷேமத்திற்கு நம்மால் இயன்றளவில் உபகாரம் செய்திடுவோம். நேரில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41 என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.

16

CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை
GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST
M-11/F-4, TNHB FLATS, I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR,
THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA
☎: 4900303, 4900603 Fax: (044) 4916316 E-mail: gopuradarisanam@yahoo.com

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து

இசை பாடிய செடிக்கு ஒரு துண்டு!

ஆழியார், அறிவுத் திருக்கோயிலில் (வேதாத்ரி மகரிஷி ஆஸ்ரமம்) ஆகஸ்ட் 10-15 ம் தேதிகளில் நடைபெற்ற 'அமைதி, அஹிம்சை, நல்லிணக்க உலக மாநாட்டில்' அனைவரையும் கவர்ந்த நிகழ்ச்சி - தாவரங்களின் இசை

இசையினால் உடல் நலம் பெறும்; பயிர் வளரும் என்பது நமது இசைக் கலைஞர்கள் சொல்லும் விஷயம் தான். கொஞ்சம் அறிவியல் சான்றுடன் நடத்தப்பட்டது.



இத்தாலி நாட்டின், தாமன்அர் என்ற ஊரைச் சேர்ந்த லெப்ரி வயோலா இந்நிகழ்ச்சியைச் செய்து காட்டினார்.

மேடையில் இருந்த ஒரு தொட்டிச் செடியின் இலை மற்றும் வேரில் இரண்டு கம்பிகளைப் பொருத்தினார். அவை மற்றொரு கருவியில் இணைக்கப்பட்டிருந்தன. செடியின் மின்காந்த அலைகள் இக்கருவியின் உதவியால் ஒலி அலைகளாக மாற்றப்படுகின்றன. (தொலைபேசியில் நிகழ்வது போல)

இக் கருவியில் பியானோ, புல்லாங்குழல் இரு இசைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. புல்லாங்குழல் இசை தேர்வு செய்யப்பட்டது.

செடி தனது போக்கில் இசைத்துக்கொண்டிருந்தது. நாம் அதன் மேல் அன்பு மழை பொழிவதுபோல தீவிரமான கற்பனையில் மூழ்கும்படி அரங்கில் இருந்த ஆயிரம் பேரையும் கேட்டுக்கொண்டார். அனைவரும் அந்தக் கற்பனையில் ஆழ்ந்தபோது செடியின் இசையில் ஒருவகை ஒழுங்கு ஏற்பட்டது.

லெப்ரி வயோலா தாமே ஓர் இசைக் கருவியை வாசித்தார். அந்த இசையோடு சேர்ந்து அதற்கு இணையான துணைக் குரல் போல செடியின் இசையும் ஒத்திசைந்தது.

"நம் கோப தாபங்களைத் தாவரங்கள் உணர்கின்றன. நம் எண்ணங்களை உணர்ந்துகொள்கின்றன. நமது மோசமான உணர்வுகள் அவற்றைப் பாதிக்கவும் செய்கின்றன" என்கிறார் லெப்ரி.

தாமன்அர் நகரில் அனைவரது பெயர்களிலும் ஒரு விலங்கு, தாவரம் இருக்கும். ஒரு குழந்தை பிறந்ததும் ஒரு மரத்தை நட்டு விடுவார்கள். அக்குழந்தையே அதை வளர்க்கும்படி செய்வார்கள் என்றார் லெப்ரியை அறிமுகம் செய்த முன்னாள் காவல்துறை உயர் அதிகாரி டி.ஆர். கார்த்திகேயன்.

"நம்மால் மனிதர்களின் உணர்வுகளையே புரிந்து கொள்ள முடியவில்லையே..." என்று வருத்தமும் சிரிப்பும் கலந்திட பேசிய எஸ்.கே.எம். மயிலானந்தன், லெப்ரிக்குக் கைத்தறித்துண்டு போர்த்திய கையோடு இசை பாடிய செடிக்கும் ஒரு துண்டு போட்டு அசத்திவிட்டார்.



— இரா. சோமசுந்தரம்



• வெற்றிவேல்

மறுக்கிறது தி.மு.க.!

வணக்கம். 18.8.2002 தேதியிட்ட கல்கி இதழில் அண்ணா அறிவாலய வளாகம் குறித்து மாநகராட்சி மன்ற உறுப்பினர் ஒருவர் கூறியதாக ஒரு செய்தி வெளியிடப்படுள்ளது.

தி.மு.கழக அறக்கட்டளையின் சார்பில் அண்ணா அறிவாலய வளாகத்தின் பின்புறத்தில் திருமண மண்டபம் மற்றும் அலுவலகம் கட்டுவதற்காக 1988ல் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் மூலமாக அரசாணை வெளியிடப்பட்டது. (அரசு ஆணை எண்.1100, தேதி 5.8.1988).

வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதி (DCR) களின்படி ஒதுக்கப்பட வேண்டிய 10 சதவிகித காலி இடத்தை (OSR) ஒதுக்கி, அந்த இடத்தை அண்ணா மனமகிழ் பூங்காவாக உருவாக்கி, அதை இந்த அறக்கட்டளையே பராமரிக்க வேண்டும் என்றும், ஒதுக்கப்பட்ட அந்த இடத்தில் வேறு எந்த கட்டிடமும் கட்டக்கூடாது என்றும் விதிவிலக்கு அளித்து, ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதேபோல அதே நாளில் அரசாணை எண்.1099ன் மூலமாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் அறக்கட்டளை மூலம் கட்டப்படவிருந்த காமராஜர் நினைவரங்கத்திற்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

மீண்டும் 1998ல் இந்த திருமண மண்டபத்தை மாற்றி புதியதாக பல்துறை அரங்கம் (Multi Purpose Hall) கட்டத் தீர்மானித்து சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமத்திடம் விண்ணப்பித்தபோது, பின்புறம் இருந்த இந்த திறந்தவெளி இடத்தை அண்ணா சாலையை ஒட்டி முன்புறமாக அமைத்துக் கொள்வதற்கான அனுமதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கடித எண்.45284/UdVI/97.2ன் மூலமாக வழங்கப்பட்டது. அந்த இடத்தில் அண்ணா சிலை அமைக்கப்பட்டு இன்றளவும் அது ஒரு திறந்த வெளி பூங்காவாகவே பராமரிகப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கே.எஸ்.இராதாகிருஷ்ணன்
செய்தித் தொடர்பாளர், தி.மு.க.



• இராதாகிருஷ்ணன்

மாநகராட்சி காங்கிரஸ் தலைவரும் ப்ளான் அங்கீகாரக் கமிட்டி தலைவருமான வெற்றிவேல் சொல்கிறார் :

• வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி 10 சதவீத காலி இடத்தை (OSR) ஒதுக்கி அந்த இடத்தை அண்ணா மனமகிழ் பூங்காவாக உருவாக்கி தி.மு.க. அறக்கட்டளை பராமரிக்க வேண்டும் என்றும் அந்த இடத்தில் கட்டிடம் எதுவும் கட்டக்கூடாது என்றும் விதிவிலக்கு அளித்து அரசு ஆணை 1988ல் போடப்பட்டது. ஆனால் அந்த விதிவிலக்கில் சொன்னபடி அறக்கட்டளை நடந்து கொண்டதா? திறந்த வெளி இடம் பொதுமக்கள் சென்று வர வசதியாக இருந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட இடத்தை ஒதுக்காமல் அறிவாலயத்தின் பின்புறம் இடம் ஒதுக்கப்பட்டது. மட்டுமல்லாமல் அங்கு பூங்கா எதுவும் பராமரிக்கப்படவில்லை. எனவே அரசாணை மீறப்பட்டதாகத்தான் பொருள்.

• அடுத்ததாக 1998ல் தி.மு.க. ஆட்சியின் போது இந்தத் திறந்தவெளி இடத்தை அண்ணா சாலையை ஒட்டி மாற்றி விதிவிலக்கு அளித்து அரசு உத்தரவு (கவனிக்கவும். அரசு ஆணை அல்ல) போட்டது. ஆனால் மாற்றப்பட்ட இந்த இடத்திலும் இதுவரை பூங்கா வைத்துப் பராமரிக்கப்படவில்லை. அது தவிர அந்தத் திறந்த வெளி இடத்தை 'பார்க்கிங்' இடமாகத்தான் இதுவரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இப்போது இந்தச் சர்ச்சை வந்தவுடன் அறிஞர் அண்ணா பூங்கா என்று சிறு பலகையில் எழுதி வைத்துமிருக்கிறார்கள். மொத்தம் எட்டேகால் கிரவுண்ட் நிலம் திறந்த வெளியாக இருக்க வேண்டும். ஆனால் முழுவதும் பூங்காவாகப் பராமரிக்கப்படாமல் பார்க்கிங் ஆக பயன்படுத்தப்படுகிறது என்பதே உண்மை. இது முறைகேடு. எனவே இந்த நிலத்தை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும்.

• 1998ல் திறந்த வெளி இடம் மாற்றப்பட்டபோது அரசு ஆணை போடப்பட்டிருக்க வேண்டும். கடித அனுமதி போதாது. மேலும் அரசு கடிதத்தில் 19(h)(ii)(vi) பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர 19(h)(ii)(iv) பற்றிச் சொல்ல விதிவிலக்குத் தரப்படவில்லை.

• தி.மு.க.வினருடன் பொது மேடையில் இதுபற்றி விவாதிக்கத் தயார்.



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. போன்: 276 0612.
City Office: No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன்: 371 4942.

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 180 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (180 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்

சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் (நிறுவனர்) — சுவாமி ஸ்ரீ பாலகிருஷ்ணானந்தா

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

வராதீங்க விருந்தாளி!

'எந்தக் காலத்திலே, எந்தத் தோஷத்தினால் எலும்பு சம்பந்தப்பட்ட வியாதிகள் வருகின்றன?' என்று கேட்டிருந்தோம். சரியான விடை: வாத காலத்திலே, வாயு தோஷத்தினால்...

வாதம், வாயு என்ற இரண்டும் ஒரே அர்த்தம் உள்ள சொற்களே. எலும்பு சம்பந்தமா வர்ற நோயெல்லாம் பொதுவாக வாயு தோஷத்தால் வருவது. வாயுவின் ருக்ஷம் (வறட்சி) அதிகரித்துவிட்டது என்றால், எலும்புத் தொடர்புள்ள நோய்கள் ஏற்படுகின்றன. வாத காலத்திலே, குறிப்பாகப் பெண்களுக்கு மெனோபாஸுக்குப் பிறகு, 'ஆஸ்டியோ போரோஸிஸ்' போன்ற நோய்கள் தாக்குவதன் காரணம் இதுதான்!

வாயுவுக்கும், எலும்புக்கும் சம்பந்தம் என்பது விருந்தாளி - விருந்தோம்பி (guest- host) என்பது போல. இதை ஆஸ்ரய - ஆஸ்ரயீ பாவம் என்று சொல்லலாம். ரத்தம் என்பது ஆஸ்ரயம் - பித்தம் என்பது ஆஸ்ரயீ. ரத்தத்தில் பித்த தோஷம் தாக்கும்போது ஆட்டோ இம்யூன் நோய்கள், ஹெப்பட்டைடிஸ் (மஞ்சள் காமாலை) கவுட் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

மற்ற எல்லா தாதுக்களுமே கப தாதுக்கள்தான். ரசம் கபம்தான். கொழுப்பு கபம்தான். மஸில், மஜ்ஜை, சுக்கிலம் எல்லாமே கபம்தான்.

கபத்தை உண்டாக்கக்கூடிய பால், தயிர், நெய் போன்ற பொருட்களைச் சாப்பிடும்போது, கபம் கூடி, உடம்பு பெருக்கிறது. சைனஸ், சளி, தைராய்டு (hypo) ஆஸ்துமா போன்ற பிரச்னைகள் இதனால் அதிகமாக வரும். அந்த மாதிரியான சமயத்திலே, கபத்துக்கு விரோதமான வஸ்துக்களைச் சாப்பிட வேண்டும். கபத்தை அதிகரிக்கிற மாதிரியான உணவைத் தவிர்க்க வேண்டும்.

அதேபோல, வாதம் கூடியுள்ளவர்கள், வாதத்தைக் குறைக்கிற மாதிரியான பொருட்களைச் சாப்பிட்டு, வாயுவை அதிகரிக்கச் செய்யும் பொருட்களை இனம் கண்டு கொண்டு; அவற்றைத் தவிர்க்கணும். அதே விதிமுறைதான், மற்ற தோஷ மனிதர்களுக்கும்.

சரி, நம் உடம்பிலே, எந்த தோஷம் அதிகமாக இருக்கிறது என்று தெரிந்தால்தானே அதற்கேற்ற விஷயங்களைத் தவிர்க்க முடியும்? நியாயமான சந்தேகம்தான். இயற்கையிலேயே வாத பிரக்ருதி, கப பிரக்ருதி, பித்த பிரக்ருதி, யார் யார் - என்னென்ன உடல்தன்மை, மன இயல்பு பெற்றிருப்பார்கள் எனத் தெரிந்து கொள்ளலாம்.

'பிரக்ருதி' என்றால் மனிதனுடைய உடல், மனக்கூறு என்று பொருள். (mindbody type - personality)

கர்ப்பத்திலிருக்கும்போதே, ஒருவருடைய உடல், மனத்தன்மை இரண்டுமே (personality) எப்படி என்பது வாத, பித்த, கப அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது. சிலர் வாதப் பிரக்ருதியாகவும், சிலர் பித்த பிரக்ருதியாகவும், சிலர் கப பிரக்ருதியாகவும் இருப்பார்கள். அது மட்டுமல்ல, இன்னும் சிலருக்கு வாத பித்தம், பித்த கபம், வாத கபம் என்று இணைந்தும் இருக்கலாம்.

இந்த மாதிரியான சேர்க்கை (combination) கர்ப்பத்தின் போதே உருவாகிவிடும். வாழ்க்கையில் எத்தனையோ விஷ

டாக்டர்
எல். மகாதேவன்



தேவ மருந்து - 3

ஒரு திருத்தம்...

கிரியா சக்தி வாதமாகவும் (பிரம்மா), இச்சா சக்தி பித்தமாகவும் (சிவன்), ஞானசக்தி கபமாகவும் (விஷ்) நமது உடலில் காணப்படுகிறது என்பதே சரி.

- டாக்டர் எல். மகாதேவன்



யங்கள் வந்து போனாலும், இந்த அடிப்படைத் தன்மை (பிரக்ருதி) மாறவே மாறாது.

இந்த பிரக்ருதி ஒவ்வொருவருக்கும் இயற்கையாகவே அமைந்தது. அது நோயல்ல! வாத பிரக்ருதி என்றால் மூட்டு வாதம் இயல்பிலேயே உள்ளது என்று நினைக்கக் கூடாது.

மூன்று தத்துவங்களில் ஒன்றான வாதம் மனித மனத்திலும் உடலிலும் நிலை பெற்று, அவனை இயக்கி வருகிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். இது போலவே மற்ற பிரக்ருதிகளும்.

மருத்துவப் பரிசோதனையின்போது, என்னவிதமான பிரக்ருதி என்பதைக் கண்டுபிடிக்கலாம். இது நோய் வரும்போது கண்டுபிடிக்கப்படுவதல்ல. நோய் வந்தால் அது விக்ருதி (மாற்றம்) ஆகிவிடும்.

'பிரக்ருதி' என்ற சொல்லுக்கு ஸ்வபாவம், இயற்கை, மூல காரணம், மாற்ற முடியாதது என்றெல்லாம் பொதுவான அர்த்தங்கள் உண்டு. வேதம் முதலிய சாஸ்திரங்களிலும் ஆயுர்வேதத்திலும் இதைப் பற்றிய குறிப்புகளைக் காணலாம்.

உடலின் ஆரோக்கியத்தைக் காக்கவும், நோய்களைப் போக்கவும், பிரக்ருதியைப் பற்றிய அறிவு உதவுகிறது. எந்தத் தோஷம் மிகுதியோ, அது போல, பிரக்ருதி அமைகிறது.

அடுத்த வாரம் 'வாத பிரக்ருதி'யைப் பற்றிப் பார்ப்போம்.

வாயுவின் தன்மை எப்படிப்பட்டது? எந்தவிதமான உருவ, மனக்கூறு கொண்டவர்களாக இருப்பார்கள்? செயல்திறன் எப்படி? வாதப் பிரக்ருதிகள் ஒதுக்க வேண்டியவை என்னென்ன? உண்ண வேண்டியவை என்னென்ன? வாதப் பிரக்ருதிக்கு எப்படிப்பட்ட நோய்கள் ஏற்படும்? அந்த நோய்களை எப்படி குணமாக்குவது... இதெல்லாம்தானே உங்கள் சந்தேகங்கள்! எல்லாமே விரிவாகத் தீர்த்து வைக்கப்படும்.

இந்த வார மருத்துவக் கேள்வி:

உடல்மனக் கூறு 'minds body' டைப்னு சொல்றதை, ஆயுர்வேதம் என்னவென்று குறிக்கிறது?

தேவமருந்து -3

வினா: நம்முடைய உடலில் எத்தனைத் தாதுக்கள் உள்ளன? விடை: ஏழு

சரியான விடையை, விரைவாக எழுதி அமரர் கல்கி புத்தகங்களைப் பரிசாகப் பெறுபவர்கள்:

வி. சூடாமணி, தாராபுரம் போஸ்ட், ஓமலூர் தாலுக்கா, சேலம் மாவட்டம்.

சுலோசனா ரமணி, 72(30) வெங்கட கிருஷ்ண சாலை, ஆர்.ஏ.புரம், சென்னை - 28.

இந்திரா பத்மநாபன், 19, தேவராய நகர், திருச்சி - 620021

எம்.எஸ்.பி. காசிவிஸ்வநாதன், லக்ஷ்மி நிவாஸ், 275 அம்பேத்கார் சாலை, வேலாண்டிபாளையம், கோவை 641025.

டி.டீ. சண்முகம், 1/1, விநாயகர் காலனி, தேன்பழனி நகர், கொளத்தூர், சென்னை - 99.

புற்றுநோய்க்கு உதவிய ஜெட் விமானம்!

புற்றுநோய் என்பது என்ன? எளிமையாகச் சொல்வதானால் விபரீதப் பெருக்கம் அடைந்த உயிரணுக்கள்தான். இவற்றைச் சுலபமாக நுண்நோக்கியில் பார்க்க முடியும். ஆனால் அவற்றை நுண்நோக்கிக்கு எடுத்துச் செல்வதுதான் அவஸ்தையானது.

முதலில் புற்றுநோய் இருக்கிறதோ என்று சந்தேகப்படும் உடல் பகுதியிலிருந்து கொஞ்சம் திசுக்களை எடுத்து "பயாப்ஸி" எனப்படும் சோதனைக்கு அனுப்ப வேண்டும். பரிசோதனைச்சாலையில் நுண்நோக்கியின் மூலம் அதைச் சோதித்துப் புற்றுநோய் தோன்றிவிட்டதா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பார்கள்.


உயிரணுக்களை எடுத்து நுண்ணோக்கிக்குக் கொண்டு செல்வதற்குப் பதிலாக நேரெதிராகச் செயல்பட முடிந்தால் அது எவ்வளவு சௌகரியம்! அதாவது நுண்நோக்கியை அந்த உயிரணுக்களுக்கு அருகில் எடுத்துவந்து ஆராயமுடிந்தால்?

இதற்கும் வழிபிறந்துவிட்டது. அதுவும் மருத்துவத்துக்கு நேரடி சம்பந்தமில்லாத வேறொரு ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கும் போது இந்த வழி பிறந்தது தான் வியப்பு! ஜெட் என்ஜின்களின் உட்புறம் ஏதாவது மிக மெலிதான விரிசல் உள்ளதா என்பதைக் கண்டுபிடிக்க ஒரு கருவி உருவாக்கப்பட்டது. 'மிகவும் சக்தி வாய்ந்த இந்தக் கருவியைக் கொண்டு வாய்ப் புற்றுநோய் உள்ளதா என்பதைக் கண்டுபிடிக்க முடிந்தால்?'

இப்படி யோசித்த ஒரு மருத்துவர், இது குறித்துத் தீவிரமான ஆராய்ச்சியில் ஈடுபட்டார். வெற்றி கிடைத்தது. மேலும் யோசிக்க, இந்தக் கருவியில் வேறு சில மாறுதல்களைச் செய்துவிட்டால் தொண்டைப் புற்றுநோய், கழுத்துப் பகுதியில் தோன்றும் புற்றுநோய் மற்றும் ஆசனவாய்ப் புற்றுநோய் ஆகியவற்றைக் கூட தொடக்க நிலையிலேயே கண்டுபிடித்துவிடலாம் என்பது புரிந்தது.

ஒரு விதத்தில் பார்க்கப் போனால் பல காலமாக புழக்கத்திலிருக்கும் "என்டோஸ்கோப்பி" என்ற சோதனையின் மறுவடிவம்தான் இதுவும். என்டோஸ்கோப்பி கருவியின் முனையில் ஒரு நுண்ணிய புகைப்படக் கருவி இணைக்கப்பட்டிருக்கும் என்றால், புற்றுநோயைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தப்படும் புதிய கருவியின் நுனியில் நுண்நோக்கி பொருத்தப்பட்டிருக்கிறது. இது பொருட்களை ஐந்நூறு மடங்கு பெரிதுபடுத்திக்காட்டும் சக்தி கொண்டதாம்.

இதன்மூலம் பரிசோதிக்கும்போதே ஒரு நிபுணரால் புற்றுநோய் உண்டா இல்லையா என்பதைப் பற்றி ஒரு முடிவுக்கு வர முடியும். தவிர இதன் கண்டுபிடிப்புகள் கம்ப்யூட்டர் கருவி ஒன்றிலும் பதிவு செய்யத்தக்கவையாக இருக்கும். கணினித் திரையிலிருந்து உயிரணுக்கள் பாதிக்கப்பட்டுள்ளவையா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்கலாம். டெக்ஸாஸ் மருத்துவமனையில் 133 நோயாளிகளுக்கு இந்தக் கருவியைப் பயன்படுத்தி புற்றுநோய் உண்டா இல்லையா என்பதைச் சோதித்திருக்கிறார்கள். (பிறகு வழக்கமான முறையில் பயாப்ஸியின் மூலமும் அவர்களைச் சோதித்ததும்) நூறு சதவீதம் சரியாகவே முடிவுகள் அமைந்தது தெரிய வந்திருக்கிறது.



— ஜி.எஸ்.எஸ்.



சிறுநீரக கோளாறுக்கு சிறந்தது தெய்வீக மூலிகை மருத்துவம்




சிறுநீரகம் என்பது நமது உடலின் மிக முக்கியமான ஒரு கழிவு நீக்க உறுப்பாகும். இது நம் உடலின் இடுப்புக்கு சற்று மேலே முதுகெலும்பின் இருபுறமும் பக்கத்திற்கு ஒன்றாக (இடது வலது) அமைந்துள்ளது. இவைகள் ஒவ்வொன்றிலும் சுமார் 10 லட்சம் நெப்ரான்கள் என்னும் நுண்ணிய வடிகுழல்கள் உள்ளது. இந்த நெப்ரான்கள்தான் சிறுநீரகத்தில் பணிபுரியும் முக்கிய திசு ஆகும். உடலிலுள்ள இரத்தம், சிறுநீரகத்தில் உள்ள நெப்ரான்களின் வழியே செல்லும்போது, உடலுக்கு தேவையான நீர், திட, திரவ பொருட்களை உறிஞ்சிக் கொண்டு, தேவையற்ற கழிவுப் பொருட்களை சிறுநீர் குழாய் மூலம் சிறுநீராக வெளியேற்றப்படுகின்றன. சிறுநீரகங்கள் பழுதடையும்போது, யூரியா, கிரியேட்டினின், சோடியம், பொட்டாசியம், நீர் போன்ற கழிவுப் பொருட்கள் இரத்தத்தில் அதிகமாகின்றன. இதனை செயற்கை முறையில் இரத்த சுத்திகரிப்பு செய்தல் (Dialysis) மற்றும் சிறுநீரகமாற்று அறுவை சிகிச்சை (Kidney Transplantation) போன்றவை செய்யும் நிலை ஏற்பட்டு இறுதியில் உயிரிழக்கும் நிலை ஏற்படுகிறது.

சிறுநீரக கோளாறின் அறிகுறிகள் : இரத்த சோகையினால் வெளிறிப்போன முகம். 2 கைகால், முகம், வயிறு போன்றன வீங்கி முற்றிய நிலையில், நுரையீரல், இதயம் போன்ற முக்கிய உறுப்புகளை பாதிக்கின்றது. இதனால், மூச்சுத் திணறல், நெஞ்சுவலி, சளி, இருமல், பலஹீனம் போன்றவை தோன்றும். 3. சிறுநீர் போகும் போது எரிச்சல், மேலும் சிறுநீர் காப்பி கலரில் இருக்கும். அடிக்கடி இரவில் சிறுநீர் கழிக்க தோன்றும். 4. கண்ணின் கீழ் ஒரு சிறு பை போல் வீங்கி இருக்கும். 5. கீழ் முதுகில் வலியெடுக்கும். 6. யூரியா, கிரியேட்டினின், சோடியம், பொட்டாசியம் போன்றன இரத்தத்தில் அதிகமாக காணப்படும்.

சிறுநீரகம் செயல் இழப்பின் காரணங்கள் : சர்க்கரை வியாதிதான் முதல் முக்கிய காரணம் ஆகும். கட்டுப்படுத்தப்படாத உயர் இரத்த அழுத்தம், எய்ட்ஸ் நோய் கிருமியான எச்ஐவி வைரஸ் மற்றும் மஞ்சள் காமாலையின் வைரஸ் 'பி'யும் தொற்றாலும், இரத்த சோகை, சிறுநீரக கற்கள், மூட்டுக்கள், இணைப்புத் திசுக்களை பாதிக்கும் நோய்களாலும் அதிக வயிற்றுப் போக்கு, வாந்தி, சிறுநீர் குழாயில் ஏற்படும் தசை சுருக்கம், கற்கள், கட்டிகள், புற்று நோய் போன்றவற்றாலும் அடைப்புகள் ஏற்பட்டு சிறுநீரகம் பழுதாகலாம். மேலும் மற்ற நோய்களுக்காக எடுக்கப்படும் இரசாயன மாத்திரைகள், அதிகமான மாமிச உணவுகள் பாம்பின் விஷம், தீக்காயம், மின்சார தாக்குதல் போன்றவற்றால் சிறுநீரகம் பாதிக்கலாம்.

சிறுநீரகம் நன்றாக செயல்பட தேவையான தெய்வீக மூலிகைகள் : சக்திக்குரிய வேப்பிலை, வில்வம், அத்தி, அருகம்புல், துளசி, ஆடாதொடா, தூதுவளை, வாழைத்தண்டு, தும்பை, நெல்லி, கீழாநெல்லி, முருங்கை, வல்லாரை, ஆவாரம்பூ, வெந்தியம், கரிசலங்கண்ணி, மாவிலை, நாவல் - ஆகியவைகளை எடுத்து வந்து வெய்யிலில் உலர்த்தி பொடி செய்து பின், சம அளவில் ஒன்றாக கலந்து ஒரு பாட்டலில் வைத்துக் கொள்ளவும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு முன் தினமும் காலை, மாலை உட்கொள்ளவும். இவைகள் சிறுநீரகங்களுக்கு சக்தியை தருகின்றன. தேய்ந்த பாகங்களை புதுப்பிக்கின்றது. நோய் தொற்றுகளில் இருந்தும் பாதுகாக்கின்றது. இதனால் கிட்னி வழக்கம் போல் செயல்பட இம் மூலிகைகள் பெரிதும் துணை புரிகின்றன.

இயற்கை உணவுகள் : தினம் ஏதேனும் ஒரு வேளை இயற்கை உணவாகிய பச்சையாக சாப்பிடும் காய்கள், பழங்கள், பழ ஜூஸ்கள், சாலட்ஸ் (Salads) போன்றவற்றை உணவாக உட்கொள்ள வேண்டும். காரணம் இதில் உள்ள சக்திகளை உடல் எளிதில் பெறுகின்றன. மேலும் கழிவுகள் குறைவு. ஆகவே கிட்னிக்கு வேலை பளு குறைகின்றது. கிட்னி நன்கு செயல்பட இயற்கை உணவு உதவுகிறது. குறிப்பாக அன்னாசி, பேரிட்சை, பப்பாளி, கொய்யா, அத்திபழம், நாவல், ஆரஞ்சு, மாதுளை, கேரட், வெண்டை, வெள்ளரிக்காய், பேரிக்காய், இளநீர், கரும்புசாறு, வாழைத்தண்டு, முள்ளங்கி போன்றன உட்கொள்ளலாம். மற்ற இரண்டு நேரம் சாதாரண சைவ உணவு உப்பில்லாமல் அரை வயிறு ஆகாரம் உட்கொள்ளலாம். மேலும் வாரம் ஒரு நாள் உண்ணா நோன்பும், தினம் காலை, மாலை எளிய உடற்பயிற்சிகளும் மேற்கொண்டால், சிறுநீரக பாதிப்பில் இருந்து படிப்படியாக முற்றிலும் குணம் பெறலாம்.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள் **Chennai Cell : 98410 45138**

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B.No:30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) - 635 601 ✆ 04179-20469, 22769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7

✆ 6424285, 6427638

குறிப்பு : சென்னை, வேலூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெங்களூர், ஒசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைப்பேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம் - விபரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

தகவல் : டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 27 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.70/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

7 & 8ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011539, 4063379

18 & 19ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, : 5717126, 5723651

9ந் தேதி - பெங்களூர் : காலை 11 to மாலை 1 மணி வரை, ஹோட்டல் பிரட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பேகவுடா ரோடு. : ✆ 080-2266374, 2873013

ஊர்ச் சொல்லி

> “அவசரமான சேதி சாத்தப்பா... அம்மாவுக்கு உடம்பு முடியலை... ரொம்ப நாளாவே சீக்கா கிடக்கிறதுதான். இன்னைக்கு நிலைமை மோசம். டாக்டருங்க முடியாதுன்னுட்டாங்க...”

சாத்தப்பனுக்கு எரிச்சலாக வந்தது. வேலையில்லாமல் வெறுமனே உட்கார்ந்திருப்பதற்கு என்னவோ போலிருந்தது. மச்சான் ஊரில் இல்லை. ஆரியச்சேரி சென்று விட்டார். அவன் அம்மாவுக்கு உடல் நிலைசரியில்லை. திரும்ப இரவாகும். அதுவரை மில்லுக்குச் சாத்தப்பன்தான் பொறுப்பு. திறக்காமல் இருந்தால் பரவாயில்லை. எங்காவது ஊர் சுற்றிக் கொண்டிருக்கலாம். வீட்டில் படுத்துக் கொண்டு மல்லியை வம்புக்கு இழுத்துக் கொண்டு இருக்கலாம். இது தெரிந்துதானோ என்னவோ மில்லை திறந்து வைத்து விட்டுச் சென்று விட்டான். மழை வேறு கொட்டிக் கொண்டிருந்தது. அடங்காமல் விசிறி விசிறி அடித்துக் கொண்டிருந்தது.

"என்னடா சாத்தப்பா...? நாலூர்ல கல்யாண அரவை ஒண்ணு இருக்கு... முடியுமா?" மாரியப்பன் கேட்டான்.

"த்ரீ பேஸ் வராது போலிருக்கே... சாயங்காலம் வந்து பாருங்க... எதுக்கும் குடவாசல் கொண்டு போயிடறது நல்லது" என்றான்.

ஒரு வாரமாக மின்சாரப் பிரச்னை. ஆறு மாதங்களுக்குப் பின் இப்போது த்ரீ பேஸ் கரெண்ட் அடிக்கடி நிறுத்தப் படுகிறது. காலை பத்து மணி தொடங்கி மதியம் மூன்று மணி வரை பாய்ந்து கொண்டிருந்த மின்சாரம் எட்டு நாட்களாக அவுட். மில் ஓடவில்லை. வருமானம் இல்லை.

'ஒரு வாரமா பெயற மழையில் நிறைய இடத்துல கேபிள் அறுந்துட்டு. ரெண்டு நாள்ல சரியாயிடும்' லோக்கல் மின் அலுவலகத்தில் காரணம் சொன்னார்கள். ஆனால் பிரச்னை அதுவல்ல. சமீபத்தில் ஊருக்குள் போடப்பட்ட டிரான்ஸ்ஃபார்மரில் பிரச்னை. அது தீர்க்கப்படும் வரை கரெண்ட் மக்கர் செய்து கொண்டுதானிருக்கும். அவன் மச்சான் முருகேசனுக்கு இதுதான் வருமானம். வேறில்லை.

“**இ**த மட்டுமே நம்பிக்கிட்டு இருந்தா எப்படி? வேற வேலை பார்க்கணும். கரெண்ட்ட நம்பி பொழைக்க முடியாது. சேங்காலிபுரம் பிரஸிடெண்ட்கிட்ட கேட்டுப் பாரு. ஏதாச்சும் வேலை கொடுப்பாரு."

திருவாரூர் பாபு



மல்லி இரண்டு முறை கூறி விட்டாள். அவனுக்கு என்னவோ போலிருந்தது. முன்பு அவன் வேலை பார்த்த இடம். சாத்தப்பனின் உடல் உழைப்பு சேங்காலிபுரம் பிரஸிடெண்ட் கண்ணன் வீட்டில்தான் தொடங்கியது. தோட்ட



வேலை பார்ப்பான். தென்னை மரம் ஏறுவான். மாடு கன்று பராமரிப்பான். ஊர் சொல்லத் தொடங்கிய பிறகு பிரஸிடெண்ட் வீட்டுக்குச் செல்வது குறைந்தது. பிறகு அறவே நின்று போனது. இப்போது மீண்டும் கண்ணனிடம் சென்றால் வேலை கொடுப்பாரா? அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. அதனாலேயே போகாமல் தவிர்த்தான்.

பல வேலைகள் பார்த்தாலும், ஊர்ச் சொல்லியாக இருந்த திருப்தி எதிலும் அவனுக்குக் கிடைக்கவில்லை. அது ஒரு தனி சந்தோஷம். நல்ல அனுபவம். எத்தனை பேரோடு பழக்கம் கிடைத்தது? கும்பகோணம் தாலுகாவில் உள்ள அத்தனைக் குக்கிராமங்களும் அவனுக்கு அத்துப்படி. எவ்வளவு நல்ல கெட்டச் செய்திகள் அவன் வாய் மூலம் குடவாசல் யூனியன் முழுக்கச் சென்றிருக்கிறது?

கண்ணனின் ஆத்தா இறந்து போன போது தான் முதன்முதலாக சாத்தப்பன் ஊர் சொன்னான்.

"சாத்தப்பா... அந்தப் பயலை காணும். நாலு நாளாவே இந்தப் பக்கம் தென்படலை. ஊரோட போயிட்டான்னு நினைக்கிறேன். வயசான பொணம். வச்சிருக்க முடியாது. விடிகாலையில் எடுத்தாகணும். ஒரு ரவுண்ட் போயிட்டு வர்றியா? முப்பது வீடு வரும். எல்லாம் குடவாசலைச் சுத்திதான். விடியறதுக்குள்ள சொல்லிட்டா, முத பஸ்ஸை புடிச்சு எல்லாரும் வந்துடுவாங்க. ஒன்பது மணிக்கு எடுத்திடலாம்" கண்ணன் கேட்டார்.

"இதென்னங்கய்யா... போயிட்டு வர்றேன்."

அடுத்த ஐந்து நிமிடத்தில் ஒரு ஓட்டை சைக்கிள் சாத்தப்பன் வசம் வந்தது. யார் யாருக்குச் சொல்ல வேண்டும் என்கிற பெயர் அடங்கிய லிஸ்ட் கொடுக்கப்பட்டது. செலவுக்குப் பத்து ரூபாய் பணம். இரவு பத்து மணிக்குச் சேங்காலிபுரத்திலிருந்து சாத்தப்பன் சைக்கிள் பயணத்தைத் தொடங்கினான்.

ஆறு வருடங்கள் அந்தப் பயணம் தொடர்ந்தது. சேங்காலிபுரம் மற்றும் அதன் சுற்றுப்பட்டு இருபது கிராமங்களுக்குச் சாத்தப்பன்தான் ஊர்ச் சொல்லி.

"சாத்தப்பா... பெரிய வூட்டுப் பொண்ணு

பிரசவத்துல போயிட்டு... ஊர்ச் சொல்லிட்டு வா... இதுல அட்ரஸூம்... செலவுக்குப் பணமும் இருக்கு. சாயங்காலத்துக்குள்ள சொல்லிட்டுத் திரும்பிரு."

அதிகாலையில் வீட்டு வாசலில் வந்து உத்தரவு போடுவார்கள். லிஸ்டை ஒரு தடவை படிப்பான். எந்த ஊர் வழியாகச் செல்ல வேண்டும் என்று வரிசைப்படுத்துவான். அடுத்த பத்தாவது நிமிடம் சாத்தப்பன் சைக்கிளில் ஏறி விடுவான்.

அவனது சைக்கிள் ஊருக்குள் நுழைந்தாலே சாவு செய்தி வருகிறது என்று அர்த்தம்.

"என்ன சாத்தப்பா... யார் வீட்டுல எழவு?"

"நம்ம கோனார் பையன்... ஹார்ட் அட்டாக்."

"அடடா... சீக்கிரமா போ... பொன்னையன் வீட்டுலதான் இருப்பான்.... வழியில பார்த்தா நானும் சொல்றேன்."

சாத்தப்பனுக்கு எந்த வீட்டிலும் வரவேற்பு இருக்காது. மரியாதையும் கிடைக்காது. சாவு செய்தி எழுதப்பட்ட பேப்பரைக் கை நடுங்க வாங்கிப் படிப்பார்கள். அடுத்த கணம் செய்தியின் தாக்கத்தைப் பொறுத்து, செத்துப் போனவர்களின் உறவு முறை பொறுத்து அழுவார்கள். கதறுவார்கள். மயக்கம் போட்டு விழுவார்கள். அருகருகே சொந்தக்காரர்கள் வீடு இருந்தால் நொடியில் செய்தி போகும். ஒரு வீட்டில் கூடி, பெண்கள் கட்டிப்பிடித்து ஒப்பாரி வைப்பார்கள்.

இந்த ஒப்பாரியில் சமயத்தில் சாத்தப்பனைக் கண்டு கொள்ள மாட்டார்கள். அமைதியாகச் சில நிமிடங்கள் நின்று விட்டு வெறுங்கையோடு திரும்ப வேண்டும். அடுத்த ஊருக்குச் செல்ல வேண்டும்.

சில இடங்களில் ராஜ உபசாரம் நடக்கும்.

"அப்பாடா கிழவி போய்ச் சேர்ந்துட்டா... எண்பத்தைஞ்சு வயசுல மருமகக்காரியை நசுக்கி வச்சா.. எப்படா போய்ச் சேருவ்னு நானும் நாலு வருஷமா எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன்... ஒரு வழியா போயிட்டா... உள்ள வந்து உட்காருடா... ஏய்.. யாருடி அங்கே... பலகாரம் காப்பித்தண்ணி கொண்டு வாங்கடி."

சாத்தப்பனுக்கு உபசரிப்பு தூள் பறக்கும். வயிறு முட்டச் சாப்பிடுவான். சைக்கிள் வாடகையாக இரண்டு ரூபாயும் செய்தி சொன்னதற்குக் கூலியாக ஐந்து ரூபாயும் கிடைக்கும்.

சில நேரங்களில் பை கொள்ளாமல் சில்லறை தேறியதுண்டு. நூறு நூற்றைம்பது என கூலி வசூலாகி அவனைத் திகைக்க வைத்ததுண்டு. புத்தம் புது சைக்கிள் கிடைத்ததும் உண்டு.

"ஐயா... உங்க பேத்தி வயசுக்கு வந்துட்டுங்க."

செல்வராஜ் செட்டியார் ஈஸிசேரிலிருந்து நிமிர்ந்து உட்கார்ந்தார். "அமாவாசை அதுவுமா நல்ல செய்தி கொண்டு வந்திருக்கே... எத்தினி மணிக்கு?"


"ஆறு மணி இருபது நிமிஷத்துக்குங்க."

"யப்பா... தம்பி... உம்பேரு என்ன?

"சாத்தப்பனுங்க."

"சாத்தப்பா... மேலத் தெருவுக்குப் போ... ஜோசியர் இருப்பாரு... கையோட கூட்டிக்கிட்டு வா.."

"ஐயா... சைக்கிள் பஞ்சருங்க.. இங்கேயே கிடக்கட்டும்... நான்



நடந்து போயிட்டு வரேங்க."

"நடந்தா... லேட்டாகும்... இந்த சைக்கிளை எடுத்துக்கிட்டு போ."

திண்ணை மேல் கிடந்த புத்தம் புது சைக்கிளை இறக்கிக் கொடுத்தார்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் ஜோஸியரை அழைத்துக் கொண்டு வந்தான். கட்டிப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார்.

நம்மைக் கண்டு கொள்ளாமல் போய் விட்டாரே... என்று சாத்தப்பன் தவிப்போடு அமர்ந்திருக்க... அரை மணி நேரத்தில் ஜோசியரைத் தோளில் அணைத்தபடி வெளியே வந்தார் செட்டியார். முகத்தில் நிலை கொள்ளா சந்தோஷம்.

"ராஜயோகமாம் தம்பி... நல்ல சேதி கொண்டு வந்திருக்கே... உட்காரு.. சாப்பிட்டுட்டுப் போகலாம்" என்றார்.

உட்கார்ந்தான். திண்ணையில் இலை போட்டு, கோழிக் குழம்பு பரிமாறினாள் செட்டியார் மனைவி. வயிறு முட்ட தின்றான். ஒதுங்கி உட்கார்ந்து ஏப்பம் விட்டான். இலேசாகக் கண்ணயர்ந்து எழுந்தபோது செட்டியார் அவனை அருகில் அழைத்து சைக்கிள் சாவியை உள்ளங்கையில் வைத்தார்.

"ஐயா... எனக்கா?" சாத்தப்பன் அவரை விழி விரிய பார்த்தான்.

இப்போது சாத்தப்பனிடம் இருக்கும் சைக்கிள் அந்தச் சைக்கிள்தான். தினம் துடைத்து துடைத்து இன்னும் புதுசாக வைத்திருக்கிறான். எத்தனை கிலோ மீட்டர் வேண்டுமானாலும் மிதிக்கலாம். வழுக்கிக் கொண்டு ஓடும். ஆனால் அதற்கு வேலைதான் இல்லை.

காலம் மாறிப் போய் விட்டது. கிராமத்தில் ஒரே ஒரு வீட்டில் தொலைபேசி இருந்த நிலை மாறி இப்போது கிட்டத்தட்ட எல்லார் வீட்டிலும் இருக்கிறது. நொடியில் தகவல் பறக்கிறது. சாவுச் செய்திகள் யாராவது ஒருத்தர் வீட்டுக்கு வந்து விடுகிறது. அடுத்த சில நிமிடங்களில் போக வேண்டியவர்களுக்குப் போய் விடுகிறது. சாவு செய்தி சொல்வதில் யாரும் எதையும் எதிர்பார்ப்பதில்லை. விரோதிகள், பிடிக்காதவர்கள் கூட வீட்டுக்குக் ஆளனுப்பி, சொல்லி விடுகிறார்கள்.

"காலம் மாறிப் போச்சுடா சாத்தப்பா.. அஞ்சே நிமிஷம் குஞ்சம்மா செத்த செய்திய எல்லாருக்கும் சொல்லிட்டேன்.. முன்ன மாதிரி உன்னைத் தேடி வர வேண்டியதில்லை.."

சாத்தப்பனுக்கு ஆறுதல் சொன்னார்கள். ஐந்து வருடங்கள் அவன் பார்த்த வேலைக்கு, ஊர் ஊராக அலைந்த வேலைக்குக் கொஞ்சம் கொஞ்சமாக முற்றுப் புள்ளி வைத்தார்கள்.

இதைப் படிங்க!

மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு,

வணக்கம்.

சமீபத்தில் உண்மையில் நடந்த நிகழ்ச்சி இது. கல்கி வாசகர்களுக்கு (ஒரு பாடமாக) தெரிய வேண்டும் என்பதற்காக எழுதுகிறேன்.



எங்கள் நண்பரின் மகன், பிலானியில் பொறியியல் பட்டப்படிப்பு படிக்கும் மாணவன். சமீபத்தில் தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயிலில் பிலானிக்குப் புறப்பட்டான்.

ரயிலில் மதிய உணவு முடித்துக் கொண்டு, பெட்டியிலுள்ள வாஷ்பேசினில் கை கழுவிக் கொண்டிருந்தான். அப்போது சட்டென்று ரயிலில் ஓர் அதிர்வு! கண் இமைக்கும் நேரத்தில் கை கழுவிக் கொண்டிருந்த பையன், திறந்திருந்த கதவின் வழியே தூக்கி எறியப்பட..... அப்புறம் என்ன?

யாரோ நல் இதயம் படைத்தவர் ரயிலை அபாயச் சங்கிலி பிடித்து இழுத்து நிறுத்த, தண்டவாளத்திற்கும் தடுப்புச் சுவருக்கும் இடையிலிருந்து ஓர் இளம் மாணவனின் உயிரற்ற சிதைந்த உடல் எடுக்கப்பட்டது.

நாமேகூட ரயிலில் பயணம் செய்யும்போது பாத்ரூம் பக்கம் நடந்து போவோம்; பல் துலக்க, கை கழுவ என்று பத்து முறை போவோம்... ரயிலின் கதவுகள் திறந்திருப்பின் அதை மூட வேண்டும் என்ற எண்ணம் நம்மில் எத்தனைப் பேருக்கு எழுந்துள்ளது? அந்தப் பொது அறிவு நம்மில் எத்தனை பேருக்கு உள்ளது? சிந்தித்துப் பாருங்கள்... பத்து வயது சிறுவர் சிறுமியர் கூட பலமுறை நடந்து சென்று வருகிறார்கள்... நாமும் பார்க்கிறோம். ரயிலின் எல்லா கதவுகளும் சாத்திய பின்புதான் ரயில் கிளம்ப வேண்டும் என்ற செயல் முறை ஏற்படுத்தப்பட வேண்டும். தவிர, நம் எல்லோருக்குமே பொறுப்புணர்வு ஏற்பட்டு, நம்மால் இயன்ற அளவில், சிறு சிறு ஏற்பாடுகளை நாமே செய்து கொண்டால் இது போன்ற மாபெரும், பேரிழப்புக்களைத் தடுக்கலாம்.

— லக்ஷ்மி நடராஜன்
சங்கரா மருத்துவமனை, திருப்பூர்.

வருமானம் இல்லாததால் சாத்தப்பனுக்கு வருத்தமில்லை. பல ஊர் பயணம் இல்லாது போனதுதான் மனசுக்குள் வேதனையை ஏற்படுத்தியது.

செம்மண் சாலையில் சைக்கிளைக் கால் வலிக்க மிதித்துச் செல்வது அவனுக்குப் பிடித்த அனுபவம். டீ கடை டீ கடையாக ஸ்டிராங் காக டீ குடித்து வடை பலகாரங்கள் சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் அக்கப்போர். பேசிக் கொண்டிருந்துவிட்டு பிடியைப் பற்ற வைத்த படி சைக்கிளை ஓட்டிக் கொண்டு செல்வதை அவன் திருப்தியாகச் செய்தான்.

துக்கமோ, சந்தோஷமோ ஒரு செய்தி பரி மாற்றத்தில் அவனுக்கு நிறைவு இருந்தது. அது இல்லாததால் ஒரு வெறுமை படர்ந்தது. அதற் குப் பின் அவன் பார்த்த எந்த வேலையும் சந் தோஷத்தை ஏற்படுத்தவில்லை. மன நிறைவை கொடுக்கவில்லை.

"இந்தா... வேலை வெட்டி இல்லாம உட் கார்ந்திருந்தா... அடுப்பு புகையாது... அண்ணன் மில்லு போடப் போகுது... உன்னைக் கூட மாட வச்சிக்க சொல்லியிருக்கேன்... கொடுக்கறத வாங்கிக்கிட்டு வேலையப் பாரு.. ரெண்டு பேரு வயிறு கழுவுறதுக்கு அண்ணன் சம்பளம் கொடுத்திடும், என்ன?"

பிரச்னை இல்லாமல் சாத்தப்பனால் வயிறு கழுவ முடிந்தது. ஆனால் மனசுக்குள் ஒரு வெறுமை மட்டும் அறுத்துக் கொண்டே யிருந்தது.

மழை வலுத்தது.
இரவு விடாது போல் தெரிந்தது



வீட்டுக்குப் புறப்படலாமா? சாத்தப்பன் யோசித்தான். மில்லைப் பூட்டுவதற்கு அவன் தயாரானபோது, அந்த மோட்டார் சைக்கிள் வாசலில் வந்து நின்றது.

"சாத்தப்பா..." என்றபடி, பெரிய வீட்டுப் பையன் பைக்கிலிருந்து கீழே இறங்கினான்.

"ஐயா..."

"அவசரமான சேதி சாத்தப்பா... அம்மாவுக்கு உடம்பு ரொம்ப முடியலை... ரொம்ப நாளாவே சீக்கா கிடக்கிறதுதான். இன்னைக்கு நிலைமை மோசம். டாக்டருங்க முடியாதுன்னுட்டாங்க... ஃபோன் வேலை செய்யலை. மழையில கேபிள் அறுந்துட் டாம்... அம்மாவுக்கு அரசனூர், அம்மனூர், கருக்காபட்டி இங்கெல்லாம் நெருங்கின சொந்தம் உண்டு.. உயிர் விடறப்ப அவங் கெல்லாம் இருந்தா நல்லாருக்கும்... கல்யாணச் சாவு... உற்றார் உறவோட உயிர் போகட் டுமே... ஊர் சொல்லிட்டு வர முடியுமா?" கெஞ்சும் குரலில் கேட்டான்.

சாத்தப்பன் உடம்புக்குள் உற்சாக ரத்தம் பாய்ந்தது.

"போறங்கய்யா..."

"எங்க முடியாதுன்னு சொல்லிடு வியோன்னு பயந்துகிட்டே இருந்தேன்... மனுஷன் தான் நிரந்தர நம்பிக்கை... மிஷினை யெல்லாம் நம்ப முடியாது. இதுல லிஸ்ட் இருக்கு... இந்தா... இதை செலவுக்கு வச்சுக்கோ."

புத்தம் புதிய நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்தார்.

வாங்கி, சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.

"மழை இப்படி கொட்டுதே... என்ன பண்ணுவே...?"

"வைரம் பாஞ்ச உடம்புங்க இது... இந்த மழை என்ன பண்ணிடும்?" என்று சிரித்தான்.

"திரும்பினதும் என்கிட்ட தகவல் சொல்லு என்ன?"

"சரிங்கய்யா" என்றான்.

மோட்டார் பைக் திரும்பியது.

இது தற்காலிக வேலைதான். மழை நின்றவுடன் கேபிளை சரி செய்து விடு வார்கள். ஃபோன் வேலை செய்யும். சாத்தப்பனுக்கு ஊர் சொல்லும் வேலை வராது. இது சாத்தப்பனுக்குத் தெளிவாகவே தெரிந்திருந்தது. ஆனாலும் ஆறு வருடங்களாகப் பார்க்க முடியாத கிராமங்களை, சாலைகளை, டீ கடைகளை, மனிதர் களைப் பார்க்கும் ஆவலில், ஒரு தற் காலிக சந்தோஷத்துடன் அவசரமாக மில்லைப் பூட்டத் தொடங்கினான் சாத்தப்பன். ○

அரசின் கையில் ஆட்டோ கட்டண பிரச்னை!

சென்னை என்றாலே, 'ஐயோ, அங்கே ஆட்டோ ரிக்‌ஷாக்காரர்களிடம் மாட்டிக் கொண்டு அல்லாட வேண்டியிருக்கிறது!' என்று நகரவாசிகளும், வெளியூரிலிருந்து வருபவர்களும் அலுத்துக் கொள்ளும் அளவுக்கு ஆட்டோ தொழில் பெயர் கெட்டுக்கிடக்கிறது.



"மீட்டர்கள் சூடு வைக்கப்பட்டிருக்கின்றன. சரி, அதையாவது போட்டு ஓட்டுகிறார்களா என்றால் அதுவும் இல்லை. பேரம் பேசுகிறார்கள். குறைந்தபட்சமாகவே பதினைந்து ரூபாய் வாங்கிவிடுவது வழக்கமாகி விட்டது'' என்று குறைகள் குவிகின்றன. ஆனால் -

'1996ல் ஏறத்தாழ 19 ரூபாய் இருந்த பெட்ரோலின் விலை இப்போது 31ஐத் தாண்டிவிட்டது. நாங்கள் எவ்வளவு கேட்டும் இது வரை அரசு ஆட்டோ கட்டணத்தை உயர்த்தவே இல்லை. நாங்கள் யாரிடம் முறையிட முடியும்?' என்று ஆட்டோ ஓட்டுநர் தரப்பில் கூறப்படுகிறது.

முதலாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய தினசரி வாடகை, மைனர் ரிப்பேர் செலவுகள், பெட்ரோல் - ஆயில் இவற்றுக்கான செலவு - இவை எல்லாம் போக மீதிதான் ஆட்டோ ஓட்டுநரின் கையில் மிஞ்சும். இவர்களுக்கு பி.எஃப், கிராஜுவிடி எதுவும் கிடையாது. மருத்துவவசதி இல்லை. ஒரு திடீர்ச் செலவு என்றால் இவர்கள் கடன் வாங்கும் தொகைக்கு அநியாய வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது.

ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த தொழிலாளர் சங்கமும் இந்தக் கட்டணப் பிரச்னையை எடுத்துக் கொண்டு ஊர்வலம், மறியல், போராட்டம் என்று பலமுறை ஈடுபட்டும், தீர்வு என்னவோ எட்டியபாடில்லை.



'இப்போது இருக்கிற கட்டணமே போதும். மேலும் உயர்த்தக்கூடாது' என்று ஆட்டோ பயணிகள் நல்வாழ்வுச் சங்கத்தின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு வேறு இருந்தது.

ஆட்டோ ஓட்டுநர்களுக்குப் பாதுகாப்பான ஓட்டும் முறைகள், முதலுதவி, கம்ப்யூட்டர் பயிற்சி, தொலைபேசிக் கூண்டுகள் அமைத்துக் கொடுத்தல் என்று மட்டுமே செயல்பட்டு வந்தது சென்னை தொண்டு நிறுவனம் 'இனோடா'. இதன் தலைவர் வி. நாராயணன், ஆட்டோ கட்டணத்தில் மாறுதல் கொண்டு வந்தால் ஓட்டுநரின் போக்கில் ஒரு மாற்றம் ஏற்படும், அவர்கள் வாழ்க்கை தரம் உயரும் என்று ஒரு சந்தர்ப்பத்

தில் தம் கருத்தை வெளிப்படுத்தினார்.

''விலைவாசி எல்லாம் உயர்ந்துவிட்டது. அதனால் எங்களுக்கும் கட்டண உயர்வு கொடுங்கள் என்று பொத்தாம் பொதுவாக அரசிடம் கேட்டால் அவர்கள் நிச்சயம் லட்சியம் செய்யப் போவதில்லை. அவர்களின் அன்றாடத் தொழில் சார்ந்த பொருளாதார விவரங்களை முறையாக எடுத்து வைத்து அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தினால் ஒரு வேளை அவர்கள் செவி சாய்க்கலாம்



• சாலைப்பாதுகாப்பு வார விழாவில் ஆட்டோ ஓட்டுநர்கள்

என்று நினைத்தோம். இதில் எல்லா தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் பங்கு கொள்ள வேண்டும் என்று கருதினோம். இதற்கு எல்லாக் கட்சிகளின் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் ஆதரவு தெரிவித்தனர். இதையே முதற்கட்ட நல்ல அறிகுறி என்று கருதினோம்'' என்றார் நாராயணன்.

ஆனால், இது மட்டும் போதாதே! ராஜாஜி சென்டர் மற்றும் 'காடலிஸ்ட்' அமைப்பு ஆகியவற்றின் தலைவர் பி.எஸ். ராகவன், கன்ஸ்யூமர் ஆக்ஷன் க்ரூப்பைச் சேர்ந்த ஷேஸா ஐயர், வழக்கறிஞர் ராஜா, கன்ஸ்யூமர் அசோசியேஷன் ஆஃப் இந்தியாவைச் சேர்ந்த பி.கே. ரங்கநாதன் ஆகியோரின் ஆதரவுடன் ஜூன் மாதம் உள்துறைச் செயலரிடம் ஒரு மனு கொடுத்தார் நாராயணன்.

இந்த முதல்கட்ட முயற்சிக்கு ஒரு பலன் உடனடியாகக் கிடைத்தது. கட்டண உயர்வு கூடாது என்ற வழக்கு, நீதிமன்றத்திலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டது.

அப்படியானால் நியாயமான கட்டணத்தை நிர்ணயிக்க ஒரு வழிமுறை உருவாக்கி, அரசிடம் விளக்க வேண்டுமே?

"இதற்கு நாங்கள் மகாலிங்கம் என்ற இளம் நிபுணரை அணுகினோம் என்று விளக்கினார் நாராயணன். "அவர் 'பப்ளிக் அட்மினிஸ்ட்ரேஷன் திங்க் டாங்க்' என்ற தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகிறார். லண்டன், சிங்கப்பூர் ஆகிய நகரங்களில் இது போன்ற மக்கள் உபயோகிக்கும் வாகனங்களின் நிர்வாகத்தை ஊன்றிக் கவனித்தவர். ஓர் ஆட்டோ ஓட்டுனர் வருடத்தில் 365 நாட்களும் வண்டி ஓட்ட முடியாது. அவருடைய குடும்பத்திலும் சில அவசரப் பணிகளுக்காக அவர் ஓய்வு எடுக்க வேண்டி வரும். அவருக்கு நோய் நொடி வந்தால் அவரால் வண்டி ஓட்ட முடியாது. டிரான்ஸ்போர்ட் டிரைவர்



• ஆட்டோ ஓட்டுநர்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி

அளவுக்கு அவருக்கு மாத வருமானம் கிடைக்காவிட்டாலும் குறைந்த பட்சம் மாதம் 3000 ரூபாயாவது வந்தால்தான் அவரால் ஒழுங்காகக் குடும்பம் நடத்த முடியும். இதை எல்லாம் கணக்கிட்டு, ஒரு கட்டணம் நிர்ணயிக்க உதவும் வகையில் மகாலிங்கம் ஓர் அறிக்கை தயாரித்



• கோட்டையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நாராயணன்.

துக் கொடுத்தார்.''

ஆட்டோ ஓட்டுநர்களின் பொருளாதாரத்தைத் துல்லியமாகக் கணிக்க, ஏழு பேரை 'இனோடா'விலிருந்து தேர்ந்தெடுத்து, அவர்களைத் தினசரி லாக்புக் எழுத வைத்து, அவர்கள் வங்கியில் கணக்கு வைக்கச் செய்து, கிட்டத்தட்ட ஒரு வருடமாகப் பயிற்சியும் கொடுத்து வந்திருக்கிறார் மகாலிங்கம்.

''இப்போது இருக்கிற கட்டணத்தை விட நிச்சயம் அதிகம்தான் புதிய கட்டணம் இருக்கும். ஆனால் குறைந்த பட்சம் கூடுதலாக ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் இத்தனை ரூபாய் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால், அரசு ஒரு விரைவான முடிவுக்கு வர இயலுமே?''

''அதற்கான வழி முறைகளை விளக்கியிருக்கிறோம். இத்தனை ரூபாய் நிர்ணயுங்கள் என்று நாங்களாகவே குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. எங்கள் கணிப்பில், 'தூரத்தில் உள்ள இடத்துக்குப் போகும் சவாரியைத்தான் விரும்புவோம். கிட்ட இருக்கிற இடத்துக்குப் போக மாட்டோம்' என்று ஓட்டுநர்கள் பிடிவாதம் செய்யக் கூடாது. எனவே நிறைய அளவு, கிட்டே இருக்கிற சவாரிகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளுகிற வகையிலும் கட்டணம் அமைய வேண்டும் என்று விரும்புகிறோம். எங்களுடைய கணக்குப்படி முதல் கிலோ மீட்டருக்கு 10 ரூபாயும், அடுத்த கி.மீட்டருக்கு 4, 4.50 ரூபாயும் வைத்தால், ஓட்டுநருக்கும் கட்டுபடி ஆகும். பயணிகளுக்கும் வருத்தம் இருக்காது என்று எண்ணுகிறோம். இப்போது பக்கத்து சவாரிகளுக்குக் குறைந்த பட்சம் 15 ரூபாய் பேரம் பேசிப் படிவது போய், ஏறி உட்கார்ந்ததும் மீட்டரைப் போட்டு விட்டால், வாக்குவாதம், பேரம் எதுவும் எழ வாய்ப்பில்லை அல்லவா?'' என்கிறார் நாராயணன். பக்கத்து சவாரிகளை ஏற்றுக் கொண்டால், அடுத்த சவாரிக்காகக் காத்திருக்கும் நேரமும், தேடலும் குறையும்.

''சரி, நீங்கள் கேட்கிறபடி அரசு பரிவுடன் கவனித்து கட்டணத்தை நிர்ணயிப்பதாக, ஒரு பேச்சுக்கு, வைத்துக் கொள்வோம். அதற்குப் பிறகும் மீட்டரில் சூடு வைத்தால் பயணிகள் எங்கே போவது?'' என்று நாம் கேட்க,

''மாற்றுக் கட்டணம் நிர்ணயித்த பிறகு, மும்பை, பெங்களூர் போல, அட்டை அச்சடித்துக் கொடுத்துவிட வேண்டும். அடாவடி செய்கிற ஆட்டோ ஓட்டுநருக்குக் கடும் தண்டனை விதிக்க வேண்டும். இதில் தொழிற் சங்கங்கள் ஒருமுகமாக எங்களை ஆதரிக்கின்றன'' என்கிறார் நாராயணன்.

அரசின் கையில் இப்போது வேண்டுகோள் வைக்கப்பட்டிருக்கிறது. இனியாவது தாமதம் செய்யாமல், உள்துறைச் செயலகமும், போக்குவரத்துத் துறைச் செயலகமும் இணைந்து செயல்பட்டு ஒரு முடிவை அறிவிப்பது ஆட்டோ ஓட்டுநர்களுக்கு மட்டுமின்றி, பயணிகளுக்கும் நல்லது.

- சாருகேசி

குழந்தை?!



அமிதாப் பச்சன் படத்தில் வருகின்ற பணக்கார வீட்டுப் பச்சைக் குழந்தை மாதிரி இருக்கிறார்; இந்திய கிரிக்கெட் அணியில் விக்கெட் கீப்பராகக் களமிறங்கியிருக்கிற பார்திவ் படேல். அதனால்தான் இங்கிலாந்து கேப்டன் நாஸர் ஹுசைன் அடித்த கமெண்டைக் கண்டு ஆச்சர்யமேற்படவில்லை. அந்த கமெண்ட் :

''பன்னெண்டு வயசு பையனை கிரீஸ்ல இறக்கிட்டாங்களேன்னு நினைச்சேன்!''

கிரிக்கெட் வரலாற்றில் மிக இள வயது விக்கெட் கீப்பர் என்ற கிரீடத்தை வேறு பார்த்திவுக்குச் சூட்டி விட்டார்கள். ரஞ்சி ஆட்டங்களில் கூட கலந்து கொள்ளாத இந்த குஜராத் பையாவுக்கு இந்திய அணியில் ஆடும் வாய்ப்பு கிடைக்குமென்று நம்பிக்கையிருந்ததாம். ஆனால் இவ்வளவு சீக்கிரமே எதிர்பார்க்கவில்லையாம்.

கிரிக்கெட் ஜாம்பவான்கள் ஆலன் பார்டர்-கனில் கவாஸ்கர் ஸ்காலர் ஷிப்பில் ஆஸ்திரேலியாவில் சிறப்பு பயிற்சிக்குச் சென்ற அனுபவமும் இவருக்கு இருக்கிறது.

''அந்த அனுபவம் விவரிக்க முடியாதது. அந்தப் பயிற்சி ஜூனியர் இந்திய அணியில் நான் சிறப்பாக ஆடுவதற்கு நிறைய உதவியது. விக்கெட் கீப்பிங்கிலும், பேட்டிங்கிலும் எப்படி ஜமாய்க்கலாம் என்பதை அங்கு கற்றுக் கொண்டேன்'' என்று சொல்லும் இந்த விக்கெட் கீப்பரின் தந்தை அஜய் பாய் பிஸினஸ்மேன். கிரிக்கெட்டில்லாத சமயங்களில் அம்மா நிஷாவுடனும் அக்கா கிஞ்சாலுடன் அரட்டை அடிப்பது தான் பொழுது போக்காம்.

முதல் டெஸ்டிலேயே பதற்றமில்லாமல், பயமில்லாமல் பேட் பிடித்த அனுபவம் எப்படியாம்?

"நான் சமீபத்தில்தான் தென்னாப்பிரிக்கா 'ஏ' அணியுடன் ஆடிவிட்டு வந்திருக்கிறேன். வெவ்வேறு நாட்டு பிட்ச்களில் ஆடிய அனுபவம் எனக்கு இருக்கிறது பிறகேன் பயம்?" என்கிறார்.



• ஹர்பஜனுடன் பார்திவ்

"அவர் நடுக்கமின்றி ஆடிய விதம் என்னைக் கவர்ந்தது. இந்த மாதிரி இளம் ரத்தம் கிரிக்கெட்டுக்கு வந்து கொண்டிருப்பது நல்ல விஷயம்தான். இவர்களைப் பார்க்கும்போது எங்களைப் போன்றோருக்குத்தான் 'உனக்கு வயசாகிவிட்டதப்பா' என்பதை ஞாபகப்படுத்துகிறது" என்கிறார் இங்கிலாந்து கேப்டன் சிரித்துக் கொண்டே!

— அப்பு

சைக்கிள் லான்ஸ்!



சைக்கிள் பந்தய வீரர்களுக்கு பிரான்ஸ் என்றாலே புல்லரிக்கும். காரணம் அங்குதான் உலகின் மாபெரும் சைக்ளிங் பந்தயம் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. 'டூர் டெ ஃப்ரான்ஸ்' என அழைக்கப்படும் இந்தப் பந்தயத்தில் கடக்க வேண்டிய தூரம் மூவாயிரம் கிலோ மீட்டர்களை விட அதிகம். கிட்டத்தட்ட மூன்று வாரங்கள் தேவைப்படும் இதை முடிக்க.

இப்படியொரு கடினமான போட்டியில் தொடர்ந்து நான்காவது முறை வெற்றி பெறுவது என்றால் சும்மாவா? இந்த அற்புத சாதனையைச் சமீபத்தில் செய்திருப்பவர் லான்ஸ் ஆர்ம்ஸ்ட்ராங்.



ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த மிகுவெல் இன்ட்ரெய்ன் என்பவர் ஏற்கெனவே தொடர்ந்து ஐந்து முறை மேற்படி பந்தயத்தில் ஜெயித்திருக்கிறார். அடுத்த ஆண்டும் ஆர்ம்ஸ்ட்ராங் வென்றால், இன்ட்ரெய்ன் செய்த சாதனையில் இணையாகி விடுவார்.

பந்தயத்தில் வென்று தன் தாயகமான அமெரிக்கா திரும்பிய அடுத்த நாளே அடுத்த ஆண்டுப் போட்டிக்காகப் பயிற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கி விடுவாராம் லான்ஸ்!

இவரது வருட ஊதியம் ஒரு மில்லியன் டாலர்கள்! அளிப்பது அவர் பணிபுரியும் அமெரிக்க தபால்துறை. கடந்த நான்கு வருடங்களாக உலக அளவில் தங்களுக்குப் பெருமை தேடித் தந்ததற்காக இந்தப் பெரும் தொகையை அளித்து வருகிறது தபால்துறை.

ஒரு வேடிக்கை என்னவென்றால் பிரெஞ்சு மக்கள் போட்டியின்போது இவருக்கு ஊக்கம் கொடுப்பதில்லையாம். இந்தப் போட்டியில் ஐரோப்பியரல்லாத யாருக்குமே ஆதரவளிப்பது பிரெஞ்சு ரசிகர்களின் வழக்கமில்லை.

இவை எல்லாவற்றையும் விட லான்ஸின் சாதனை குறித்து வாய்பிளக்க வேறொரு காரணமும் உண்டு. 'மெடாசைஸ்' என்ற புற்றுநோயால் தாக்கப்பட்டு அதிலிருந்து மீண்டிருப்பவர் இவர். ஆட்கொல்லி நோய்களில் இதுவும் ஒன்றாம்.

— ஆதர்ஷ்

கோபுரம்

ஜி.ஆர். சுரேந்தர்நாத்

கிணற்றடியில் குளித்துவிட்டு, வழுக்கை தலையில் வெயில் சுள்ளென்று அடிக்க.. இங்கிருந்து தெரிந்த பெரிய கோயில் கோபுரத்தைப் பார்த்து, "ஈஸ்வரா...' என்று கையெடுத்துக் கும்பிட்டேன்.

தஞ்சாவூரில், பெரிய கோயிலைத் தவிர எல்லாம் மாறித் தான் போய்விட்டது.

வடவாறு வறண்டு போய், ஆற்றில் குளித்துவிட்டு, தோளில் ஈரத் துணிகளைப் போட்டபடி வரும் பெண்களைப் பார்ப்பதெல்லாம் மிகவும் அபூர்வமான காட்சியாகிவிட்டது. தினமும் இருபது ஏழைகளுக்குச் சோறு போட்ட பெரிய வீட்டுப் பேரன் நொடித்துப் போய், பஸ் ஸ்டாண்டில் டீ அடிப்பான் என்று யார்தான் நினைத்தார்கள். பையன்கள் காலேஜுக்கும், வேலைக்கும் போக பைக் கேட்கிறார்கள்.

என் பையன் பி.ஏ. முடித்துவிட்டு, பொறுப்பற்று, மூன்று வருடங்களாக சும்மா ஊரைச் சுற்றிக் கொண்டு திரிகிறானே என்று, முதலியாரைப் பிடித்து ஒரு ஸ்டோர் கீப்பர் வேலை வாங்கித் தந்தேன். அவனோ டி.வி.எஸ். சேம்ப்பும், நாலு புது ஜீன்ஸ்சும், சட்டையும் வாங்கித் தந்தால்தான் வேலைக்குப் போவேன் என்று முடிவாகச் சொல்லிவிட்டான். இன்ஸ்டால்மென்ட்டில் டி.வி.எஸ். ஸும், புது ட்ரெஸ்சும் வாங்கிக் கொடுத்த பிறகுதான் இன்று வேலைக்குக் கிளம்புகிறான்.

சோப்பு டப்பாவைக் கையிலெடுத்துக் கொண்டு, நான் வீட்டினுள் செல்ல.. என் மகன் ஷூ போட்டுக் கொண்டிருந்தான்.

"என்னடா... கிளம்பிட்டியா?" என்றேன்.

"ம்.. கிளம்பியாச்சு. ஒரு இருபது ரூபா தாங்க" என்றான்.

நான் பணத்தைக் கொடுத்தபடி, "போற இடத்துல நல்ல புள்ளன்னு பேரு வாங்கணும். உன் இளவயசு வீறாப்பை யெல்லாம் யாருகிட்டயும் காட்டாத. எதுக்கும் கோபப் படாத" என்றேன்.


"சரி.... சரி..' என்று சலிப்பாகக் கூறியவன், "அம்மா நான் போய்ட்டு வர்றேன்." என்று கிளம்பினான்.

வெளியே டி.வி.எஸ். ஸ்டார்ட் செய்யும் சப்தம் கேட்டது.

"இப்பயாச்சும் இந்தப் புள்ளைக்குப் புத்தி வந்துச்சே" என்றாள் கோமதி.

> "என்ன எடுபிடின்னு நினைச்சுகிட்டாங்க. போனா அட்டைப் பெட்டியத் தூக்கி விடுறாங்கிறாங்க. சரி போனாப் போவுதுன்னு செஞ்சா டீ வாங்கிட்டு வாங்குறான் ஒருத்தன். இவனுங்களுக்கு டீ வாங்கவா நான் பி.ஏ. படிச்சேன்."





"ம்க்கும்... நீதான் உன் மவன மெச்சிக்கணும். உன் மவ கல்யாணத்துக்கு வாங்குன கடனே அடைஞ்சபாடில்ல. இதுல இவன் வேலைக்குப் போறதுக்கு ட்ரெஸ்சு, டீ.வி. எஸ்ஸு... என்னமோ போ."

பையன் வேலைக்குச் சென்றதில் பெரும் நிம்மதி. இரண்டாயிரம் சம்பளம் வரும். கொல்லைப்பக்க வீட்டு வாடகை ஆயிரம் ரூபாய் வருகிறது. மூன்று பேர் குடும்பத்தை ஓட்டிவிடலாம். இனி நான் வேலைக்குச் செல்ல வேண்டியதில்லை.

நான் எட்டாவது ஃபெயிலானவுடன், என்னை அந்த ரெடிமேட் கடையில் சேர்த்துவிட்டார் அப்பா. நாற்பது வருஷமாக ஒரே கடை. ஒரே முதலாளி. தஞ்சாவூரைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கான, மட்டரக ரெடிமேட் துணிகள் விற்கும் கடை. சேல்ஸ் பண்றது. கணக்கு வழக்கு பாக்குறது எல்லாம் நான்தான். முப்பது ரூபாய் சம்பளத்தில் சேர்ந்து, இப்போதுதான் இரண்டாயிரத்து ஐந்நூறைத் தொட்டிருக்கிறது.

என் முதலாளி எந்நேரமும் கடுகடுவென்றிருப்பார். நாயே.. என்று திட்டுவார். ஏதேனும் தவறு செய்துவிட்டால், தஞ்சை மாவட்டத்தில் புழக்கத்தில் உள்ள அத்தனைக் கெட்ட வார்த்தைகளையும் அற்புதமாகப் பிரயோகிப்பார். இருந்தாலும் பழக்கமாகிவிட்டது.

ஆனால் இப்பொழுதெல்லாம் முன்பு போல் பேசாமல் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. கோபம் வந்துவிடுகிறது. மேலும் கீழ வாசல் கடைவீதியில் ஒரு வருடத்திற்கு முன் ஒரு விபத்தில், காலில் ஆட்டோ ஏறிவிட, முழங்கால் உடைந்து, இரண்டு மாதம் படுக்கையில் கிடந்து,

சரியாகிவிட்டாலும், முன்பு போல் நீண்ட நேரம் நின்றுகொண்டு வியாபாரம் செய்ய முடிவதில்லை. நன்கு வலி வந்து... இரவு அந்த வேதனையில் தூங்கவே முடிவதில்லை. டாக்டர், வேலைக்குச் செல்வதை நிறுத்தச் சொன்னார். அதற்கு இப்பொழுது தான் நேரம் வந்திருக்கிறது.

கோமதி தட்டில் இட்லியை வைக்க, சாப்பிட அமர்ந்தேன்.

"அப்ப... இந்த மாசத்தோட வேலைய விட்டு நின்னுக்குறேன்னு முதலாளிகிட்ட சொல்லட்டுமா?" என்றேன்.

"யோசனையே வேண்டாம். சொல்லிருங்க. ராத்திரியெல்லாம் வலில நீங்க படுற அவதியப் பாக்குறப்ப... போதும்பா... உங்க மவன்கிட்ட கூட சொன்னேன்."

"என்ன சொன்னான்?"

"உடம்பு முடியாம எதுக்கு இன்னும் கஷ்டப்பட்டுக்கிட்டு... நான்தான் வேலைக்கு போறேன்ல்ல... மூணு பேருக்கு இந்த சம்பாத்தியம் போதும்ன்னான்."

"அடேங்கப்பா... இந்த புத்தி மூணு வருஷமா எங்க போச்சாம்? ஒரு வேலைக்கு போகணும்னு நினைச்சானா?"

"சின்னப் பையன்ங்க. நம்ப வேற கடைசிப் புள்ளன்னு செல்லம் கொடுத்து வளத்தோம். வயசாவ, ஆவத்தானே புத்தி வரும்."

"எப்படியோ. இனிமேலாச்சும் நம்பள உக்கார வச்சு சோறு போட்டா சரி" என்று எழுந்தேன்.

நான் முதலாளி வீட்டு கேட்டைத் திறந்து கொண்டு நுழைந்தபொழுது, அவர் வெளியே அமர்ந்து தினத்தந்தி பேப்பர் படித்துக் கொண்டிருந்தார்.

நாற்பது வருஷமாக நான் கடைச் சாவி வாங்க வரும்பொழுது, அவர் பேப்பர் படித்துக் கொண்டிருப்பதும், என்னைப் பார்த்தவுடன் கையில் தயாராக வைத்திருக்கும் சாவியை நீட்டுவதும், மிகச் சில நாட்களைத் தவிர மாறவே மாறாது.

நான் சாவியை வாங்கிக் கொண்டு, "முதலாளி... ஒரு விஷயம்..." என்று இழுத்தேன்.

"என்ன?" என்றார் எப்போதும் போல் வெடுவெடுவென்று. "வந்து... பையன் வேலைக்குப் போய்ட்டான். உடம்பு முன்ன மாதிரி முடியறதுல்ல. அதான் இந்த மாசத்தோட வேலைய விட்டு நின்னுக்கலாம்னு இருக்கேன்" என்றேன். முதலாளி முகம் மாறிவிட்டது.

"நீ போய்ட்டா ரொம்ப கஷ்டமாயிடும்டா. நீ இல்லைனா எனக்குக் கை ஒடிஞ்ச மாதிரி ஆயிடும்" என்றெல்லாம் முதலாளி சொல்வார் என்று எதிர்பார்த்தேன். "தீபாவளி வரைக்கும் இருந்துட்டுப் போயேன்" என்றார்.

"அய்யோ... தீபாவளி வியாபாரத்துக்கெல்லாம் இந்த உடம்பு தாங்காது முதலாளி" என்றேன்.

"சரி. நீ கடைக்குப் போ. மத்தியானம் கும்பகோணம் போய் சரக்கு வாங்கணும். சாப்டுட்டுப் போய்ட்டு வந்திரலாம்" என்று கூறினார்.

கடையைத் திறந்து பெருக்கினேன். டீக்கடையில் பிடித்து வைத்திருக்கும் நல்ல தண்ணீர்க் குடத்தை எடுத்து வந்து வைத்தேன். துணியிருக்கும் அலமாரி, கண்ணாடிகளையெல்லாம் துடைத்துவிட்டு அமர்வதற்கும், முதலாளி வந்து கல்லாவில் அமர்வதற்கும் சரியாக இருந்தது.

கடைக்குள் ஒரு கிராமத்து வயதான பெண்மணி நுழைந்தார்.

கடைக்கு வாடிக்கையாக வரும் ஆள்தான். "வா புள்ள... என்ன ஆளையே காணோம்..." என்றார் முதலாளி.

"எங்க வர்றது? மழையும் இல்ல. ஆத்துலயும் தண்ணி இல்ல. குறுவ சாகுபடியே இந்த வருஷம் கிடையாது. சோத்துக்கே வழியில்ல. எங்கயிருந்து துணிவாங்க. பேத்திக்கு அடுத்த வாரம் காது குத்து. கடன உடன வாங்கி செய்யத்தானே வேணும். அதான் ஒரு கவுனு வாங்கலாம்னு வந்தேன்."

அந்தம்மா நெடுநேரம் நான் எடுத்துப் போட்ட கவுன்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். விபத்தில் அடிபட்ட வலது முழங்கால் கன்னென்று வலிக்க, நான் ஸ்டூலில் அமர்ந்தேன்.

அந்தம்மா அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கவுன்களைக் காட்டி, "அந்த ஊதா கலர எடு" என்று கூற, நான் கால்வலியால், எழுந்திருக்காமல், அப்படியே அந்த

"திருட்டுப் பக்கிரியை ஏன் சார் உடனே ஸ்டேஷனுக்கு அழைச்சுக்கிட்டு வரச் சொல்றீங்க? அவன் எங்கே திருடினான்?"

"கொஞ்ச நாளா அவன் எங்கேயும் திருடலய்யா. அதனாலதான் அவனை அழைச்சுக்கிட்டு வரச் சொல்றேன்."

- மு. பெரியசாமி

கவுனை இழுக்க, மொத்த கவுன் அடுக்கும் கீழே சரிந்து விழுந்தது. அவ்வளவுதான். முதலாளி பொங்கிவிட்டார்.


"ஏண்டா. கலெக்டர் வேலை பாக்கறோம்னு நினைப்பா? துரைக்கு எழுந்திரிச்சு எடுக்க முடியாதா. ஏண்டா என் உயிரை எடுக்கற? உன்கிட்ட கத்தி கத்தியே என் உசுரு போயிடும்டா!" முதலாளி அசிங்கமாக கேட்க, எனக்கு அவமானமும், ஆத்திரமும் பொங்கியது. சரி. இன்னும் கொஞ்ச நாள்தானே என்று அமைதியாக இருந்தேன்.

மதியம் சாப்பாட்டிற்கு மேல் கடையைப் பூட்டிவிட்டு கும்பகோணத்திற்குச் சென்று பாவாடை, ஜாக்கெட் எல்லாம் பத்து, பத்து டஜன் வாங்கிக் கொண்டு, தஞ்சாவூர் திரும்பியபொழுது இருட்டிவிட்டது.

துணிகளை ஒரு பழைய வேட்டியில் மூட்டையாகக் கட்டியிருந்தோம். முதலாளி முன்னால் நடக்க, நான் துணி மூட்டையைத் தோளில் தூக்கிக் கொண்டு பின்னால் நடந்தேன். எவ்வளவு தூரம் போக வேண்டும்? ஒரு ஆட்டோ வைத்தால் குறைந்தா போய் விடுவார். கஞ்சம்.. கஞ்சம்.. நாற்பது வருஷமாயிற்று... சரக்கு வாங்கி வர்றப்ப, ஒரு தடவை கூட ஒரு வண்டியோ, ஆட்டோவா பிடித்தது கிடையாது. பஸ் ஸ்டாண்டிலிருந்து ஒரு மைல் தூரம் நான்தான் தூக்கிக் கொண்டு வரவேண்டும்.

வரவர கால்வலி தொந்தரவு அதிகமாகி விட்டது. தோளில் சுமையோடு நடக்க... ஒவ்வொரு அடிக்கும், முழங்கால் விண் விண்ணென்று வலித்தது. அப்படியே மூட்டையைத் தூக்கிப் போட்டுவிட்டு, 'உன் வேலையுமாச்சு... நீயுமாச்சு...' என்று போய் விடலாமா என்று தோன்றியது.

நான் மெதுவாக நடக்க, முதலாளி திரும்பிப் பார்த்து, "வேகமா வாடா... ஏற்கெனவே அரை நாள் வியாபாரம் போச்சு. மாப்பிள்ளை ஊர்வலம் மாதிரி சாவகாசமா



வர்ற..." என்று கூற, எனக்கு ஆத்திர ஆத்திரமாக வந்தது. இன்னும் ஒரே மாசம்தான். அதோட இந்தச் சனியனுக்கு முழுக்கு போட்டுடலாம்.

நீண்ட தூரம் நடந்து, கடை வாசலுக்கு வந்தபொழுது, எனக்கு வியர்த்துக் கொட்டியது. கடுமையான கால் வலி.

முதலாளி மூட்டையை என் தோளிலிருந்து இறக்கும்பொழுதுதான் கவனித்தோம். மூட்டை மூலையில் பெரிதாகப் பிரிந்திருந்தது.

"அறிவு கெட்ட நாயே... என்னத்தடா தூக்கிட்டு வந்த...?" என்றபடி முதலாளி ரோட்டைத் திரும்பிப் பார்த்தார். இரண்டு பாவாடை கீழே விழுந்து கிடந்தது.

"நாசமாப் போறவனே...! போறதுக்குள்ள என்னைய போண்டியாக்குறதுன்னே முடிவு பண்ணிட்டியா. கும்பகோணத்துலயிருந்து எத்தனைத் துணியை ரோட்டுல விட்டியோ. போய் எடுறா." என்று கூற, நான் கால்வலியோடு வேகமாக ஓடி, ரோட்டில் கிடந்த பாவாடைகளை எடுத்து வந்தேன்.

"பொறம்போக்கு நாயே... போய் முக்கு திரும்பி, அந்த ரோட்டுல எதும் விழுந்துருக்கான்னு பாத்துட்டு வாடா." ரோட்டில் சென்று கொண்டிருந்தவர்கள் எல்லாம் வேடிக்கை பார்க்க, என்னை அவமானம் பிடுங்கித் தின்றது.

மீண்டும் காலில் வலியோடு சென்று, தெரு முக்கில் திரும்பிப் பார்த்தேன். அங்கு நான்கைந்து ஜாக்கெட்டுகள் விழுந்து கிடந்தன. அதையும் எடுத்துக் கொண்டு வந்தேன். முதலாளி இன்னும் கடையைத் திறக்காமல் ரோட்டில்தான் நின்று கொண்டிருந்தார்.

"ஏண்டா. மவன் வேலைக்கு போய்ட்டா பெரிய மினிஸ்டர் ஆயிட்டதா நினைப்பா? ஒரு மூட்டையைக் கூட ஒழுங்கா தூக்கிட்டு வர முடியலன்னா எதுக்கு நீ வேலைக்கு வர்றே..." என்று தொடர்ந்து அவர் ஒரு கெட்ட வார்த்தையைப் பிரயோகிக்க, ஏற்கெனவே கடுமையான கால்வலியிலிருந்த எனக்குக் கண்ணீரும், ஆத்திரமும் பொங்க, சட்டைப்பையிலிருந்தக் கடைச் சாவியை எடுத்து ரோட்டில் வீசி, "போதும்ய்யா... போதும். இன்னையோட என்னைத் தல முழுகிடுங்க. எனக்கு இந்த வேலையே வேண்டாம்." என்று கூறிவிட்டு, மேற்கொண்டு எதுவும் கோர்வையாகப் பேச முடியாமல், கன்னத்தில் வழிந்த நீரைத்



நம்மால் முடியும்!

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் குளத்தைச் சுற்றி நிலத்தடி நீர் மட்டம் முந்நூறு, நாநூறு அடி என்று கீழே இறங்கிப் போயிருந்தது மூன்று வருடத்திற்கு முன்பு இருந்த நிலை. இப்போது நீர் மட்டம் உயர்ந்து வற்றாமல் இருக்கின்றன கிணறுகள். எப்படி?

குளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழை நீர் சேகரிப்புக்கு ஏற்பாடு செய்து, அப்படிச் சேமிக்கப்படும் தண்ணீரை நேரடியாக குளத்திற்குத் திருப்பி விட்டதால், குளத்தில் 365 நாட்களும் தண்ணீர். விளைவு : சுற்றியுள்ள பகுதிகளில் நீர்மட்டம் ஏறியது. சரி. இதற்கு யார் காரணம்?

கோயிலைச் சுற்றியுள்ள யாரைக் கேட்டாலும் இப்படி ஓர் அற்புதமான ஏற்பாட்டைச் செய்து முடித்தவர்கள் ஸ்ரீநிவாஸா இளைஞர் நற்பணி மன்றம்தான் என்று ஒரே குரலில் சொல்கிறார்கள். மாநகராட்சியும் மழைநீர் சேகரிப்பு குறித்து ஒரு விழிப்புணர்வு படம் எடுக்கும் உரிமையை இந்த மன்றத்திற்குக் கொடுத்து விட்டது.

மன்ற உறுப்பினர் நாராயணன் ஒரு குறும்பட கலை வித்தகர் என்பதால் மன்றத்துக்குப் படம் எடுப்பதில் பிரச்னை ஏதும் இல்லை. எஸ்.வி.சேகர் திரைக்கதை அமைத்து இயக்கவும், நடிக்கவும் ஒப்புக் கொள்ளவே, வேலை சுலபமாயிற்று. கிட்டத்தட்ட இருபது நிமிடம் ஓடும் இந்தக் குறும்படத்தில் காரம், மணம் நிறைந்த மசாலாவுடன் மழை நீர் சேகரிப்பு அல்லது சேமிப்பு குறித்து விலா வாரியாகவே சொல்லியிருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் திரையரங்குகளிலும், தொலைக்காட்சிகளிலும் இது திரையிடப்பட இருக்கிறது. இந்த முயற்சியில் மாநகராட்சி அதிகாரிகள், மெட்ரோ வாட்டர் அதிகாரிகள் முழுமனத்துடன் ஒத்துழைத்தார்கள்" என்கிறார் மன்றத் தலைவர் கணபதி.

— கௌசி

துடைத்துக் கொண்டு, ரோட்டில் எல்லோரும் வேடிக்கை பார்க்க நான் திரும்பி நடந்தேன்.

முதலாளி, "டேய்.. டேய்.." என்று கூப்பிட, நான் பொருட்படுத்தாமல் நடந்தேன்.

கோமதி அழுத்தமாக, என் முழங்காலில் தைலத்தைத் தேய்க்க, தேய்க்க வலிக்கு இதமாக இருந்தது.

"வயசான ஆளாச்சே. பாவம்னு கொஞ்சமாச்சும், ஈவு, இரக்கம் வேணாம். மவன் வேலைக்குப் போன பிறகும் இந்த ஆளுகிட்ட பேச்சு வாங்கிட்டு இருக்கணும்னு தலையெழுத்தா என்ன? இனிமே அந்தத் தெரு பக்கமே தலை வைச்சுப் படுக்காதீங்க" என்றாள் கோமதி.

நான் ஒன்றும் பேசவில்லை. மனசு ஓய்ந்து போய்க் கிடந்தது.

ஷூ சப்தம் கேட்க, திரும்பிப் பார்த்தேன். வேகமாக உள்ளே வந்த என் மகன், சேரில் அமர்ந்து ஷூவைக் கழற்றினான்.

"என்னடா. வேலையெல்லாம் எப்படியிருந்துச்சு?" என்றாள் கோமதி.

"பெரிய இந்த வேல.. நம்ப வேற வேல பாக்கலாம்." என்றான் மூர்த்தி.

"ஏன்டா..!" என்று பதற்றத்துடன் நான் நிமிர்ந்து அமர்ந்தேன்.

"என்னை எடுபிடின்னு நினைச்சுக்கிட்டாங்க. போனா அட்டைப் பெட்டியத் தூக்கி விடுறாங்கிறாங்க. சரி போனாப் போவுதுன்னு செஞ்சா டீ வாங்கிட்டு வாங்குங்றான் ஒருத்தன். இவனுங்களுக்கு டீ வாங்கவா நான் பி.ஏ. படிச்சேன். நாளையில விருந்து வரமாட்டேன்னு சொல்லிட்டு வந்துட்டேன்" என்று கூறியவன், செருப்பை மாட்டிக் கொண்டு உடனே வெளியே சென்றுவிட்டான்.

நானும், கோமதியும் அதிர்ந்துபோனோம். மனசு முழுக்க வேதனையுடன் எழுந்து சட்டையை மாட்டினேன்.

"எங்க கிளம்பிட்டீங்க?" என்றாள் கோமதி.

"முதலாளி வீட்டுக்குத்தான். போய் கைல, கால்ல விழுந்து மறுபடியும் சேத்துக்கச் சொல்லணும். வீட்டுல சோறு பொங்கணும்ல. இந்தக் கடங்கார மவனை நம்பி டீ.வி.எஸ். வேற இன்ஸ்டால்மென்ட்ல வாங்கித் தந்தேன் பாரு. என்னைச் செருப்பால அடிக்கணும். போய்த்தான் ஆவணும். காறித் துப்புவாரு. இருந்தாலும் நான் இல்லாம அவருக்கு ரொம்பக் கஷ்டம். சேத்துக்குவாரு." என்று கூறிவிட்டு வெளியே வந்தேன்.

சிவகாமியின் சபதம்

மூன்றாம் பாகம்

பிக்ஷுவின் காதல்

முதல் அத்தியாயம்

அழியா மதில்

அமரர் கல்கி

வாதாபி சக்கரவர்த்தி புலிகேசியின் படைகள், மகேந்திர பல்லவரின் காலத்தில் காஞ்சிக் கோட்டையை முற்றுகையிட்டது, தென்னாட்டின் சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற சம்பவம்.

ஏறக்குறைய எட்டு மாத காலம் அந்த முற்றுகை நீடித்திருந்தது. எனினும், காஞ்சிக்கோட்டையின் மதில்கள் கன்னியழியாமல் கம்பீரமாகத் தலைதூக்கி நின்றன. வாதாபிப் படையைச் சேர்ந்த வீரன் ஒருவன்கூடக் காஞ்சிக் கோட்டைக்குள்ளே கால் வைக்கவும் முடியவில்லை.

வாதாபி வீரர்கள் காஞ்சிக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டவுடனே, வைஜயந்தி பட்டணத்தில் செய்தது போலவே ஒரே மூர்க்கமாய்க் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்ற யத்தனித்தார்கள். காலாட் படையைச் சேர்ந்த கணக்கற்ற வீரர்கள் ஏக காலத்தில் கோட்டையின் நாற்புறத்திலும் அகழிகளை நீந்திக் கடக்க முயன்றார்கள். கோட்டை மதில்களின் மேல் மறைவான இடங்களிலிருந்து மழை போல் பொழிந்த அம்புகளும் அகழியிலிருந்த முதலைகளும் அவ்வீரர்களையெல்லாம் எமலோகத்துக்கு அனுப்பின. தப்பித் தவறிக் கரையேறிய வீரர்கள் கோட்டை மதிலோரமாகக் கண்ணுக்குத் தெரியாமல் அமைந்திருந்த பொறிகளில் அகப்பட்டுத் திண்டாடினார்கள். ஆங்காங்கு அகழிகளில் இறங்கிய யானைகளுக்கும் அகழி

யிலிருந்த முதலைகளுக்கும் பயங்கர மான போராட்டம் நடந்ததில், அகழி யில் நிறைந்திருந்த தண்ணீரெல்லாம் செந்நீராக மாறியது.

முதல் முயற்சியில் தோற்ற பிறகு, கோட்டை வாசல்களுக்கு எதிரே அகழி யைத் தூர்த்துக் கோட்டைக் கதவுகள் மேல் யானைகளை மோதச் செய்ய முயன்றார்கள். காஞ்சியைச் சுற்றி யிருந்த பெரிய பெரிய விருக்ஷங்களை யெல்லாம் மத்த கஜங்கள் வேரோடு பெயர்த்துக் கொண்டு வந்து அகழியில் போட்டுத் தூர்த்தன. ஆனால், இந்த வேலை அவ்வளவு எளிதாக நடக்க வில்லை. கோட்டை வாசலின் மேல் மாடங்களில் மறைவான இடங்களி லிருந்து பல்லவ வீரர்கள் வேகமாய் எறிந்த வேல்கள் யானைகளின் கண் களிலும் மற்றுமுள்ள மர்ம ஸ்தானங் களிலும் தாக்க, அவை வீறிட்டுக் கொண்டு திரும்பியோடிச் சளுக்கர் படைகளுக்குச் சேதமுண்டாக்கின.

பெரும் பிரயத்தனத்தின் பேரில் கோட்டை வாசல்களுக்கு எதிரே அகழிகள் தூர்க்கப்பட்டன. யானைகள் கோட்டைக் கதவுகளை முட்டியபோது, வெளிக் கதவுகள் தகர்ந்தன. ஆனால், வெளிக் கதவுகளுக்கு உள்ளே எதிர் பாராத அதிசயம் யானைகளுக்குக் காத் திருந்தது. புதிதாய் அமைக்கப் பட் டிருந்த உட்கதவுகளில் நூற்றுக் கணக்கான வேல் முனைகள் பொருத் தப்பட்டிருந்தன. இந்த வேல் முனை களில் வேகமாய் மோதிக் கொண்ட வாதாபி யானைகள்; பயங்கரமாகப் பிளிறிக் கொண்டு திரும்பி, தங்களுக்குப் பின்னாலிருந்த காலாட் படை வீரர் களையெல்லாம் துவம்சம் செய்து கொண்டு ஓடின. பெரிய பெரிய மரக் கட்டைகளைக் கொண்டு வந்து அந்த வேல் முனை பொருந்திய கதவுகளை யும் தகர்த்தார்கள். அப்படித் தகர்த்து விட்டுப் பார்த்தால், அக் கதவுகளுக்குப் பின்னால் கோட்டை வாசலை அடி யோடு அடைத்துக்கொண்டு கருங்கல் லாலும், சுண்ணாம்பாலும் கட்டப் பட்ட கெட்டிச்சுவர் காணப்பட்டது.

இவ்விதமாக, ஏறக்குறைய ஒரு மாத காலம் கோட்டையைத் தாக்கிக் கைப் பற்றுவதற்கு முயன்று தோல்வியடைந்த பிறகு, நீடித்து முற்றுகையை நடத்திக் கோட்டையிலுள்ளவர்களைப் பட்டினி போட்டுப் பணியச் செய்வதென்று புலிகேசி தீர்மானித்தான். வாதாபிப் படைகள் காஞ்சியைச் சுற்றிலும் நெடுந் தூரம் வரை கூடாரம் அடித்துக் கொண்டு தண்டு இறங்கின.

முற்றுகையை ஆரம்பித்து ஆறு மாத காலம் ஆன போது, கோட்டைக்குள் இருப்பவர்களுக்கு என்ன ஆபத்து நேரிடுமென்று புலிகேசி எதிர் பார்த்தானோ அந்த ஆபத்து வாதாபிப் படைகளுக்கே நேரலாயிற்று. அதாவது உணவுப் பஞ்சம் நேர்ந்தது. இலட்சக் கணக்கான வீரர்களும், ஆயிரக்கணக் கான போர் யானைகளும், வண்டி இழுக்கும் மாடுகளும் ஒரே இடத்தில் இருந்துகொண்டு எவ்வளவு காலத்துக்கு உணவு பெற முடியும்? வடபெண்ணைக் கரையிலிருந்து காஞ்சி வரையில் உள்ள வழியில் புலிகேசியின் படைகளுக்கு யாதொரு உணவுப் பொருளும் கிடைக்கவில்லை. ஏனெனில், வட பெண்ணையிலிருந்து மெல்ல மெல்லப் பின்வாங்கி வந்த பல்லவ சைனியம், வாதாபி படைக்கு உணவுப் பொருள் ஒன்றும் கிடைக்காதபடி நன்றாய்த் துடைத்து விட்டிருந்தது.


அவ்வாறே, காஞ்சியைச் சுற்றிலும் நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் உள்ள கிராம மக்களையெல்லாம் சூனியமாக விட்டு விட்டு ஜனங்கள் போய் விட்ட படியால், வாதாபிப் படைக்கு உணவுப் பொருள் எதுவும் கிடைக்கவில்லை.

இரண்டு மூன்று மாத காலத்திற்குள் காஞ்சியைச் சுற்றியிருந்த காடுகள், தோட்டங்கள் எல்லாவற்றையும் வாதா பியின் யானைகள் அழித்துத் தின்று விட்டன. அப்புறம் அவற்றுக்கு ஆகாரம் தேடுவதற்காகப் பல காத

தூரம் போக வேண்டியிருந்தது. அப்படிப் போனாலும் அந்த வருஷத்துக் கடுங் கோடையில் பசுமையைக் கண்ணால் பார்ப்பதே அபூர்வமாயிருந்தது.

இதையெல்லாம் காட்டிலும் மிகப் பயங்கரமான இன்னோர் அபாயம், கோடை முற்றியபோது வாதாபிப் படைகளுக்கு ஏற்பட்டது. அதாவது, குடிதண்ணீருக்கே பஞ்சம் உண்டாகி விட்டது.

அந்த வருஷத்தில் காஞ்சியைச் சுற்றிலும் ஏழெட்டுக் காத தூரம் பரவிய பிரதேசங்களில் சில அதிசயங்கள் நடந்து வந்





தன. கார்த்திகை, மார்கழியில் தண்ணீர் நிறைந்து ததும்பிக் கொண்டிருந்த பெரிய பெரிய ஏரிகளெல்லாம், தை, மாசி மாதத்தில் எப்படியோ திடீர் திடீரென்று கரை உடைத்துக்கொண்டு சுற்றுப் பிரதேசங்களை வெள்ளத்தில் மூழ்கடித்தன. இது காரணமாக, சித்திரை மாதத்தில் ஏரிகளில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லை.

ஆங்காங்கு இருந்த கிணறுகளும், குளங்களும், ஏரிகள் உடைத்துக்கொண்டு வெள்ளம் வந்தபோது தூர்ந்து போய் விட்டன. எங்கேயாவது கொஞ்சம் தண்ணீர் கண்டால் குடிப்பதற்குப் பயனில்லாதபடி அழுகி நாற்றமெடுத்துக் கிடந்தது.

அந்த நாளில் பாலாற்றில் மூன்று இடங்களில் அணைக்கட்டு கட்டித் தண்ணீரைத் தேக்கி வைத்திருப்பார்கள். வேனிற் காலத்தில் சிறிது சிறிதாக விடுவார்கள். இந்த வருஷத்தில் அந்தத் தேக்கங்களை முன்னமே உடைத்து விட்டிருந்தபடியால் கோடைக் காலத்தில் பாலாறும் வறண்டு விட்டது. பாலாறு வறண்ட காரணத்தினால் காஞ்சியையும் கடலையும் ஒன்று சேர்ந்த கால்வாயிலும் தண்ணீர் வற்றிப் போய்விட்டது. கோட்டையைச் சுற்றியிருந்த அகழித் தண்ணீரோ, இரத்தமும் நிணமும் சேர்ந்த சேற்றுக் குட்டையாக மாறியிருந்தது.

எனவே, வாதாபியின் இலட்சக்கணக்கான வீரர்களுக்கும் யானைகள், குதிரைகள், மாடுகள் எல்லாவற்றிற்கும் பாலாற்றில், ஊற்றெடுத்தே குடிதண்ணீர் கிடைக்க வேண்டியிருந்தது.

பசி, தாகங்களின் கொடுமையினால் போர் யானைகள் அவ்வப்போது வெறி பிடித்துச் சிதறியோட, அவற்றின் கால்களில் மிதிபட்டு வீரர்கள் பலர் எமலோகம் சென்றார்கள்.

ஆனி மாதத்திலே ஒருநாள் வராகக் கொடி வானளாவப் பறந்த கூடாரத்திற்குள்ளே புலிகேசியின் யுத்த மந்திராலோசனை சபை கூடிற்று. முன்னே வடபெண்ணை நதிக் கரையில் நாம் பார்த்த அதே படைத் தலைவர்கள் ஏழெட்டுப் பேர், எதிரில் விரித்திருந்த கம்பளத்தில் உட்கார்ந்திருக்க, வாதாபி மன்னன் தந்தச் சிங்காதனத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்தான்.

முன்னைக் காட்டிலும் புலிகேசியின் முகத்தில் கடூரமும் கோபமும் அதிகமாகக் கொதித்துக் கொண்டிருந்தன. படைத் தலைவர்களைப் பார்த்து, அவன் கூறினான்: "இந்த மகேந்திர வர்மனுக்குத் தகப்பன் பெயர் சிம்மவிஷ்ணு; மகன் பெயர் நரசிம்மன். ஆனால், மகேந்திரனோ வெறும் நரியாக இருக்கிறான். வளையில் நரி புகுந்து கொள்வது போல், இவன் கோட்டைக்குள்ளே புகுந்து கொண்டிருக்கிறான். நரி வளையிலிருந்து வெளியே வருமென்று எத்தனை நாளைக்குத்தான் காத்துக் கொண்டிருப்பது? உங்களில் யாருக்காவது ஏதாவது யோசனை தோன்றுகிறதா?"

படைத் தலைவர்கள் மௌனமாயிருந்தார்கள். ஒருவராவது வாய் திறந்து பேசத் துணியவில்லை.

"ஏன் எல்லோரும் மௌனம் சாதிக்கிறீர்கள்! வெற்றி மேல் வெற்றி கிடைத்துக்கொண்டிருந்தபோது, நான் நீ என்று எல்லோரும் யோசனை சொல்ல முன் வந்தீர்கள். யோசனை தேவையாயிருக்கும்போது வாயை மூடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகா! நமது பிக்ஷு மட்டும் இப்போது இங்கிருந்தால்...?" என்று சொல்லிப் புலிகேசி பெருமூச்சு விட்டான். சபையில் ஒருவன், "பிரபு! பிக்ஷுவைப் பற்றி எந்தவிதமான தகவலும் வரவில்லையா?" என்று கேட்டான்.

"பிக்ஷுவிடமிருந்து சேதி வந்து நெடுங்காலம் ஆகிறது. வடபெண்ணைக் கரையில் வஜ்ரபாஹு என்னும் களப்பாளத் தலைவனிடம் அனுப்பிய ஓலைக்குப் பிறகு அவரிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. மதுரைப் பாண்டியனைப் பார்ப்பதற்கு அவர் போயிருந்த சமயத்தில், ஏதேனும் நேர்ந்துவிட்டதோ, என்னவோ? ஆகா! பிக்ஷு மட்டும் இப்போதிருந்தால் உங்களைப் போல விழித்துக் கொண்டு இருப்பாரோ? ஒற்றர் தலைவரே! புத்த பிக்ஷு என்ன ஆகி



யிருப்பா. ரென்று கண்டு பிடிக்கும் படியாக எட்டு மாதத்திற்கு முன்னாலேயே சொன் னேனே? இதுவரை ஏதாவது தகவல்

கிடைத்ததா?'' என்று கேட்க, ஒற்றர் படைத் தலைவன் தலை குனிந்து கொண்டான்.

பிறகு புலிகேசி அங்கே எல்லோருக்கும் முதலில் இருந்தவனைப் பார்த்து, "சேனாதிபதி, உமக்கு என்ன தோன்றுகிறது? முற்றுகையைத் தொடர்ந்து நடத்த வேண்டியதுதானே? மகேந்திர பல்லவனைப் பணியச் செய்ய இன்னும் எத்தனை காலம் பிடிக்குமென்று நினைக்கிறீர்?'' என்று கேட்டான்.

அதற்கு வாதாபி சேனாதிபதி, "மதில் மேல் காணப்படும் பல்லவ வீரர்கள் கொஞ்சங் கூட வாட்டமின்றிக் கொழுத்தே காணப்படுகிறார்கள். ஆனால், நம்முடைய வீரர்களுக்கு இப்போது அரை வயிறு உணவுதான் கொடுக்கிறோம். இன்னும் ஒரு மாதம் போனால் அதுவும் கொடுக்கமுடியாது. சுற்றுப் புறத்தில் பத்துக் காத தூரத்திற்கு ஒரு தானிய விதை கூடக் கிடையாது'' என்றார்.

புலிகேசியின் முகத்தில் கோபம் கொதித்தது. "ஆமாம்! ஆமாம்! எப்போது பார்த்தாலும் இந்தப் பஞ்சப் பாட்டுத்தான்! இம்மாதிரி மூக்கால் அழுவதைத் தவிர வேறு ஏதாவது யோசனை சொல்லுவதற்கு இங்கு யாரும் இல்லையா?'' என்று கோபக் குரலில் புலிகேசி கேட்க, படைத் தலைவர்களில் ஒருவன், "பிரபு! காவேரிக் கரையில் ஆறு மாத காலமாகப் பாண்டிய ராஜா காத்துக்கொண்டிருக்கிறார். சோழ வள நாட்டில் சென்ற வருஷம் நன்றாக விளைந்த தானியம் ஏராளமாக இருக்கிறது. ஜயந்த வர்ம பாண்டியருக்கு ஓலையனுப்பினால், ஒரு வேளை அவர் உணவு அனுப்பக்கூடும்'' என்றான்.

இதைக் கேட்ட புலிகேசி சற்று நேரம் ஆழ்ந்த யோசனையில் இருந்தான். பிறகு திடீரென்று துள்ளிக் குதித்து எழுந்து, எல்லாரையும் ஒருதடவை சுற்றிப் பார்த்துவிட்டு, "என்ன செய்வதென்று தீர்மானித்து விட்டேன். இனிமேல் நான் இங்கேயே சும்மா உட்கார்ந்திருந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும். சேனாதிபதி! நீர் இங்கேயே நமது சைனியத்தின் பெரும் பகுதியுடன் முற்றுகையை நடத்திக்கொண்டிரும். ஓர் இலட்சம் வீரர்களுடன் நான் தெற்கே புறப்பட்டுச் சென்று பாண்டிய மன்னனை நேரில் பார்த்துவிட்டு வருகிறேன். யானைப் படை என்னுடன் வரட்டும். ஆஹா! வாதாபியிலிருந்து புறப்பட்ட போது கொழு கொழுவென்றிருந்த நம் யானைகள் உணவில்லாமல் எப்படி மெலிந்து போய்விட்டன! காவேரிக் கரையில் நம் யானைகளுக்கு உணவு கிடைக்குமல்லவா?'' என்றான்.

அப்போது ஒற்றர் படைத் தலைவன், "பிரபு! தாங்கள் அப்படிச் சிறு படையுடன் போவது உசிதமா? பாண்டியனுடைய நோக்கம் எவ்விதம் இருக்குமோ?'' என்று கூறியதற்குப் புலிகேசி, "பாண்டியனுடைய நோக்கம் என்னவாக இருந்தாலும் என்ன? அவன் நம்மோடு போர் செய்யத் துணிய மாட்டான். அவன் மோசக் கருத்துள்ளவனாயிருந்தாலும் என்ன செய்து விட முடியும்? காவேரிக் கரையில் ஒளிந்து கொள்வதற்குக் கோட்டை ஒன்றும் இல்லை. எதிரி போர்க்களத்தில் நிற்கும் வரையில் எனக்குப் பயமும் இல்லை'' என்றான்.

இரண்டாம் அத்தியாயம்

யானைப் பாலம்

அந்த வருஷத்திலே ஆனி மாதக் கடைசியிலேயே காவேரியிலும் கொள்ளிடத்திலும் வெள்ளம் வந்துவிட்டது. வாதாபிச் சக்கரவர்த்தியும் அவருடைய சைனியமும் இரண்டு வாரம் பிரயாணம் செய்து கொள்ளிடக் கரைக்கு வந்து சேர்ந்தபோது, அந்த நதியில் இரு



அருள்வாக்கு

ஒரு தேசத்தின் பண்புக்கு அளவுகோல் எது? ஒரு நாடு என்று இருந்தால் அதில் எல்லோரும் பண்பாளர்களாக (cultured) இருக்க முடியாது. திருடன், பொய்யன், மோசக்காரன் எல்லோரும் இருக்கத்தான் செய்வார்கள். இப்படிப்பட்டவர்கள் இருந்தாலும் 'இந்தத் தேசத்தில் பண்பு இருக்கிறது. கெடுதலானவர்கள் இருந்தாலுங்கூட இந்த நாடு பிழைத்துப் போகும்' என்று தெரிந்து கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும்? ஒரு நோயாளிக்குப் பல கோளாறுகள் இருந்தாலும் டாக்டர் இருதயத்தைச் சோதனை செய்து பார்த்துவிட்டு, 'இருதயம் நன்றாக இருக்கிறது; ஆகவே பயமில்லை' என்கிறார் அல்லவா? அதுபோல ஒரு தேசத்தில் கோளாறுகள் இருந்தாலும், அதன் பண்பாட்டை உரைத்துப் பார்க்க ஓர் இருதய ஸ்தானம் இருக்கிறதா?



இருக்கிறது. ஒரு தேசத்தின் பண்பு உயர்ந்திருக்கிறது; மனோபாவங்கள் உயர்ந்திருக்கின்றன; அங்கங்கே அழுக்குகள் இருந்தாலும் மொத்தத்தில் அது சுத்தமாக இருக்கிறது என்பதை உரைத்துப் பார்ப்பதற்கு அந்தத் தேசத்து மகா கவிகளின் (இலக்கியகர்த்தாக்களின்) வாக்கே ஆதாரமாகும். ஒரு தேசத்தின் பண்புக்கு இருதயமாக, அல்லது உரைகல்லாக இருப்பது அந்த நாட்டு மகாகவியின் வாக்குத்தான்.

இலக்கிய கர்த்தர்களில் உயர்ந்தவர்கள், மட்டமானவர்கள் எல்லோரும் இருப்பார்கள். இவர்களில் அசுத்தமே இல்லாதவனின் வார்த்தைதான் அழுக்கின் கனம் இல்லாததால் காலப் பிரவாகத்தில் அமுங்காமல், என்றென்றும் மேலேயே விளங்கிக் கொண்டிருக்கும். அப்படிப்பட்டவனின் வாக்கே நமக்குக் கலாசார விஷயங்களில் பிரமாணமாகும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

கரையையும் தொட்டுக்கொண்டு தண்ணீர்ப் பிரவாகம் போய்க்கொண்டிருந்தது.

கொள்ளிடத்துக்கு அக்கரையில் சேந்தன் ஜயந்தவர்ம பாண்டியன் தன்னுடைய சைனியத்துடன் தங்கிப் பாசறை அமைத்திருந்தான். அவனோடு கொடும்பாளூர் மாதவக் களப்பாளனும் சேர நாட்டுச் சிற்றரசன் இளஞ்சேரலாதனும் தங்கியிருந்தார்கள்.

பாண்டியன், தன் சகோதரியை மாமல்லர் கல்யாணம் செய்துகொள்ள மறுத்ததன் காரணமாகப் பல்லவர் மீது பெரிதும் கோபம் கொண்டிருந்தான். காஞ்சி முற்றுகை ஆரம்பித்த சில தினங்களுக்கெல்லாம் பாண்டிய சைனியம் காவேரிக்கும் கொள்ளிடத்துக்கும் நடுவிலிருந்த பகுதியை அடைந்துவிட்டது. பாண்டியனுக்கு அக் காலத்தில் கப்பம் கட்டி கொண்டிருந்த கொடும்பாளூர் மாதவக் களப்பாளனும் சேரன் இளஞ்சேரலாதனும் ஜயந்தவர்மன் விருப்பத்தின்படி தாங்களும் தங்கள் சிறு சைனியங்களுடன் வந்திருந்தார்கள். அக் காலத்தில் கொள்ளிடத்திற்குத் தெற்கேயிருந்த தமிழ் மன்னர்கள் அனைவரும் பல்லவர்களிடம் விரோதம் கொண்டிருந்தார்கள். எனவே, ஜயந்தவர்மனும் மற்ற இரு குறுநில மன்னர்களும் இச்சமயம் வாதாபிச் சக்கரவர்த்தியுடன் சேர்ந்துகொண்டு, பல்லவ வம்சத்தாரிடம் தங்களுக்கிருந்த வர்மத்தைத் தீர்த்துக் கொள்ளச் சித்தமாயிருந்தார்கள். இவர்களுடன், சமீபத்திலேதான் உறையூர்ச் சிம்மாசனம் ஏறியிருந்த பார்த்திப சோழன் மாத்திரம் சேர்ந்துகொள்ளவில்லை. பார்த்திப சோழனும் பல்லவர் ஆதிக்கத்தை வெறுத்தானாயினும் வடநாட்டிலிருந்து படையெடுத்து வந்தவர்களுடன் சேர்ந்து கொள்வதற்கோ, அவர்களுடைய தயவை நாடுவதற்கோ அவனுக்கு மனம் வரவில்லை.

மகேந்திர பல்லவரின் தந்தை சிம்மவிஷ்ணுவின் காலத்திலிருந்து கீழைச் சோழநாடு பல்லவரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதை முன்னமே தெரிந்து கொண்டோமல்லவா? மற்றபடி எது எப்படிப் போனாலும், இந்தச் சந்தர்ப்பத்தில் கீழைச் சோழ நாட்டை, தான் கைப்பற்றிப் பாண்டிய இராஜ்யத்துடன் சேர்த்துக் கொள்ளுவதென்று ஜயந்தவர்

மன் தீர்மானித்திருந்தான்.

ஆனால், கீழைச் சோழ நாட்டு மக்கள் இதைச் சிறிதும் விரும்பவில்லை. அவர்கள் தலைமுறை தலைமுறையாகச் சைவ சமயப்பற்று உள்ளவர்கள். சமீப காலமாகத்தில் திருநாவுக்கரசருடைய மகிமையினால் மகேந்திர பல்லவர் சைவ சமயத்தைத் தழுவியது முதல், சோழ நாட்டு மக்கள் பல்லவ சக்கரவர்த்தியிடம் விசேஷ பக்தி கொண்டிருந்தார்கள். எனவே, 'ஜயந்தவர்ம பாண்டியன் எதிர்பார்த்தபடி சோழ நாட்டார் அவனை உற்சாகமாக வரவேற்கவில்லை. இதனாலும் பல மாத காலம் கொள்ளிடக் கரையிலேயே காத்துக் கொண்டிருக்க நேர்ந்ததாலும், ஜயந்தவர்மன் எரிச்சல் கொண்டிருந்தான். காஞ்சி நகர் முற்றுகை நெடுங்காலம் நீடித்ததில் வாதாபிச் சக்கரவர்த்தியிடம் அவனுக்கு முன்னமிருந்த மரியாதை குறைந்துபோயிருந்தது. எனவே, கொள்ளிடத்துக்கு அக்கரையில் புலிகேசி வந்துவிட்டது தெரிந்தபிறகும் அவனைப் போய்ப் பார்க்க பாண்டியன் எவ்விதப் பிரயத்தனமும் செய்யவில்லை. கொள்ளிடத்தில் பிரவாகம் அதிகமாயிருந்ததைச் சாக்காக வைத்துக்கொண்டு பரிவாரங்களுடன் அக்கரை வருவதற்குத் தன்னிடம் போதிய படகுகள் இல்லையென்று செய்தியனுப்பினான்.

புலிகேசி அதற்கு மறுமொழியாக கொள்ளிடத்துக்குப் பாலங் கட்டிக் கடந்து நதியின் தென் கரைக்கு வந்து, தானே பாண்டியனைச் சந்திப்பதாகச் சொல்லி அனுப்பினான். இதைக் கேட்டபோது, பாண்டியனுக்கு முதலில் வேடிக்கையாகத் தோன்றியது. "கொள்ளிடத்துக்காவது, பாலங் கட்டவாவது! - இதென்ன பைத்தியம்!" என்று சொல்லிச் சிரித்தான்.

ஆனால், மறுநாள் பாண்டியன் தான் தண்டு இறங்கிய இடத்திலிருந்து கொள்ளிட நதியை நோக்கியபோது ஓர் அதிசயக் காட்சியைக் கண்டான். கொள்ளிடத்துக்கு உண்மையாகவே பாலம் போட்டிருந்தது. சாதாரணப் பாலம் அல்ல; நதியில் யானைகளை வரிசையாக நிறுத்தி வைத்து, அவற்றின் முதுகின் மேல் பலகைகளைக் கோத்து அதிசயமான பாலம் அமைத்திருந்தார்கள்! இந்த அபூர்வமான காட்சியானது பாண்டிய மன்னனுக்கு வாதாபிச் சக்கரவர்த்தியின் மேல் மறுபடியும் மரியாதையை உண்டாக்கிற்று.


அந்த யானைப் பாலத்தின் வழியாகப் புலிகேசி தன்னுடைய முக்கிய பரிவாரங்களுடன் ஆற்றைக் கடந்து வரவே, பாண்டியனும் மற்ற இரு குறுநில மன்னர்களும் அவனுக்குத் தக்க மரியாதை செய்து இராஜோபசாரத்துடன் வரவேற்றார்கள்.

பேரரசர்கள் இருவரும் மூன்று தினங்கள் பரஸ்பரம் அளவளாவி மகிழ்ந்தார்கள். பல்லவர்களுடைய கொட்டத்தை அடக்க வேண்டும் என்பதில் இருவருக்கும் பூரண மன ஒற்றுமை இருந்தது. எனவே, பல்லவ வம்சத்தை அடியோடு அழித்து விட வேண்டும் என்றும், காஞ்சி நகரம் வரையில் பாண்டிய ராஜ்யத்துடன் சேர்ந்து விட வேண்டுமென்றும், காஞ்சிக்கு வடக்கேயுள்ள பகுதியைச் சளுக்க சாம்ராஜ்யத்துடன் சேர்த்து விட வேண்டுமென்றும் அவர்கள் ஏகமனதாக முடிவு செய்தார்கள்.

ஜயவந்தர்ம பாண்டியன் தானும் தன் சைனியத்துடன் காஞ்சிக்கு அப்போதே புறப்பட்டு வருவதாகச் சொன்னபோது, காஞ்சியைக் கைப்பற்றும் கௌரவத்தைத் தனக்கே விட்டு விட வேண்டுமென்று புலிகேசி வற்புறுத்தினான். காஞ்சிக் கோட்டை பணிந்ததாகக் கேள்விப்பட்டவுடனே பாண்டியன் அங்கிருந்து கிளம்பிக் காஞ்சிக்கு வரலாமென்றும், இப்போதைக்கு வாதாபிச் சைனியத்துக்கு உணவுப் பொருள் மாத்திரம் கொடுத்து உதவும்படியாகவும் புலிகேசி கூற, பாண்டியனும் அதற்கிணங்கி, தன் சைனியத்துக்காகச் சேகரித்து வைத்திருந்த உணவுப் பொருள் அவ்வளவையும் சளுக்கப் படைக்குக் கொடுத்துதவ ஒப்புக்கொண்டான்.

(தொடரும்)

சென்னை வீதிகளில் சித்தன் பட்ட பாடு!



"கொஞ்சம் பிசகினாலும் பப்ளிக் நியூசென்ஸ்லே போலீஸ் பிடிச்சிடும்! யோசிச்சுப் பண்ணுங்க!" இப்படி ஆரம்பத்திலேயே எச்சரிக்கை விடுக்கப்பட்டது அலுவலகத்தில். 'அண்ணாமலை' தொலைக்காட்சித் தொடரில் தோன்றும் சூதாடிச்சித்தனை, படப்பிடிப்பிலிருந்து கடத்திக் கொண்டு வந்து பொதுமக்கள் மத்தியில் உலவ விடுவதுதான் அந்த ஆபத்தான விளையாட்டு!

சென்னையை அடுத்த அகரம் கிராமம். அங்கே அமானுஷ்யம் சூழ்ந்த பழைய வீடொன்றில் அமைதியாக, நடந்து கொண்டிருந்தது அண்ணாமலை படப்பிடிப்பு. படக்குழுவுக்கு மத்தியில் 'தனித்து' அடையாளம் தெரியக்கூடிய அந்த உருவத்தை ரகசியமாகத் தேடினோம். சித்தன் அகப்படவில்லை. தொடரில் வருகிற மாதிரி நிஜமாகவே இந்த ஆள் ஒரு விவகாரமான ஜித்தனாக இருப்பாரோ என்று குழம்பியபடி, அந்தப் பழைய பங்களாவின் காம்பௌண்ட் ஓரமாய் புதர் சூழ்ந்து நின்று கொண்டிருந்த புளிய மரத்தின் நிழலில் ஒதுங்கினோம். மரத்தின் கிளைகளில் உஷ்ஷ்... உய்ய் என்று உராய்ந்தபடி ஒலியெழுப்பிக் கொண்டிருந்தது காற்று! அந்தச் சூழ்நிலை நெஞ்சுக்குள் கொஞ்சமாய்க் கிலியைக் கிளப்ப, ஐடியாவைக் கைவிட்டு எஸ்கேப் ஆகிவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தபோது... ஒருகணம் உலுக்கியே விட்டது அந்தக் கலவரக் குரல்!

"மாயவலைவீசி தங்க மீனைப் பிடிக்கப் பாக்குறே. தொண்டையிலே முள்ளு குத்தப் போறதுதான் மிச்சம்! அப்புறம் விக்கி விக்கிச் சாகப் போறே!"

குரல் வந்த திசையில் அலறியடித்து நோக்கினால், புளியமரப் புதரிலிருந்து உடுக்கையோடு வந்து நின்றார் சூதாடிச்சித்தன்!

தமது உருண்டை விழிகளை அகலவிரித்து நம்மை

"சனம் குவியற வீதியிலே.. பணம் விளையிற வீதியிலே... சாக்கடை ஓடுதுடா... அதைச் சட்டுன்னு சரிபண்ணுடா... இல்லேன்னா சரிபட்டு வராதுடா"





• ஐஸ்கிரீமா?

• மாணவிகள் சூழ





• கைரேகை



• பழனியம்மா

ஆழமாய் நோக்கிய சித்தனிடம் நமது சித்தத்தில் உதித்த ஐடியாவைச் சொல்ல, ''நான் பல பேரை ஆட்டி வைக்கிறேன். என்னை ஆட்டி வைக்கிற ஆளுகிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டு வா! சுளுவா போகலாம்'' என்று அதிகாரமாய்ச் சித்தன் கைகாட்டிய திசையில் நின்று கொண்டிருந்தார் அண்ணாமலைத் தொடரின் இயக்குனர் சி.ஜே. பாஸ்கர்!

''இந்த ஆள், கேரக்டருக்காகச் சித்தனாவே மாறிட்டார்... ஷூட்டிங் இல்லாத நேரத்துலே கூட நாங்க கவனமா பார்த்துக்கிறோம். நீங்களும் கவனமா ஹேண்டல் பண்ணுங்க'' என்று அவர் பங்குக்குக் கொஞ்சம் எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தார். அடுத்த விநாடி நமது அம்பாசிடரில் சித்தனை அள்ளிப் போட்டுக் கொண்டு நகருக்குள் விரைந்தோம். எள்ளு விழுந்தால் எண்ணெய் ஆகிவிடும் தி.நகர் ரங்கநாதன் தெருவுக்குள் சித்தனை ரிலீஸ் செய்துவிட்டு, பத்தடி இடைவெளியில் பின் தொடர்ந்தோம்.

சித்தன் கேமரா கட்டுப்பாடுகளைத் துறந்து, மக்கள் மத்தியில் பிரவேசித்து அரை நிமிடம் கூட ஆகியிருக்காது. ''ஆ!... சூதாடிச் சித்தன்... இங்கே பாரு சித்தன்...!'' என்று ஆச்சர்யம் பட்பட்டென்று முகங்களில் ஒட்டிக் கொள்ள..... சித்தனைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டது மக்கள் கூட்டம். இந்தக் கூட்டத்திற்கெல்லாம் பயப்படாத சூதாடிச்சித்தன், தொடரில் செய்யும் அதே மேனரிஸங்களை அநாயாசமாகச் செய்தபடி, கையிலிருந்த உடுக்கையை டங்! டங்!



• ஆட்டோகிராப்

டங்!டங்! என்று அறைந்து ஒலியெழுப்பியபடி மெல்ல நடக்க... கடைச் சிப்பந்திகள், முதலாளிகள் என்று வேறுபாடு மறந்து அப்படியப்படியே வேலைகளைப் போட்டு விட்டுத் தெருவுக்கு ஓடி வந்து விட்டனர்.

"அய்யய்யோ... சூதாடிச்சித்தன் இங்கே எங்கய்யா வந்தான்? ரங்கநாதன் தெருவுக்கு என்ன ஆகப் போகுதோ தெரியலியே" என்று கூட்டத்திற்குள்ளிருந்து பலரும் அலறினர். அதற்குள் சித்தனிடமிருந்து முதல் தீர்க்கதரிசனம் வெளிப்பட, எல்லோரும் காதுகளைத் தீட்டிக் கொண்டு உஷாரானார்கள்.

"சனம் குவியற வீதியிலே.. பணம் விளையிற வீதியிலே... சாக்கடை ஓடுதுடா... அதைச் சட்டுன்னு சரிபண்ணுடா... இல்லேன்னா சரிபட்டு வராதுடா"

டங்! டங்! டங்!டங்! என்று உடுக்கையை ஓங்கி அறைந்தபடி சாக்கடை கசிந்து கொண்டிருந்த இரும்பு வட்டத் தட்டில் பட்டென்று அமர்ந்து விட்டார் சித்தன்!

சித்தனைச் சூழ்ந்திருந்த கூட்டம் நெட்டித் தள்ளியதில், அவரது காலடியில் வந்து விழுந்தார் கையில் டீ.வி. ரிமோட் கார்டுகளை வைத்து விற்றுக் கொண்டிருந்த ஓர் இளைஞர், "சாமி வியாபாரம் ரொம்ப டல்லா இருக்கு... பொழப்பு நடக்குமா?'' என்று அந்த இளைஞர் கேட்க...

"ஊருக்கெல்லாம் படம் காட்டப் போற.. அதுக்கு அச்சாரமாத்தான் இப்போ அஞ்சு, பத்துக்கு விக்கிறே.."

என்று அடுத்த ஆருடம் சித்தனிடமிருந்து அவிழ்ந்தது. அவ்வளவுதான் அந்த இளைஞர் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்து... தெருவில் விற்றுக் கொண்டிருந்த பாதாம்கீர் பாட்டில் ஒன்றை வாங்கிக் கொடுத்தார். அதை வாங்கிய சித்தன்... சுவைத்துப் பார்ப்பது போல பாசாங்கு செய்துவிட்டு தெருவில் பாதாம்கீரால் புரியாத மொழியில் எழுதியதை ஆச்சர்யம் விலகாமல் வேடிக்கை பார்த்தது மக்கள் திரள்! கொஞ்ச நேரத்தில் இளநீர், ஐஸ்கிரீம், பெப்சி என்று ஆள் ஆளுக்குப் போட்டி போட்டுக் கொண்டு வாங்கி வந்து தர... எல்லாவற்றையும் இப்படியே வீணடித்தார் சித்தன்!



• "என்னால முடிஞ்சது"... பூக்கார லட்சுமி

ரங்கநாதன் தெருவிலிருந்து வெளியேறும் முன்பு எட்டி நின்று வேடிக்கை பார்த்த பெண்கள் கூட்டம் சித்தனைத் தைரியமாய் நெருங்கியது. கைகூப்பி வணங்கிய பெண்கள், தங்கள் குடும்பம், குழந்தைகள் எதிர்காலம் பற்றி கேட்டுத் துளைக்க.. துவண்டு விடாமல் ஆருடங்களை அடுக்கு மொழியில் அள்ளி வீசி... அங்கே கூடியிருந்த முகங்களில் மகிழ்ச்சி வெள்ளம் பாய்ச்சி விட்டுப் புறப்பட்டார் சித்தன்... ஆனால் அங்கே வந்து சேர்ந்த போலீசார் விட வேண்டுமே?

"ஏய்... சாமி... யாரு நீ..?" என்று அதட்டிய போலீசுக்கு... ''இவர் அண்ணாமலை சூதாடிச்சித்தன்! கிட்டப் போனா சபிச்சுடுவார்... அது அப்படியே பலிக்கும்! அவ்வளவு சக்தி'' என்று பொதுஜனம் எச்சரிக்கை விடுத்ததும்... போலீசார் ஒன்றும் புரியாமல் ஒருகணம் பயந்து விலகினர்.

சித்தனை அங்கிருந்து அப்புறப்படுத்த இதுதான் தருணம் என்று நாம் எண்ணினாலும், எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை சித்தன். ஒருவழியாக மதிய சாப்பாட்டு வேளை நெருங்கிவிட்டதால்

ரங்கநாதன் தெருவின் எதிரிலிருந்த சரவண பவன் ஹோட்டலுக்குள் அழைத்துக் கொண்டு போனோம்.

இவரது தோற்றத்தைப் பார்த்த ஹோட்டல் செக்யூரிட்டி, "யோவ்! சாமி... வெளியே போ... வெளியே போ... இங்கேல்லாம் சாப்பிட முடியாது" என அடித்து விரட்டாத குறையாகத் தடுக்க...

"சாப்பிட பணமிருக்கு! இதில் சங்கடம் உனக்கெதுக்கு" என்று சித்தன் விந்தையாகப் பேசியும் விடவில்லை அந்த செக்யூரிட்டி! அதற்குள் அங்கே சாப்பிட வந்த சித்தனின் பக்தகோடிகள் ஆட்டோகிராப் கேட்டு நச்சரிக்க... கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் நடந்த ஆட்டோகிராப் மற்றும் போட்டோகிராப் செஷனைக் கண்டு மிரண்டு



• பூட்டுக்காரர்...

போன ஹோட்டல் சிப்பந்திகள், ஹோட்டலின் சூப்பரவைசர் முருகனை விட்டு, சித்தனை ஏ.சி அறைக்கு அழைத்துக் கொண்டு வந்தனர். ஹோட்டல் சரவண பவன் வரலாற்றில் கோவணத்தோடு உள்ளே நுழைந்த ஒரே கஸ்டமர் சூதாடிச்சித்தன்தான் என்ற பெருமையோடு தயிர்சாதம் சாப்பிட்டு வெளியேறினார் சித்தன்.

அடுத்து அவர் பிரவேசித்தது பாண்டிபஜார் பகுதி. பிளாட்ஃபார்மில் பூட்டு சாவி ரிப்பேர் செய்து கொண்டிருந்த ஹரி என்பவரை நெருங்கி, உடுக்கைக்கு உயிர் கொடுத்ததுதான் தாமதம். பயந்து வெலவெலத்துப் போன அவர், பட்டென்று இரண்டு ரூபாய் நாணயத்தைத் தூக்கிச் சித்தன் கையில் கொடுத்து விட்டார்.

"எல்லார் மனசையும் திறக்கிறவன் நீ... திருட்டுச் சாவிக்குத் துணை போகாதே" என்று சொல்லிவிட்டு இன்னும் கொஞ்ச தூரம் நடந்தார்.

சித்தனைத் தைரியமாய் வழிமறித்தார் வணிக வளாகத்தில் துப்புரவுப் பணிசெய்து வரும் பழனியம்மா.

"ஏன் சாமி... உப்பை அள்ளி அள்ளித் தின்னே. இப்போ தண்ணி குடிக்கிறேனு... நேத்து சொன்னியே.. அது எம்மாம்பெரிய நெசம்" என்று ஆச்சர்யமாய் அந்தப் பெண் மணி கேட்க... "உனக்கு உலகம் புரியுது... உங்குடும்பத்துலே கலகமில்லே போய்ட்டு வா...!" என்று ஆசி வழங்கிய சித்தன்... பிளாட்ஃபார கைரேகை நிபுணி மாரியிடம் கையைக் காட்டினார்.

"என்னப்பா... என்னையே சோதிக்கிறியா? நீயே ஊருக்கெல்லாம் குறி சொல்றவன்... உனக்குக் குறி சொல்ல உலகத்துலே ஒருத்தனும் பொறக்க லேன்னு சொல்லுது உன் ரேகை...!" என்று மாரி பின்வாங்கிக் கொள்ள.. சித்தன் பிளாட்ஃபார்மில் நடந்தார்.

சித்தனை அடையாளம் கண்டு கொண்டனர், வேனில் குழுவாகப் போய்க் கொண்டிருந்த எஸ்.ஐ.இ.டி. கல்லூரி மாணவிகள். கொஞ்ச தூரத்தில் வேனை நிறுத்திவிட்டு அத்தனை பேரும் இறங்கி ஓடி வந்து சூழ்ந்து கொண்டு "அருமையாப் பண்றீங்க... நடிக்கிற மாதிரியே தெரியலே..!" என்று கைகுலுக்கி... ஆட்டோகிராப் வாங்கி...

இதற்குள் சித்தனைச் சுற்றி குழுமிய கூட்டத்தால் பாண்டிபஜார் பகுதியில் டிராபிக்ஜாம் ஏற்பட்டு விட, அங்கிருந்து அவரை மீட்டுக் கொண்டு வந்து சேர்ந்த இடம், பாரிமுனை.

காரிலிருந்து இறங்கியதுமே, பைட் பைப்பர் பின்னால் போகிற குழந்தைகள் மாதிரி, கூட்டம் பின்தொடர ஆரம்பித்தது. சித்தன் சாலையோரம் பூ விற்றுக் கொண்டிருந்த லட்சுமியிடம் போனதுதான் தாமதம்...

"என் சக்திக்கு முடிஞ்சது இதுதான் சாமி" என்று சொல்லிவிட்டு ஒரு ரூபாய் நாணயத்தையும், இரண்டு முழப் பூவையும் கொடுக்க...

"அல்லேலூயா... அல்லேலூயா" என்று இடிமாதிரி ஒரு குரல் கேட்டது. சித்தன் சுதாரிப்பதற்குள்... "மீட்பர் வந்து விட்டார்... இறுதித் தீர்ப்பு நெருங்கிவிட்டது" என்று



• வடபழனியில்...

கூவிய படி ஐம்பது வயது மதிக்கத்தக்க மனிதர் சித்தனின் கால்களை இறுகப் பற்றிக் கொண்டார்.

"இறுதித் தீர்ப்புக்கு என்ன அவசரம் இன்னும் இருக்குது நிறைய சமரசம்" என்று அந்த அன்பரை அமைதிப்படுத்திய சித்தன், கடைசியாக தஞ்சமானது வடபழனி முருகன் கோவில் வாசலில். அங்கே வருலைக் குறி வைத்து அமர்ந்திருந்த சந்நியாசிகளோடு போய் சாந்தமாய் அமர்ந்து கொண்டார் சித்தன்.

சித்தனின் பக்கத்திலிருந்த சாமியார் மெல்ல தனது வேலையைத் தொடங்கினார்.

"சாமிக்கு எந்த ஊரு?"

"ஊரும் கிடையாது, பேரும் கிடையாது. என்னைத் தூர் வார எவனும் கிடையாது."

"சாமிக்குக் குடும்பம் இருக்கா.. வூட்டை விட்டுக் கௌம்பி எத்தனை வருஷமாச்சு?"

"குடும்பம், குட்டி எல்லாம் வெட்டி! குடுமி, தாடி வெச்சவன் விலகுவான் எட்டி."

"என்ன சாமி சித்தன் மாதிரி பேசுறீங்க?"

"சித்து தெரியாது... வித்தை தெரியாது.. செத்த சும்மாயிரு; இல்லே செத்து சும்மா யிரு" என்றதும் கதி கலங்கிப்போன சாமியார் கம்மென்று இரண்டடி ஒதுங்கி உட்கார்ந்து கொண்டார். அதற்குள் சித்தனை வேடிக்கை பார்க்கக் கூடிவிட்ட கூட்டத்தில் நின்றிருந்த செல்வம் என்ற இளைஞர் அழுதே விட்டார்.

"அய்யோ... இவர் பேரு கார்த்திகேயன்க... அண்ணாமலைத் தொடர்ல சூதாடிச்சித்தனா நடிச்சுக்கிட்டு இருந்தார். நேத்து கூட ஷூட்டிங்லே பாத்துட்டு வந்தேன்... பாவம் என்ன ஆச்சுன்னு தெரியலே; இப்படி வந்து பரதேசிகளோட உட்கார்ந்துட்டார்... நான் போய் ஃபோன் பண்ணிச் சொல்றேன் என்று கிளம்பியவரைப் பிடித்து மடக்கியதில், அவர் அண்ணாமலைத் தொடரில் நடித்து வரும் இயக்குனர் பொன்வண்ணனின் உதவியாளர் என்று தெரியவந்தது. அவருக்கும், அங்கே கூடியவர்களுக்கும் உண்மை உடைத்து, சித்தனை மீட்டு ராடன் டீ.வியில் பத்திரமாக ஒப்படைத்து விட்டுத் திரும்புவதற்குள் நாம் பட்டபாடு அந்தச் சித்தனுக்கே வெளிச்சம்.

— ஆர். சி. ஜெயந்தன்

படங்கள் : ராஜன்

சித்தன் ஜாதகம்

பாபா லெவலுக்குப் பிரபலமாகிவிட்ட சூதாடிச்சித்தன் பாத்திரத்தில் தோன்றும் சி.கார்த்திகேயன், ஈரோடு மாவட்டம் முத்தூர்காட்டுப்பாளையத்தைச் சேர்ந்த இருபத்தேழு வயது இளைஞர்.



• கார்த்திகேயன்

புதுவைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை நாடகம் முடித்து, இப்போது பொன்னர் சங்கர் கதையைப் பற்றி எம்.ஃபில் செய்து கொண்டிருக்கிறார். கே.ஏ.குணசேகரனின் 'தன்னானே', புதுவை தலக்கோல், புதுவை ராஜீவின் அபிநயவர்ஷினி, முருகபூபதி, பேராசிரியர் தஞ்சை மு. ராமசாமி போன்றோர் நடத்தி வரும் நவீன நாடகக் குழுக்களில் முக்கிய நடிகர். தேசிய நாடகப் பள்ளியின் பயிற்சிப் பட்டறையில் பயின்று திரும்பிய பிறகு, நவீன நாடகத்தின் மீது தீவிர காதலாகித் திரிந்து கொண்டிருந்தவர்.

"அண்ணாமலை தொடருக்கு நடிகர் தேவை என்ற விளம்பரத்தைச் செய்தித்தாளில் பார்த்து, புகைப் படத்தை அனுப்ப, அடுத்த மூன்று நாட்களில் அழைப்பு வந்து விட்டது" என்கிறார் சிறுகதை எழுதுவதிலும் அதிக ஆர்வம் காட்டும் கார்த்திகேயன்.

மும்பை மசாலா :

தெரியலைடா சாமி!

இந்த ஆகஸ்ட் 15ல், மும்பை கார்ப்பரேஷன் எங்களுக்குக் குப்பையிலிருந்து விடுதலை தேடித் தந்திருக்..... ம்ஹூம்..... தருவதாய் வாக்குறுதி அளித்திருக்......இல்லை இல்லை..... தரும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. 'பளபள'ப்புக்காக, அமிஷா படேல் போன்ற நட்சத்திரங்களை கமிட்டியில் வளைத்துப் போட்டிருக்கிறது. அவரே துடைப்பம் எடுத்துப் பெருக்கப் போகிறாரா, என்கிறீர்களா? "என் அறையை நானேதான் ஒட்டடையடித்து, பெருக்கி, துடைத்து, துணிமணிகளை அடுக்கி வைத்துத் துப்புரவாக்குகிறேன்... வேலையாட்கள் இல்லாதபோது!'' என்கிறாரே? முனிசிபல் ஊழியர்கள் ஒரு நாள் ஸ்ட்ரைக் செய்தால், நம் தெருக்களுக்கு அந்தப் பாக்கியம் கிட்டாதா? ''க்ளென்லினஸ் ட்ரைவ்'' ஆங்காங்கே தூக...ச்சீ.. தூள் பறக்கிறது. அதனால்தான் அதை எதிர்கொள்ள, மனிதர்களை மட்டும் நம்பிக் கொண்டிராமல், இம்முறை யானையையே அழைத்து வந்துவிட்டார்கள். குப்பை கூளங்களைக் கண்டு, மதம் பிடிக்காமலிருக்க வேண்டுமே யானைக்கு?

யானைக்கு மதம் பிடித்தால் நிகழும் அவலங்களை விட, மனிதனுக்கு மதம் பிடித்தால் ஏற்படும் பயங்கரமிருக்கிறதே.... கொடுமை! மும்பையில் மீண்டுமொரு ஜெயபாலா அஷர் சம்பவம்! சி.எஸ்.டியிலிருந்து போரிவிலி செல்லும் கடைசி ரயிலில், கடைசி ஸ்டேஷன் நெருங்கும் நடுநிசி தாண்டிய வேளையில், நன்றாகக் குடித்திருந்த ஒரு கயவன், ஒரு பத்திரிகையாளர் உட்பட நான்கைந்து நபர்கள் நிரம்பியிருந்த ஒரு கம்பார்ட்மெண்டில், சாவகாசமாக, ஒரு பன்னிரண்டு வயதுப் புத்தி சுவாதீனமற்ற காது கேட்காத, வாய் பேச முடியாதப் பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்திருக்கிறான். பத்திரிகையாளர்தான் ஏதோ எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார். அதற்கு, அந்தத் தீயவன் வாயிலிருந்து வந்த கடு சொற்களின் வெப்பம் தாளாமலேயே மற்றவர்கள் அரண்டு அடங்கி விட்டனராம். உயிருக்குப் பயந்து கொண்டு, நடந்த கோரத்துக்கு மௌன சாட்சிகளாய் வீற்றிருந்திருக்கின்றனர்! இரவு எட்டிலிருந்து காலை எட்டு மணி வரை, லேடீஸ் கம்பார்ட்மெண்ட்டில் போலீஸ் பாதுகாப்பு உண்டு. துரதிர்ஷ்டவசமாக, சம்பவம் நடந்தது பொது கம்பார்ட்மெண்ட்டில்! குடித்தவர்கள் ரயிலில் ஏறக் கூடாது என்ற சட்டத்தைத் திடமாகக் கடைப்பிடித்தால், கடைசி ரயில் காலியாகத்தான் போக வேண்டுமென்கிறார் விஷயமறிந்த காவல் அதிகாரி ஒருவர். சமூக சேவகி நவ்லீன் குமாரின் கொலையாளிகளை அடையாளம் காட்டியும், அரசியல் காரணங்களால் இயங்காமலேயே இருக்கும் காவல் துறையை நம்பி, சாமானியர்கள், வீர தீரச் செயல்களில் இறங்க முடியுமா என்கிறது, ஜன (அ) சக்தி! ஆக மொத்தம், சட்டமும் ஒழுங்கும், மட்டமான பிரச்னைகளில் மாட்டிக் கொண்டு தவிக்கின்றன.

மாட்டிக் கொண்டு தவிப்பதைக் கூட, சிலரில் வேடிக்கையாகச் சொல்ல முடியும்! பாருங்களேன்... பால் – உதவ் தாக்கரேக்களிடம் ஒரு தொழிலதிபர் "ஐயோ... தொழிலில் அயல் நாட்டவர் தலையீடு அதிகமாகிவிட்டது; அவர்களுடன் போட்டிப் போட்டு ஜெயிப்பதே பெரும்பாடு! உங்களுக்கெங்கே விளங்கும்?'' என்று புலம்பியிருக்கிறார். அதற்கு உதவ் தாக்கரே, "ஏன் விளங்காமல்? எங்களுக்கும் அயல் நாட்டவருடன் போட்டிப் போட்டு ஜெயிப்பது தானே பெரும் பிரச்னையாயிருக்கிறது?'' என்று போட்டாரே ஒரு போடு! அந்த அயல் நாட்டவர் "சோனியா'' என்பது விளங்கியதும் ஒரே சிரிப்பு! பரவாயில்லையே.... அப்பாவின் இடத்தைப் பிள்ளை தப்பாமல் பிடித்துவிடுவார் போலிருக்கிறதே? அரசியலிலும்... நகைச்சுவை உணர்விலும் கூட?



நகைச்சுவை உணர்வி



அசோசியேஷன் பிரசிடெண்ட்டான ஸ்மிதா தாக்கரே! 'நட்சத்திரங்களுக்குக் கொட்டிக் கொடுக்காதீர்கள்; 'ப்ரமோஸ்' என்ற பெயரில் வரும் விளம்பர அபத்தங்களைக் குறையுங்கள்; சினிமா விமரிசனம் என்ற பெயரில், கிரிட்டிக்குகள் தரும் 'ரேட்டிங்'குகளை விட்டொழியுங்கள்' என்கிறார். நல்ல விமரிசனங்கள் தானே தரமான படங்களை உரமிட்டு வளர்க்க உதவுகின்றன?

— ஜெயஸ்ரீ ராஜ்

• அமிஷாபடேல்

ஹும் கூட புது எல்லைகளை வகுத்திருக்கிறார்களே பாலிவுட் நட்சத்திரங்கள்? 'இடுக்கண் வருங்கால் நகைத்துக் கொண்டே ஆடுக' என்ற புது நியதியை ஏற்படுத்தி இருக்கிறார்களே? சீச்சீ!... மாதுரி தீட்சித் நிகழ்ச்சியில், அவர் தயவில் மாப்பிள்ளையைத் தேர்வு செய்தபின், வருங்கால மாப்பிள்ளையுடன் மாமனார் மாமியார் ஆடும் டான்ஸைச் சொல்லவில்லை; நம் சல்மான்கான், தனக்கு ஆறு நாட்களில் எட்டு மிரட்டல்கள் அண்டர்வர்ல்டிலிருந்து வந்திருப்பதை போலீஸ் கமிஷனருக்குத் தெரிவித்துவிட்டு, பாதுகாப்பு கோரியபோது, மீடியாவைக் கண்டு விட்டு ஒரு "ஜிக்" ஆடினாரே... "தோடாஸா ப்யார் ஹீ ஆ- தோடாஸா பாக்கி ஹை" என்று பாடிக் கொண்டே... அதைத்தான் சொல்கிறோம். யாரிடம் கொஞ்சமாகக் காதல் பிறந்திருக்கிறதென்கிறார்? சோடா ராஜனிடமிருந்து கத்தரித்துக் கொண்டு தாவூத்துடன் இணைந்திருக்கும் குரு சத்தமிடமா? தெரியலைடா சாமி!

அண்டர்வேல்டு ஆதிக்கம் குறைய நான் வழி சொல்கிறேன் என்கிறார் இந்தியன் மோஷன் பிக்சர்ஸ் ப்ரொட்யூசர்ஸ்



• சல்மான்

விடிகின்ற நேரம்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் ரூ.1,250/- ஆறுதல் பரிசு பெறும் வைர விழா வைட்டமின் சிறுகதை

இ.ஜே.தீன்

அதிகாலை தொழுகை முடிந்து பள்ளி வாசலைவிட்டு வெளியே வந்தார் கலைமான். இருள் பிரிய ஆரம்பித்த நேரம்.

பள்ளி வாசல் மினாராவில் புறாக்கள் சிறகடித்து அமரும் மெல்லிய ஓசை. நடக்க ஆரம்பித்தார். சற்றுத் தூரத்தில் சிவன் கோயிலின் மணியோசை ரீங்காரமாய் ஒலித்தது.

மாதாகோயில் பைபிள் வசனம் வாசிக்கப்படுவதும் தெளிவாய் ஒலித்தது.

'காரைக்கால் வீதியழகு' என்ற பிரபல்யமுண்டு. அக்காலத்திலேயே திட்டமிட்டு வீதிகள் விசாலமாக அமைக்கப் பட்டிருப்பது ஓர் ஆச்சரியமான விஷயம்தான். பள்ளி வாசல் வீதியின் நெடுக நடந்து, கடற்கரை சாலையின் பக்கம் திரும்பி நடையை எட்டி வைத்தார் கலைமான். தினமும் அதிகாலை தொழுகை முடிந்து கடற்கரைவரை சென்று திரும்புவதை அவர் வழக்கமாக வைத்திருந்தார்.

முழுதாய் இருள் விலகாத, வாகனங்களின் ஆரவாரம் ஆரம்பிக்காத இந்தக் கருக்கல் நேரத்துக் காற்றைச் சுவாசிப்பதே ஓர் அலாதியான ஆனந்தம்தான்.

அதிகாலை விழிப்பது பற்றி, தொழுவது பற்றி கலைமான் யோசித்து யோசித்துப் பார்த்து புளகாங்கிதம் அடைந்திருக்கிறார்.

எல்லா மதங்களும் இந்த அதிகாலை வழிபாட்டை மிகவும் வலியுறுத்துகின்றன. இதில் ஆழமான அர்த்தங்களுண்டு. தவிரவும் இந்த அதிகாலை நேரமே ஓர் அழகிய கவிதைதானே.

மனிதன் அன்றன்றைய பொழுதைச் சாந்தியுடனும், சந்தோஷத்துடனும் ஆரம்பிப்பதற்கு அதிகாலையில் விழிப்பதே சிலாக்கியமானது.

ஆனாலும் பொழுது புலரும் இந்த அழகைப் பார்க்காமல், கதிரவன் கடல் குளித்தெழும் அழகை ரசிக்காமல் மக்களில் பெரும்பாலோர் உறங்கத்தான் செய்கிறார்கள்.



கலைமான் கடற்கரையைச் சென்றடைந்தபோது, சூரியன் கடல் மட்டத்தில் தகதகத்தான். அவர் அந்தக் காட்சியைக் கூர்ந்து பார்த்தவாறு அமைதி



யாக நின்றார். இயற்கையின் அதிசயங்களைக் காணுந்தோறும் படைத்தவன்மேல் பக்தி அதிகரிக்கத்தான் செய்கிறது. படைத்தவன் என்றால் எல்லாரையும் எல்லாவற்றையும்...

அவர் திரும்ப ஆரம்பித்தபோது ஜனநடமாட்டம் அதிகரித்துவிட்டது. மனத்திலும் பல்வேறு நினைவுகள் வலம்வர ஆரம்பித்தன.

'அவர்களிடமிருந்து என்ன பதில் வரும்? ... மனக்காயத்திற்குக் களிம்பாகுமா? அன்றி ரணத்தை அதிகரிக்குமா?

சலைமான் மகளை இரண்டு தினங்களுக்கு முன் பெண் பார்த்துப் போனார்கள். மாப்பிள்ளைக் கும்பகோணம் பக்கம் சோழபுரம். கம்ப்யூட்டர் என்ஜினீயரிங் படித்த பையன். ஒரு தனியார் நிறுவனத்தில் கைநிறைய சம்பளம் வாங்குகிறவன்.

இரண்டு தரப்புக்கும் பிடித்துத்தான் போனது. இடையில் ஒரு சின்ன நெருடல்.

சுலைமான் தன் குடும்பத்தில் நடந்த சம்பவத்தை மறைக்காமல் சொன்னதுதான் மாப்பிள்ளை வீட்டாரை சற்றே யோசிக்க வைத்துவிட்டது. இரண்டு தினங்களில் தகவல் தருவதாகச் சொல்லி புறப்பட்டுவிட்டார்கள். சில நேரங்களில் உண்மையைக் கூறுவதும் தவறோ?

இப்படி ஒரு கேள்வி சுலைமானின் மனத்தில் அவ்வப்போது எழுந்தாலும், நாளைக்குத் தலை குனியாமல் இருக்கணும் என்றால் இன்றைக்கு உண்மையைக் கூறிவிடுவதே உத்தமம் என்று ஆறுதல் கொண்டார்.

பாரத்தை ஏற்றிய இறைவனுக்கு அதை இறக்கவா தெரியாது?

அவர் மகள் ஜுனைதாவை அவர் தங்கை மகனுக்கு மணமுடிப்பதாக இளமையிலிருந்து பிரஸ்தாபம். இரண்டு மாதத்திற்கு முன்பு நிச்சயதார்த்த உடன்படிக்கையும் ஊரறிய செய்து கொண்டார்கள்.

எல்லா ஏற்பாடுகளும் நல்லபடியாக நடந்து வரும் வேளையில் திருமணத்திற்குச் சில தினங்கள் இருக்கையில் அவர் தங்கை

ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள்.

ஒரு பெரிய விஷயத்தை மிகச் சாதாரண மாக அவள் கையாண்ட விதத்தை அவரால் இன்றளவும் ஜீரணித்துக் கொள்ள இயல வில்லை.

"நானா... நீங்க வருத்தப்படக் கூடாது. எம்மவனுக்கு வேறொரு பெரிய இடத்துல பெண் தர்றதாகச் சொல்றாங்க. பெண் ணோட வாப்பாவுக்குச் சென்னையில பெரிய தொழில் இருக்கு. அவருக்கு ஒரே பொண்ணு. எல்லாம் எம்மவனுக்குத் தான் சேரும். நீங்க கொஞ்சம் பெரிய மனசு பண்ணி விட்டுக் கொடுக்கணும்."

சுலைமான் சிலையானார். தன் தங்கை யிடம் பேசுவதற்கு ஒன்றுமே இல்லை என்றே அவருக்குத் தோன்றியது. மரத்துப் போன ஒரு மன நிலை. அவர் மனைவி உத் திரத்தை வெறித்துப் பார்த்தபடி இருந்தாள்.

அவர் தங்கை மறுபடியும் சொன்னாள். "நானா, உங்களுக்குத் தெரியாதது ஒன்று மில்லை... ஒன்றை இழந்தால்தான் ஒன்றைப் பெற முடியும்... அதிர்ஷ்டம் வந்து கதவைத் தட்டும்போது நாம் அதைப் பயன்படுத்திக்க வேண்டாமா?"

'இவள் இப்படி எல்லாம் பேச எப்போது கற்றுக் கொண்டாள்? எப்படிக் கற்றுக் கொண்டாள்?' உள்ளுக்குள் வியந்த சுலை மான் தன் தங்கையிடம் எதையோ சொல்ல முற்பட்டபோது, அறைக்கதவின் மறைவில் நின்ற ஜுனைதா "வாப்பா..." என்றழைத்த தும் அவளருகே சென்றார்.

"'அரைச்ச மாவையே அரைக்கா தீங்க'னு நான் சொன்னது உண்மை தான். அதுக்காக நீங்க எழுதின இந்தக் கதைக்கு 'புது அரிசி, புது உளுந்து'னு தலைப்பு வச்சிருக்கறது கொஞ்சம்கூட நல்லா இல்லே!"

- எஸ். முகம்மது யூசுப்



"என்னம்மா?"

'நீங்க மாமியிடம் கெஞ்ச வேண்டாம். வற்புறுத்த வேண்டாம். அனுப்பிடுங்க." ஆம். சில நிமிடங்களில் எல்லா நினைவுகளும் உணர்வுகளும் தலைகீழாய் மாறிவிட்டன. நெருப்பில் நிற்பதுபோல் நேரம் நகர்ந்தது. நிமிடமும் ஒரு யுகமாய்.

"சரி, அப்ப நான் வர்றேன் நானா. நம்ம ஜுனைதாவுக்கு வேற ஒரு மாப்பிள்ளை கிடைக்காமலா போய்விடுவான்."

"எல்லாம் அவன் நாட்டப்படியே நடக் கும். இனிமே நீ 'நம்ம ஜுனைதா' என்று மட்டும் சொல்லாதே."

அவர் அப்படிச் சொன்னதும் அவர் தங்கை விருட்டென்று வெளியேறிவிட்டாள். முன்பெல்லாம் அவர் தங்கை அவரிடம் சொல்வாள் :

"நானா, ஜுனைதாவைப் படிக்க வைச் சிட்டோம். நம் தங்கச்சி மகன் அவ்வள வாகப் படிக்கவில்லை என்பதற்காக நீங்க மாறிடக் கூடாது. என் பையனுக்குத்தான் ஜுனைதாவை நிக்காஹ் முடிக்கணும்." என்று சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பவ்வியமாகச் சொல்வாள்.

இன்று பணமே பிரதானம் என்பதால் பாசமெல்லாம் வேஷமாகிவிட்டது.

திருமண உடன்படிக்கையை மாப் பிள்ளைவீட்டார் மீறி நடப்பதால் நஷ்ட ஈடு கோரலாம் என்றார்கள் முத்தவலிகள்.

சுலைமான் அதையெல்லாம் காது கொடுத்துக் கேட்கவில்லை. இந்தக் காயத்தை எந்த தொகை வந்து ஈடுகட்டும்?

நிரவியில் உள்ள அவர் தங்கையின் ஓட்டுவீடு இடித்து மாடிவீடாகக் கட்டப் படுகிறது. எல்லாம் அவள் எதிர்கால சம்பந்தியின் கைங்கரியம். திருமணத்திற்கு முன்பே மாப்பிள்ளைக்கு வீட்டைக்கட்டிக் கொடுக்கிறார்.

சுலைமான் எப்போதாவது அந்தப் பக்கம் போகும்போது அண்ணாந்து பார்க்கிறார். வீடு கிடுகிடுவென உயர்கிறது. என்ஜினீயர் கொத்தனார்கள் எல்லாம் சென்னையி லிருந்தே வந்து வேலை செய்கிறார்கள்.

அவர் தங்கை இப்போது அவரிடம் பேசுவதே அரிதாகிப் போனது. அவளுடைய நட்பு வட்டம் மாடி வீடுகளின் பக்கம் மட்டுமே என்றானது. சுலைமான் சமயத்தில் பிரமித்துத்தான் போகிறார்.

பணம் என்பது மனிதர்களை எப்படி யெல்லாம் மாற்றிவிடுகிறது. வீடு உயர உயர

மனிதர்கள் அநியாயமாகத் தாழ்ந்து போகிறார்களே. அவரால் நம்பத் தான் முடியவில்லை. ஆனால் நடப்பதெல்லாம் உண்மைதான் என்பது நன்றாகவே உரைக்கிறது.

அவர் தங்கை மகனுக்கு வேறு இடத்தில் முடிவானபிறகு, அவரும் தன் மகளுக்கு வேறு இடங்களைப் பார்க்கலானார். ஓர் உறவினர் மூலம் சில தினங்களுக்கு முன்பு சோழபுரத்துக்காரர்கள் வந்து பெண் பார்த்தார்கள். அவர்களுக்கு மிகவும் பிடித்துத்தான் போய்விட்டது. கொடுக்கல் வாங்கலிலும் பெரிதாகப் பிரச்னை ஏதுமில்லை. அவரால் செய்ய முடிந்ததையே அவர்களும் எதிர்பார்த்தார்கள்.

தன் பெண்ணுக்கு உறவுப் பையனை முடிவு செய்து வைத்திருந்து ரத்தான விஷயத்தைச் சுலைமான் மறைக்காமல் சொன்னார். அதன் பிறகுதான் அவர்களும் சற்று யோசிக்கலானார்கள்.



"தலைவரைக் கைது பண்ணினதும் அழுதுட்டாராமே. ஏன்?"

"தன்னையும் ஒரு முக்கியமான ஆளா அங்கீகரிச்சு நடவடிக்கை எடுத்துட்டாங்களேன்னு நினைச்சு ஆனந்தக் கண்ணீர் விட்டுட்டார்!"

- அம்பை தேவா

அவர் வீட்டுக்குள் நுழையும்போதே அவர் மனைவி சொன்னாள். "சோழபுரத்துக் காரங்க ஃபோன் பண்ணினாங்க..."

"அர்ஹம் திரில்லா..."

"கொஞ்ச நேரம் கழிச்சு மறுபடியும் ஃபோன் பண்ணுறதாச் சொன்னாங்க..."

சுலைமான் தொலைபேசி பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டார். சற்று நேரத்தில் தொலைபேசி ஒலித்தது.

"அஸ்ஸலாமு அலைக்கும்."

"அலைக்கும் ஸலாம். நாங்கள் எல்லோரும் கலந்து பேசினோம். மாப்பிள்ளை உட்பட எல்லோருக்கும் முழு சம்மதம். நீங்கள் எதையும் மறைக்காமல் பேசினது உங்கள் மதிப்பை அதிகப்படுத்திடுச்சி. தவிரவும் உங்கள் மகளை எங்கள் வீட்டு மருமகள்னு அல்லா முடிவு செய்து வைத்திருக்கும்போது வேறு இடத்தில் எப்படி நடக்கும்? நடந்த சம்பவத்தில் உங்கள்மீது எந்த தவறுமில்லையே. பணம் சிலரை மாற்றிவிடுகிறது என்பது உண்மைதான். ஆனாலும் எல்லோரும் அப்படியல்ல. நீங்கள் உங்களால் முடிந்ததைப் பெண்ணுக்குச் செய்யலாம். எதையுமே வற்புறுத்தமாட்டோம். நாங்கள் இரண்டு மூன்று தினத்தில் அங்கு வருகிறோம் திருமணத்திற்கான தேதி குறிச்சிடுவோம்..."

"இன்ஷா அல்லா..." என்றார் சுலைமான்.

"அப்புறம் என் மனைவி உங்கள் மகள்ட்ட ஒரு வார்த்தை பேசணுமாம்."

"ஜுனைதா இங்கவாமா..."

"என்ன வாப்பா?"

"மாப்பிள்ளையோட அம்மா உங்கிட்ட பேசணுமாம்."

மகளிடம் ஃபோனைக் கொடுத்தார்.

"ஹலோ ஜுனைதாதானே?"

"ம்..."

"நான் ஒரே கேள்வி கேட்கறேம்மா. அதுக்கு உன் வாயிலேருந்து பதில் வரணும்னு விரும்பறேன். என் மகனை மணந்துகொள்ள உனக்குச் சம்மதம்தானே?"

ஜுனைதா ஃபோனைக் கையால் பொத்திக் கொண்டு மௌனம் காத்தாள்.

"என்னம்மா?"

"சம்மதமான்னு கேட்கறாங்க வாப்பா."

"சொல்லும்மா. உன் அபிப்பிராயத்தைச் சொல்லு. எதுவானாலும் சொல்லு. அதுதான் நல்லது."

ஜுனைதா தன் தாயாரைப் பார்த்தாள்.

"உன் மனசுல உள்ளதைச் சொல்லும்மா."

மாப்பிள்ளையின் தாயார் குரல் மறுபடியும் ஒலித்தது.

"ஜுனைதா நீ படிச்ச பொண்ணு. உன் அபிப்பிராயத்தைச் சொல்லும்மா."

ஜுனைதா தன் தந்தையையும், தாயையும் கனிவுடன் பார்த்தாள். தன் மகள் சொல்லப்போகும் பதிலை அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

அவள் நாணத்துடன் சொன்னாள், "எனக்கு முழு சம்மதம் மாமி." ●

சிற்றுலா எப்போது?

✉ பெண் சுதந்திரம் பற்றிய விவாதம் மிகவும் சத்தான தாக அமைந்திருக்கிறது.
மதுரை-1, சி.எம். குமார்.

✉ சாருகேசியின் கற்பனைக் கேள்வி பதில்கள் பிரம் மாதம்.
சென்னை - 49,
சி. ராமநாதன்.

✉ 'செங்கிப்பட்டிக்கு ரெண்டு டிக்கட்' படித் தேன். பெண் சுதந்திரச் சிறப்பிதழில் வெளியிடு வதற்கென்றே ரிஷபனின் இந்தச் சிறுகதை தேர்ந் தெடுக்கப்பட்டதோ என நினைக்குமளவுக்கு அப்படி ஒரு பொருத்தம்!
பாளையங்கோட்டை,
தி.சு. பாலசுப்பிரமணியன்.

✉ பெருங்கட்சிகளின் அலு வலக நடவடிக்கைகளைக் கல்கி 'கவர்' செய்தவிதம் வரவேற்கத்தக்கது. சிறிய கட்சி அலுவலகங்களுக்கு உலா எப்போது?
நெய்வேலி - 3,
சாந்தி சுந்தர்.

✉ கல்கி வைரவிழா, கல்கி சதாசிவம் நூற் றாண்டு விழா நிகழ்ச்சி களை நேரில் பார்க்கவில் லையே என்ற குறையைக் கட்டுரையும், ஆல்பமும் போக்கிவிட்டன.
மணியக்காரன்பாளையம்,
ஏ.ஜி. கல்யாணசுந்தரம்.

வட்டமேஜை

✉ பெட்ரோலியத் துறை அமைச்சர் ராம்நாயக் பெட் ரோலியப் பொருள்கள் விற்பனை உரிமை வழங்கப் பட்டதில் ஊழல் செய்திருக்கிறார் என்பது வெட்ட வெளிச்சமான பின்பும் அவர் விடாப்பிடியாகப் பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பதும், எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சிகள் என பாகுபாடின்றி தேர்தல் கமிஷன் சிபாரிசு செய்த சீர் திருத்தங்களை நிராகரித்ததும், இந்திய அரசியல் மீள முடியாத மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருப் பதையே உணர்த்துகிறது. கடைசியில் பரிதாபமாக நிற்கிறான் ஏழை வாக்காளன்!
மொரட்டுப்பாளையம், க.நா. இராஜேஸ்வரன்.

✉ 'எங்கேயோ கேட்ட கதைகள்' எல்லாமே சுவையாக இருந்தன. அதிலும் 'ஸ்டெப்னி' குதிரை வண்டிக் கதை சூப்பர் தமாஷ்!
ஸ்ரீரங்கம், எஸ். கௌரிலக்ஷ்மி.

✉ தனக்குக் கிடைத்த 'மடக்கு' பெரிய பொக்கிஷம் என கருதி எடுத்துச் சென்றுவிட்டு எடக்கு மடக்காக போலீசில் மாட்டிப் பரிதவித்த ராமையா தாத்தாவை நினைத்து பரிதாபமேற்பட்டது.
சென்னை - 26, சி. மகேஷ்.

✉ சாயா தேவியின் இல்லா படிச்சு அவர் நல்லா இருக் கிறது தெரிஞ்சு. மனசு ஃபுல்லா, ஒரு தில்லா இருந்துச்சு!
ஆதமங்கலம்புதூர், கே. சண்முகம்.



✉ 'ராம் அநியாயக்!' தலையங்கத்தின் தலைப்பே பொட்டில் அடித்தாற் போல் இருந் தது. தலையங்கத்தின் மொத்த விஷயங்களை யும் நீர் கொடுத்திருந்த தலைப்பே உணர்த்தி யிருந்தது. சபாஷ்!
திருவாரூர்,
ஆர். ராமசுப்ரமணி.

காதில் விழுந்தவை:

நடுங்கும் அமைச்சர்கள்!



● மதுரை கோஷ்டிப் பூசலை இப்போது கலைஞரே நேரடியாகக் கையாள்கிறாராம். "இந்தக் காலகட்டத்தில் இது போன்ற கோஷ்டி நடவடிக்கையில் இறங்கலாமா?" என்று சென்னையில் இருக்கும் பல சீனியர்கள் அழகிரியிடம் கேட்டிருக்கிறார்கள். அதற்கு அழகிரி "அ.தி.மு.க. மற்றும் போலீஸ் கூட்டணியை எதிர்த்து ஏதாவது நிகழ்ச்சி நடத்த வேண்டுமென்றால் அதற்குப் பல முன்னேற்பாடுகள் தேவை. என் ஆட்களைக் கலக்காமல் கஞ்சித் தொட்டி நடத்தியதால் தான் போலீஸ் கையால் அடிவாங்க நேர்ந்தது. அதேபோல பேரணியையும் எங்களைக் கலக்காமலேயே நடத்த முயற்சித்தார்கள். அதற்குத் தான் எங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தோம்" என்றாராம். "தென் மாவட்டங்களில் தி.மு.க. பலமாகவும் எதிரிகளைச் சமாளிக்கும் நிலையிலும் இருக்க வேண்டுமென்றால் கட்சியை என் பொறுப்பில் விட்டு விடுங்கள்" என்கிறாராம் அழகிரி. இப்போது குடும்ப ரீதியாக அழகிரியை அமைதிப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

● அ.தி.மு.க. அமைச்சர்கள் பல காரணங்களுக்காக பயந்த நிலையில் இருந்தாலும் அவர்கள் ரொம்பவும் நடுங்குவது, கட்சிப் பத்திரிகையான நமது எம்.ஜி.ஆரில் விளம்பரங்கள் கொடுக்க அழுத்தம் வரும்போதுதான். "உங்கள் சார்பாக அரை பக்கம், கால் பக்கம், விளம்பரம் போட்டுக் கொள்கிறோம்" என்று தொலைபேசியில் சொல்லிவிட்டு அவர்கள் போட்டுக் கொள்கிறார்களாம்... அதன் பின் ஆயிரக் கணக்கில் பில் வரும்போது பகீரென்கிறதாம். சில சமயங்களில் வெளியிடப்படும் விளம்பரங்களில் என்ன வாசகங்கள் இடம் பெறுகின்றன என்பது கூட அமைச்சர்களுக்குத் தெரிவதில்லை. சமீபத்தில் ஒரு விளம்பரத்தில் – அதுவும் ஓ. பன்னீர்செல்வம் சார்பாக வெளிவந்த விளம்பரத்தில் – அம்மாவை அம்மனுடன் ஒப்பிட்டு வெளிவந்த வாசகங்களால் அவரே சங்கடப்பட்டு, "அது போன்ற விளம்பரங்கள் வெளியிடக் கூடாது" என்று அறிக்கை விட்டார். அமைச்சர் பதவியிலிருந்து கழற்றி விடப்பட்ட ஒரு பிரமுகர் கட்சிப் பத்திரிகைக்கு விளம்பரம் வெளியிட்ட வகையில் நிறைய பாக்கி வைத்திருக்கிறாராம். அதைக் கேட்டால் 'கடன் வாங்கித் தான் கட்ட வேண்டும்' என்று புலம்புகிறாராம்.



●பா.ம.கவுக்கும் ரஜினிக்கும் நடந்த மோதலில், பா.ஜ.க., திருநாவுக்கரசு, எல். கணேசன் மற்றும் காங்கிரஸ் இளங்கோவன், சோ. பாலகிருஷ்ணன் ஆகியோர் ரஜினிக்கு ஆதரவாக வரிந்து கட்டிக் கொண்டு வந்த நிலையில், தி.மு.க. அடக்கி வாசித்தது கண்டு ரஜினி ரசிகர்களுக்குக் கொஞ்சம் ஆச்சர்யம் + அதிர்ச்சி. அந்தச் சமயம் பார்த்து போலி சாமியார்களை ஒரு பிடி பிடித்து உடன் பிறப்புக்குக் கடிதம் எழுதினார் கலைஞர். சாமியார், ஆன்மிகம் என்ற வட்டம், ரஜினியை பா.ஜ.க. பக்கம் ஒதுக்கி விடுமோ என்று ஒரு எண்ண ஓட்டம் தி.மு.க.வில் இருக்கிறது.

– சஞ்சயன்

சுவையாக ஒரு தன் வரலாறு



"தமிழையும் இலக்கியத்தையும் பண்பாட்டையும் அவற்றுக்காக உழைத்தவர்களையும் காங்கிரஸ் மறந்துவிட்டது. தமிழ்நாட்டின் இன்றைய காங்கிரஸ் ஆட்சிக்கு அறை கூவல் தமிழின் பெயராலும், இலக்கியத்தின் பெயராலும் மொழியின் பெயராலும்தான் வந்திருக்கிறது. எச்சரிக்க வேண்டியது என் கடமை என நினைக்கிறேன்."

இப்படி ஒரு கருத்தை 1961ஆம் ஆண்டில் காங்கிரஸ் இயக்கத்தின் மணி விழாக் கொண்டாட்டத்தின்போது, காமராஜ், பக்தவத்சலம் போன்றவர்கள் இருந்த மேடையிலேயே துணிவோடு வெளியிட்டவர், காந்தியத்திலும் தேசியத்திலும் அசைக்க முடியாத பற்றுக் கொண்ட இலக்கியவாதி அகிலன்.

அகிலனைப் படிக்க விரும்புகிற புதிய தலைமுறை 'எழுத்தும் வாழ்க்கையும்' என்ற, இந்தத் தன் வரலாறைப் படித்த பிறகு அவருடைய இலக்கியத்தைக் கையிலெடுப்பது நல்லது. அவருடைய மிகச் சிறந்த நாவல்களான பாவை விளக்கு, பொன்மலர் போன்ற படைப்புக்களுக்கான 'நதி மூலம்' அகிலனின் சொந்த வாழ்க்கைதான் என்பதை அறியும் வாசகன் பிரமிப்படையக் கூடும்.

"'பாவை விளக்கு' நாவலுக்காக நான் 'கல்கி'யில் பெற்ற பணத்தைவிட அதிகமாகவே நான் அதை எழுதி முடிப்பதற்குச் செலவு செய்திருக்கிறேன்" என்ற அகிலன் தொடர்ந்து எழுதுகிறார் "இதைத் தெரிந்து கொண்ட சதாசிவம், அடுத்த நாவல் தொடங்கி எனக்குப் 'பாவை விளக்கு'க்குக் கொடுத்ததைவிட அதிகமாகவே கொடுத்திருக்கிறார்." அத்துடன் 'வேங்கையின் மைந்தன்' எழுதப்பட்டபோது சதாசிவம் செய்து கொடுத்த வசதிகளையும், தம்முடைய புதிய காரைக் கலைப்பயணத்துக்காகத் தந்து உதவியதையும் கவைபட விவரிக்கிறார்.

"மோசமான பாதைகளில் நாங்கள் போக வேண்டியிருக்கும்; சிறிய கார் ஒன்று இருந்தால்போதும்" என்றாராம் அகிலன்.

"அதற்காகத்தானே நல்ல கார் வேண்டுமென்கிறேன்! கார் கெட்டுப் போனாலும் கதை நல்ல கதையாக வந்தால் சரிதான்!" என்று சொல்லிச் சிரித்தாராம் சதாசிவம். அகிலனுக்கு 'சாகித்திய அகாதமி' பரிசு பெற்றுத் தந்த நாவல் அது!

புக் பேங்க்



தம்முடைய பிள்ளைப் பருவம், பள்ளிப் பருவம் எல்லாவற்றையும், சொந்த ஊரின்

மண்வளச் சிறப்போடு எழுதுகிற பகுதிகள், கண்முன்னால் காட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்துகிற முறையில் அமைந்துள்ளன. தேச விடுதலைப் போரின் சில பகுதிகளும் அகிலனின் வாழ்க்கையோடு இணைந்து மெருகு கூட்டியுள்ளன.

1922 முதல் 1965 வரையுள்ள காலத்தின் நிகழ்வுகளை மட்டுமே இந்தக் கட்டுரைகளில் பதிவு செய்திருக்கிறார். 'மீண்டும் ஓய்வு கிடைக்கும்போது அடுத்து எழுத வேண்டியதை நினைவு கூர்ந்து எழுத முயல்வேன்' என்று எழுபதாவது கட்டுரையில் விடைபெறும்போது எழுதுகிறார். அந்த ஓய்வும் காலமும் அவருக்குக் கிடைக்காமலே போனது ஓர் இலக்கிய சோகம்தான்.

தாகம், ஜி3/8 (15), மாசிலாமணி தெரு, பாண்டிபஜார், தி.நகர், சென்னை - 17 விலை ரூ.105.

— யெஸ்பால்

கிராமத்து ஆட்டோகிராஃப் - சுந்தர புத்தன்

கட்டுரைகள். நவீனமும், நாகரிகம் என்ற பெயரிலும் நமது பண்பாட்டு எச்சங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து கொண்டிருக்கிற வேளையில் தமது வேரின் ஆழம் பற்றி ஒரு தாயின் பரிவோடு பரிமாறியிருக்கிறார் ஆசிரியர். இடம் பெற்றிருக்கிற ஒவ்வொரு கட்டுரையும் சுவாரஸ்யமாகயிருக்கிறது.

மதி நிலையம், 4 (39) பிருந்தாவன் அப்பார்ட்மெண்ட்ஸ், தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 17 விலை ரூ.40

உங்கள் மனதைப் புரிந்து கொள்ளுங்கள்


Know your Mind என்ற ஆங்கிலப் புத்தகத்தின் தமிழாக்கம் இது. மன உணர்வுகள், அதைக் கையாளும் விதம் பற்றி பதிமூன்று கட்டுரைகளில் விரிவாகப் பேசுகிறது புத்தகம். சீனிவாசனின் மொழிபெயர்ப்பு எளிதாக இருக்கிறது.

கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 17 விலை ரூ.75









இசைத்தட்டின் மேலொரு முன் விழுந்தது - வஸந்த் செந்தில்

தோழமையோடு நம்மை இழுத்துச் செல்லும் எளிமையான கவிதைகள். 'கவிதையும் காதலும்' பற்றிய விரிவான கட்டுரை இனிமை.

குமரன் பதிப்பகம், 3, முத்துகிருஷ்ணன் தெரு, தி.நகர், சென்னை-17. விலை ரூ.30.

கவிஞர் நெஞ்சில் காமராசர்

காமராஜர் பற்றி பாரதிதாசன் முதல் ஐம்பத்தி மூன்று கவிஞர்களின் கவிதைகளடங்கிய தொகுப்பு. அரங்க.பாண்டியன் தொகுத்துள்ளார்.



விழிகள் பதிப்பகம், 8, 7ம் குறுக்குத் தெரு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், விரிவாக்கம், சென்னை - 41. விலை ரூ.50.

பேசும் ஊமைகள் - சுப்ரியா சாந்திலால்

கல்கி உள்ளிட்ட பல்வேறு வாரப் பத்திரிகைகளில் வெளியான ஆசிரியரின் சிறந்த 15 கதைகளைக் கொண்ட தொகுப்பு. மொழிநடையும் கற்பனையும் இயல்பாக உள்ளன.

சுந்தரி பதிப்பகம், 1000, தென்காசி சாலை, ராஜபாளையம். விலை ரூ.55

— தம்பி

மனம் உருகுதே 15

"அந்தப் பரம்பரை இன்னும் தொடரணுமா, உன்னால நிம்மதியா, உருப்படியா இருக்க முடியாது. தானும் நொந்து, மத்தவாளையும் நோகடிச்சுண்டு இது என்ன பொழப்பு. வெட்கமா இல்லை உனக்கு?"

பாலகுமாரன்

எங்கேயோ பார்த்தது போல் இருக்கிறதே இந்த முகம் என்பது இருவருக்குமே தோன்றியது.

தாடி. இலேசாய் கறுப்பு கலந்த தாடி. நீண்ட பின் சிகை. அகலமான நெற்றி. பளபளப்பான மூக்கு. மாநிற மான தேகம். கழுத்தில் துளசி மாலை, ஸ்படிக மாலை, நவரத்தின மாலை, உருண்டையான பெரிய முத்து டாலராக இருக்க, சிறிய முத்துக்களால் கோக்கப்பட்ட மணிமாலை. நெற்றியில் விபூதி. புருவத்திற்குச் சற்று மேலே வட்டமான குங்குமம். இரண்டு புருவத்தையும் இணைக் கின்ற பட்டையான குங்குமம். நடுவே கறுப்பாக சாந்து போல ஏதோ ஒன்று. நெஞ்சு நடுக்குழியிலும் குங்குமம் இருந்தது. நிச்சயம் அக்னிஹோத்ரம் செய்பவராக இருக்க வேண்டும். இரண்டு தோளிலும் கறுப்பு ரட்சை மின்னியது. இலேசான தொந்தி இருந்தது. அகலமான தோள் இருந்தது. பரந்த முதுகு இருந்தது. உள்ளங்கைகள் சிவந்து இருந்தன. உள்ளங்கால்கள் கைகளை விட சிவந்திருந்தன. கைகளின் மிருதுத்தன்மை பார்க்கும்போதே தெரிந்தது.

கண்களின் ஓரம் சுருக்கமான ரேகைகள் மின்னின. புருவத்தைச் சுருக்க, மூன்று கோடு தெரிந்தது. மேல் உதடு வில் போலவும், கீழ் உதடு வளைந்தும் இருந்தது. கண்களில் ஓர் அமைதி இருந்தது. கூர்மை இருந்தது.

சங்கராரிடமிருந்து சற்றுத் தள்ளி ஒரு அம்மாள் உட் கார்ந்திருந்தாள். பார்த்தபோதே சங்கராரின் மனைவியாக இருக்கும் என்று தோன்றியது. கைகளில் தங்க வளையல்கள் ஆறு அடுக்கியிருந்தாள். கழுத்தில் மூன்று சங்கிலிகள் இருந்தன. காதுகளில் வைரம் மின்னியது. மூக்குத்தி பேசரி யும் நல்லகல் என்று தெரிந்தது. நெற்றியில் பெரிய குங்குமம். வெற்றிலைப்பாக்கு போடுகின்ற வாய் என்று காவிப் பற்கள் காட்டிக் கொடுத்தன. அவள் வாழ்க்கையை நன்கு அனு பவித்தவள் என்று முகம் சொல்லியது. சற்று பெரிய உடம்பு. தினம் ரசித்து ரசித்துச் சாப்பிட்டு, புருஷனுக்கும் ரசிக்க ரசிக்க சோறு பரிமாறுபவள் என்று உடம்பு சொல்லியது. குதிகால் களின் பின் பக்கம் மெல்லிய வெடிப்புகள் இருந்தன. இன்னமும் நீரில் நின்று, பாத்திரம் தேய்த்து, வீடு கழுவுதல் போன்ற வேலைகளைச் செய்வானோ என்று தோன்றியது.



விரல்களில் சிறுங்



காரமாக மருதாணி இட்டுக் கொண்டிருந்தாள். கால்களில் நலங்கு இட்ட அடையாளங்கள் தெரிந்தன. ஏதேனும் பூஜையில் அவளை உட்கார வைத்து அவளையே தேவியாக பாவித்து பூஜிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவளைப் பார்க்கும்போது இருவருக்கும் தோன்றியது.

சங்கரன் எதிரே அமர்ந்த பெண்மணியோடு பேச ஆரம்பித்தார். அந்தப் பெண்மணி அவர் பேசப் பேச அழத் துவங்கினாள். தன் துக்கங்கள் ஏதோவொன்றை ரகசியமாகவும், வேகமாகவும் ஆங்காரத்தோடும் கோபத்தோடும் சொல்லத் துவங்கினாள்.

சங்கரர் சரி சரி என்று தலையசைத்து, காது மட்டும் கொடுத்து கேட்டுக் கொண்டிருந்தார்.

கண்கள் ரேவதியையும், ராதாகிருஷ்ணனையுமே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன.

அருகே இரண்டு மத்திம வயதுப் பெண்கள் நின்றிருந்தார்கள். இங்கே வேலை செய்பவர்கள் போல அவர்கள் தோன்றினார்கள். கூர்மையாக இருந்தார்கள். ஆனால், தெளிவாக இருந்தார்கள். கைகளிலும், கழுத்திலும் குறைந்தபட்ச நகைகள் இருந்தன. முகத்தில் ஒரு நிம்மதி இருந்தது. சந்தோஷம் இருந்தது. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். முன்னும், பின்னும் அலைந்து சில சாமான்களைச் சரிசெய்து கொண்டிருந்தார்கள்.

எல்லோருடைய அசைவையும் சங்கரன் கவனித்துக் கொண்டிருந்தார். அவ்வப்போது மனைவியையும் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த இடத்தின் எல்லா அசைவுகளும் அவருக்குத் தெரியும் என்றும், அவரால் பார்க்கப்படும் என்பதும் புரிந்தது.

சாய்ந்து கேட்டுக் கொண்டிருந்தவர் சட்டென்று அந்தப் பெண்மணியிடமிருந்து விலகி நேரே உட்கார்ந்து கொண்டார்.

"தப்பு. உன் பேர்ல இருக்கு. நீ உன்

இஷ்டத்துக்கு வாடா போடான்னு பேசிட்டு அப்புறம் எங்கிட்ட வந்து அழுதா என்ன புண்ணியம். உன்னை எத்தனைத் தடவை காப்பாத்தறதுன்னே எனக்குப் புரியலை போ."

அவர் அலுப்பாகக் கண்களை மூடிக் கொண்டார்.

"பெரியவா அப்படிச் சொல்லக் கூடாது" என்று அந்தப் பெண்மணி கைகூப்பினார்.

"என்ன பண்றது. நான் மாட்டேன்னு தான் சொல்லப் போறேன். உனக்கு இவ்ளோ கோபம் ஆகாது. அவனோ இல்லாதபட்டவன். அவன் உன் புருஷன். உங்கிட்ட காசு இருக்குற ஒரே காரணத்துக்காக உங்கப்பா உனக்குச் செல்லம் கொடுத்து வளர்த்தாருங்கற காரணத்துக்காக அந்தச் சௌகரியங்களை அங்க எதிர்பார்க்க முடியுமா? அது கொடுக்கலைன்னா போடான்னு சொல்றதா? நீ பண்றது ரொம்ப தப்பு."

"இல்லை மாமா. நான் அப்படிப் பண்ணலை."

"நீ என்ன பண்ணினேன்னு எனக்குத் தெரியும். நேத்து ராத்திரி நீ உட்கார்ந்த இடத்துல உன் புருஷன் உட்கார்ந்திருந்தான். வந்துட்டுப் போனான். அழுதான். என்ன நடந்ததுன்னு சொன்னான். அவன் சொன்னதை உங்கிட்ட சொல்லட்டுமா. வேண்டாம் நன்னாயிருக்காது."

"மாமா... நான் என்ன சொல்ல வரேன்னா."

"சும்மாயிரு. நீ இல்லாட்டா இன்னொருத்தன்னு சொன்னியாமே. பொம்மனாட்டி பேசற பேச்சா அது. அதுக்கொரு பலன் உண்டு. என்ன செய்தாலும் அதுக்கொரு எதிர்வினைவு உண்டு. நீ போய்ப் பார். எந்த இடத்துக்கு உன் வாழ்க்கை போறதுன்னு நான் பார்க்கறேன். உன்னை மாதிரி கத்தினவாளை, போனவாளையெல்லாம் தெரியும். ரெண்டு பேர் சொல்லட்டுமா. காது கொடுத்துக் கேக்கிறயா. யார் அப்படிப் போனான்னு உனக்கு அடையாளம் காமிக்கட்டுமா. வெளியில இருக்கற யாரையும் சொல்லப் போறதில்லை. உன் குடும்பத்துலேயே சொல்றேன். இதை உன் புருஷன் சொல்லலை. உங்கப்பா சொன்னார். உன் புருஷனுக்கு இது தெரியாது. உங்கப்பா என்ன சொன்னார். அவரைச் சேர்ந்தவா யாரோ யார்கிட்டயோ இழைஞ்சிருக்கான்னு. அதை உனக்கு நான் சொல்லட்டுமா. அந்தப் பரம்பரை இன்னும் தொடரணுமா, உன்னால நிம்மதியா, உருப்படியா இருக்க முடியாது. தானும் நொந்து, மத்தவாளையும் நோகடிச்சுண்டு இது என்ன பொழப்பு. வெட்கமா இல்லை உனக்கு!"

சங்கரன் பேச்சில் கடுமை கூடிக் கொண்டே போயிற்று.

"ஒரு பொம்மனாட்டி என்ன பண்ணாலும் சரின்னு சொல்றவன் சங்கரன் இல்லை. நான் தேவி உபாசகன். அம்பாளை பூஜை பண்றவன். எல்லாப் பொம்மனாட்டியையும் அம்பாளா பார்க்கறவன். ஆனால், நீ இல்லாட்டி இன்னொருத்தன்னு சொல்ற பொம்மனாட்டியோட எனக்கு எந்தப் பேச்சும் இல்லை. அத்தனை பொறுமையா நான் ஏன் கேட்டேன் தெரியுமா? 'நான் அப்படிப் பேசிட்டேன் தப்பா நடந்துட்டேன்'னு ஒரு வார்த்தை சொல்லுவியாக்கும்னு காத்துண்டிருந்தேன். கடைசி வரைக்கும் நீ சொல்லலை. இப்போ சொன்ன பிறகும் சொல்லலை. எனக்கு இது ரொம்ப வருத்தம் போ."

மீண்டும் அவர் அலுப்போடு கண் மூடிக் கொண்டார்.

வாடகை பைக்!

நாகர்கோவில் அருகிலுள்ள கருங்கல் ஜார்ஜ் ஒரு வித்தியாசமான மனிதர். கருங்கல் டவுனில் சாமானியர்கள் வாங்குவதற்காக ஐந்து ரூபாய் கட்டணத்தில் தூங்கும் வசதி செய்து கொடுத்து, பொது மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் இந்த மனிதர், ஓசை இல்லாமல் திக்கற்று வரும் காதல் ஜோடிகளுக்குக் காவல் துறை ஒத்துழைப்போடு திருமணம் நடத்தி வைக்கிறார். இதுவரை ஐம்பதுக்கும் அதிகமான திருமணங்கள் நடத்தி வைத்திருக்கிறார்.



அதோடு நில்லாமல் புதிதாக வினோதமான ஒரு தொழிலையும் செய்கிறார். "கின்னஸ் பைக்ஸ் நிறுவனம்" என்ற

பெயரில் பத்து புதிய மோட்டார் பைக்குகளை வாங்கி மணி ஒன்றுக்குப் பதினைந்து ரூபாய் வாடகை வசூலிக்கிறார். இந்தியாவில் புதிய பைக்குகளை வாங்கி வாடகைக்கு விடும் நபர் இவர் ஒருவராகத்தானிருக்கும். வாடகைக்குக் கொடுப்பதற்கு முன் சம்பந்தபட்டவர்களுக்கு 'ஓட்டுனர் உரிமம்' உண்டா? என்பதைப் பரிசோதித்த பின்னே வண்டியைக் கொடுக்கிறார். வாடகைக்குச் சைக்கிள் வாங்கிய காலம் போய் பைக் வாங்கும் காலம் வந்தது கண்டு சந்தோஷத்திலிருக்கின்றனர் இப்பகுதி மக்கள்.



படம், தகவல்: ஆர்.கே. லிங்கேசன்

அவள் விம்மி அழத் துவங்கினாள்.

"நான் என்ன சொல்ல வரேன்னா..." என்று வேறு ஏதோ பேசத் துவங்க, சங்கரன் கண்களை மூடியபடியே கையைத் தூக்கினார்.

"உன் தப்பு என்னன்னு முதல்ல புரிஞ்சுக்கோ. பிறகு மத்தவாள குத்தம் சொல்லுவோம். இங்க உன் தப்பு என்ன?"

அவள் மௌனமாக இருந்தாள்.

"உன் தப்பு இந்த இடத்துல மூணு. ஒண்ணு அலட்டல். இன்னொண்ணு பொய். இன்னொண்ணு பொறாமை. மத்தவாளை விட நான் பெரிசுன்னு காமிக்கற ஒரு புத்தி. எனக்கு அதிகமாவே இருக்கு. அதான் சிரமப்படற. போயும் போயும் ஒரு ஏழை மாமியார்கிட்ட நான் எப்பேர்ப்பட்ட ஆள் தெரியுமா. அப்படின்னு உங்க வீட்டுப் பெருமையச் சொல்ல ஆரம்பிச்ச. மாமியார் ஏழை. இதை வரவா போறவா எல்லார்கிட்டயும் சொல்லிண்டிருப்பியா. உங்க ஆத்துக்காரர் மட்டும் வாரச் சாப்பாடு இல்லை. நானும் வாரச் சாப்பாடு. ராதாகிருஷ்ணன் உங்களுக்கு வாரச் சாப்பாடுன்னா என்னன்னு தெரியுமா?"

ராதாகிருஷ்ணன் திடுக்கிட்டு அவரைப் பார்த்தார். திடுமென்று ஒரு கேள்வி அவரை வந்து தாக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

ரேவதி சிரித்தாள்.

"உனக்குத் தெரியுமாம்மா?"

ரேவதியைப் பார்த்துத் திரும்பினார்.

"தெரியும் மாமா. கேள்விப்பட்டிருக்கேன்."

"சொல்லு."

"ரொம்ப ஏழை வீட்டுக்கார குழந்தேள் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வீட்ல சாப்பாடு சாப்பிடுவா. ஏழு நாள் ஏழு வீட்ல சாப்பிடுவா. மத்தியானம் பதினொரு மணிக்கோ, பன்னெண்டு மணிக்கோ கூப்பிட்டுச் சாதம் போடுவா. காத்துண்டிருக்கணும். கேள்விப்பட்டிருக்கேன்."

"ஆமாம். ஏழு நாள் இல்லைம்மா ஆறு நாள். ஒருநாள் கிடையாதுன்னு சொல்லிடுவா. எங்கேயாவது சாப்பிட்டுக்கணும். அல்லது கொலை பட்டினி இருக்கணும். நான் இருந்திருக்கேன்ம்மா. உணவு அப்படிங்கற விஷயத்தினுடைய அல்லல். அதுக்காக சின்ன வயசுல நான்பட்ட அவஸ்தை. என்னை யோசிக்க வச்சது. யாரும் யோசிக்க மாட்டாங்க தெரியுமா. வசதியா உள்ள குடும்பத்தைச் சேர்ந்த பையன்களும், பொண்ணுங்களும் யோசிக்கறதேயில்லை. உலகமே காலின் கீழேன்னு சொல்றான். உலகம் உன் கால் கீழத்தான் இருக்கு. தலைக்கு மேல என்ன இருக்கு? அதையும் பார்த்துக்கணும். ருக்மணி தலைக்கு மேல என்ன இருக்கு?"

அவர் திரும்பி ஒரு பெண்ணைப் பார்த்துக் கேட்டார்.

அவர் தலையைத் தொட்டுக் காண்பித்ததும் அந்தப் பெண் வாய் விட்டுச் சிரித்தாள்.

"விதி இருக்கு மாமா. எழுதி வச்சுருக்கு."

"ஆங்... ருக்மணி தேறிட்டா. அவளுக்கு டக்டக்குனு பதில் சொல்லத் தெரியறது. தலையில, தலைக்கு மேல விதி எழுதி ஒட்டியிருக்கு. இன்னென்னார்க்கு இன்னென்ன வாழ்க்கைன்னு. என்னாலதான் என் வாழ்க்கை அப்படின்னு நினைக்கிறபோது சங்கடங்கள் வந்துடறது.

"என் க்ளாஸ்ல படிக்கற இருபத்தேழு

பசங்களுக்கும் அப்பா அம்மா இருக்கா. எனக்கு இல்லையே. ஏன், அப்படின்னு மெல்ல கேட்டேன். வாத்தியார் சொல்லிக் கொடுத்தார். அது விதி. தலையெழுத்து அப்படி வரத்தோட வந்திருக்கேன்னு. நான் அதைத்தான முதல் முதல்ல யோசிக்க ஆரம்பிச்சேன். எது விதி. எது தலையெழுத்து. எது வரம். பதிமூணு வயசுல சரியா யோசிக்க ஆரம்பிச்ச போது வாழ்க்கையினுடைய நுணுக்கங்கள் ரொம்ப சீக்கிரம் பிடிபட்டுப் போயிடுத்து.

"மணக்க மணக்க சாம்பாரும் ரசமும், துவையலும், கறியும், கூட்டும் பண்ணிடுவா. நான் வந்தவுடனே இரு அப்படின்னு நல்ல புளிச்ச தயிரைப் போடுவா. தொட்டுக்கற துக்கு அப்படின்னு கேட்டா போறும். பசுஞ் சாணம் உருட்டி எடுத்துண்டு வரேன் நக்கித் தின்னு அப்படிம்பா. பயமா இருக்கும். ஒரே யொரு கொளஞ்சிக்காய்க்காக கொண்டு வந்து அங்க நின்னபடியே தூக்கி கரெக்டா தட்டுல போடுவா. கிட்டத்தட்ட ஒரு நாயினுடைய வேகத்தோட அந்தக் கொளஞ்சிக் காய்க்காக காத்துண்டிருப்பேன். இப்போ நிஜமாகவே எந்த நாயாவது இலைய உத்து பார்க்கற போது என் ஞாபகம்தான் வரும். நானும், நாயும் ஒண்ணா இருந்திருக்கோமே அப்படின்னு ஓர் எண்ணம் வரும். அதனால லேயே நான் எந்த நாயையும் கோச்சுக்கறதே இல்லை. முடிஞ்ச அளவுக்கு எல்லா நாய்க்கும் சோறு போட்டுடறது.

"இன்னொன்னும் தோணும். வீட்ல மணக்க மணக்க சாம்பார் சமையல் பண்ணிட்டு எனக்கு இப்படிப் பழையது போடறாளேன்னு தோணித்து அந்தப் பழையதும் போடலேன்னா என் கதி என்ன அப்படின்னு நான் சரியா யோசிக்க ஆரம்பிச்ச போது எனக்கு வயசு பன்னெண்டே கால். சின்ன வயசுல படிச்ச பாசுரம். சின்ன வயசுல கத்துண்ட செய்யுள். சின்ன வயசுல கத்துண்ட ஸ்லோகம். சின்ன வயசுல பாட்டு, ஓவியம் பெரியவனான வரைக்கும் உடம்புக்குள்ள நிக்கும். அதே மாதிரி சின்ன வயசுல ஏற்பட்ட அனுபவம். அந்த அனுபவத்தின் பாற்பட்ட சிந்தனைகள் பெரியவனான பிறகு திடப்படும்.

"இருவத்தஞ்சு வயசு வரைக்கும் சுகவாசியா இருக்கான் பார். அவனெல்லாம் தான் வாழ்க்கையில எதுவுமே சாதிக்காம அடிபட்டுப் போறான். சுகவாசியாக இருக்கறவன் என்ன பண்ணணும்? சுகத்தை உதறிட்டு சுகவாசியா பிறந்தாலும் அதைத் தள்ளிட்டு உலகத்துக்குள்ள குதிக்கணும். எல்லா இடங்களுக்கும் போய் வரணும். மத்த வாளை உத்துப் பார்க்கணும். அப்படிப் பொழைச்சவாளையும் நான் பார்த்திருக்கேன்.

"ருக்மணி எப்படிக் கேள்வி கேட்கறா பார்த்தியா. ப்பா... பளிச் பளிச்சுனு அம்பு அடிக்கறா. ம்... ஜமாய்!"

அவர் ருக்மணியைப் பாராட்டினார்.

ராதாகிருஷ்ணனும், ரேவதியும், ருக்மணியை வியப்போடு பார்த்தார்கள்.

(தொடரும்)

கல்கி வைரவிழா
போட்டியில் ஆறுதல் பரிசு
ரூ. 250/- பெறும் தமாஷ்
ஹைக்கூ

போலீஸ் பாதுகாப்பு
புல்லட் புரூப் மேடை
சுதந்திர தின கொண்டாட்டம்

— கோவி. லெனின்



எப்படி தப்பினார் ஓசாமா?

மறுபடி வருகிறது, செப்டம்பர் 11. "மோசமான தாக்குதல் இனிமேல்தான் இருக்கிறது. இன்னும் முடியவில்லை!" என்கிறார் ஓர் ஐரோப்பியப் புலனாய்வு அதிகாரி. வயிற்றில் புளியைக் கரைக்கும் இந்தச் செய்திக்கு அடிப்படை இருக்கிறது!



அல்-கெய்தா போராளிகளுடன் ஓசாமா ஆப்கானிஸ்தானிலிருந்து தப்பிய பிறகு, அமெரிக்க ஆதரவுக்காரரான ஹஸ்ரத் அலியின் தலைமையில் அவர்களைத் தேடித் தேடி விரட்டியபோது, சுமார் முப்பதுக்கு மேற்பட்டவர்களைத் தான் தீர்த்துக் கட்ட முடிந்ததாம்.

ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் எல்லையில், தோரா போரா வழியாக, மீசைகூட முளைக்காத அறு நூறு போராளிகள் டிசம்பரில் வந்தபோது, கரீம் என்பவர் அவர்களை உபசரித்திருக்கிறார். அவர்களில் பலர் தாலிபான் அதிகாரிகள். அந்தக் கும்பலில் ஓசாமா பின்லாடன் இருந்திருந்தால்கூட, கண்டுபிடித்திருக்க முடியாதாம்!

இவர்களைத் தாக்கப் போன அமெரிக்கப் படையினர், அவர்கள் தப்பித்துப் போன வழியை விட்டுவிட்டு, வேறு பாதையில் குண்டுகளை வெடித்து வீணாக்கிக் கொண்டிருந்தனர். "அமெரிக்கர்கள் சுத்த முட்டாள்கள்!" என்கிறார் கும்பலுக்கு வழி காட்டிய ஷரீஃப், கிண்டலாக.

அப்படியானால் பின்லாடன் எங்கே? எப்படித் தப்பினார்? இதுவரை மர்மமாகவே இருக்கிறது.

ஜூலை 31 அன்று, அமெரிக்கச் சட்டசபை உறுப்பினரிடம் பேசிய அதிகாரி ரம்ஸ்ஃபெல்ட், "பின்லாடன் இறந்து போயிருக்கலாம். அல்லது பயங்கரமாக அடிபட்டு எங்கேயாவது பதுங்கியிருக்கலாம்" என்று கூறினாலும், ஜெர்மன் புலனாய்வுத் துறைத் தலைவர், "பின்லாடன் உயிரோடுதான் இருக்கிறான். ஆப்கானிஸ்தான் - பாக் எல்லையில்தான் இருக்கிறான். ரகசியமாக நடமாடுகிறான்" என்று சொல்லுவதை, அமெரிக்க உளவுத்துறை உறுதி செய்திருக்கிறது.



தாலிபான் கைடு ஒருவர், ஓசாமா பின்லாடனும், இருபத்தெட்டு போராளிகளும் ஷாஹிகோட் மலைக் குகை வழியாக பாகிஸ்தானுக்கும் பிறகு ஆப்கானிஸ்தானுக்கும் போய் வந்ததைப் பார்த்திருக்கிறார். இன்னொரு தாலிபான் போராளியும் கூட, பின்லாடனை ஷாஹிகோட் பகுதியில் பார்த்தாகக் கூறியிருக்கிறார்.

"அடிபட்டவர்களுக்கு உதவுங்கள். உற்சாகமாக இருங்கள். அல்லா உங்களைக் காப்பாற்றுவார்!" என்று அப்போது ஒரு குட்டிப் பிரசங்கமே செய்திருக்கிறார் பின்லாடன்!

— சித்தார்த்

(நன்றி: நியூஸ்வீக்)

மீன் வளர்க்க ஆசை!



வீட்டில் கண்ணாடித் தொட்டியில் மீன் வளர்ப்பது என்பது நினைப்பதற்கே ரம்மியம். சொல்லப்போனால் கடலின் ஒரு துளியை வீட்டுக்குள் கொண்டு வந்து வைத்துக் கொள்வது போன்றது அது.

வேறு செல்லப் பிராணிகளை வளர்ப்பதில் சிலவித கட்டாய அவஸ்தைகள் உண்டு. ஆனால் மீன் வளர்த்தால் அது இல்லை.

மீன் வளர்க்க ஆசை, ஆனால் அது குறித்து எதுவும் தெரியாது என்பவர்களுக்குச் சில டிப்ஸ். ஒரு கோளவடிவிலான கண்ணாடிப் பாத்திரம், அது நன்கு கீழே உட்காருவதற்கு வசதியாக ஒரு ரப்பர் வளையம், ஒரு ஜோடி தங்க மீன்கள் இப்படி எளிமையாகத் தொடங்கலாம்.

தண்ணீரை விட்டு வெளியேற்றினால் தான் மீன் துடித்து இறக்கும் என்பதல்ல. பொருந்தாத தண்ணீரில் இருந்தாலும் அது இறந்து போகலாம். முக்கியமாக குளோரின் அடங்கிய தண்ணீர் மீனுக்கு ஆகாது. உங்கள் வீட்டுக் குழாயில் குளோரின் கலந்த தண்ணீர்தான் வருகிறதென்றால் தண்ணீரைக் காய்ச்சி ஆறவைத்தோ அல்லது இரவு முழுவதும் பக்கெட்டில் நீரை வைத்திருந்தோ குளோரினை வெளியேற்றியபிறகு மீன் தொட்டியில் அதை நிரப்புங்கள்.

தங்கமீன், கறுப்புமூர், கோயி போன்ற மீன் வகைகளை இந்தியாவின் எந்தப் பகுதிகளிலும் வளர்க்கலாம்.

தொடக்கத்துக்கு ஒரே இனத்தைச் சேர்ந்த இரண்டு மீன்களை வாங்குங்கள். இரண்டு வெவ்வேறு இன மீன்களை வாங்குவதாக இருந்தால் ஒத்துப் போகும் தன்மை அவற்றுக்கு உண்டா என்பதை அனுபவம் வாய்ந்த கடைக்காரரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.



அவ்வப்போது மீன் தொட்டியில் உள்ள தண்ணீரை மாற்ற வேண்டும்தான். ஆனால் ஒட்டுமொத்தமாக மாற்றாமல் தொட்டி நீரில் மூன்றில் ஒரு பகுதி என்கிற கணக்கில் மாற்றிக் கொண்டே வந்தால் மீன் புதிய நீருக்கு அட்ஜஸ்ட் செய்து கொள்வது எளிதாக இருக்கும்.


தாமிரம் மீனுக்கு ஆகாது. எனவே தாமிரம் அடங்கிய பாத்திரங்களில் மீனை வளர்க்க வேண்டாம்.

மீனுக்கு என்ன உணவளிப்பது? இதற்கென்றே "மீன் உணவு" பல இடங்களில் சிறு பாக்கெட்டுகளாகக் கிடைக்கிறது. நமக்கென சமைத்த சாதத்தைக் கூட மீன்கள் சாப்பிடும்தான். ஆனால் மீதமுள்ள பருக்கைகள் தொட்டியின் அடியில் தங்கி கெட்டுப் போய் சுகாதாரமற்ற ஒரு சூழலை தொட்டிக்குள் உருவாக்கும்.

நீந்தும் மீன்களைப் பார்த்துக் கொண்டே இருந்தால் மனதுக்கு அமைதியும், உற்சாகமும் ஒருசேரக் கிடைக்கும். முக்கியமாக உங்கள் வீட்டுக் குழந்தைகளுக்கு "பிற உயிர்கள் இடத்தில் அன்பு செலுத்துவது" எனும் குணம் வளரும்.

– குல்லூ

வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்கி உதவலாம்



தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், குரும்பபாளையத்தில் **தி யுனைடெட் ஊனமுற்றோர் பள்ளியில்** உள்ள கை, கால் ஊனமுற்ற அனாதைக் குழந்தைகள் 110 பேர்களுக்கு தாங்கள் சார்பில் வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்கி உதவி செய்யுங்கள். தாங்கள் குடும்பத்துடன் இந்த சமூக சேவை நிறுவனத்தை பார்வையிடலாம். தி யுனைடெட் ஊனமுற்றோர் பள்ளியின் சார்பில் செக் / டிராப்ட் / மணியார்டர் செய்யலாம்.

வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு குழந்தைகளுக்கு புத்தாடைகள், உணவு வழங்கி உதவலாம். உங்களால் முடிந்த சிறு தொகையையும் அனுப்பலாம்.



The United Physically Handicapped School

96, Sathy Main Road, Kurumbapalayam, Coimbatore - 641 107.
Tamil Nadu. INDIA Phone : 91-0422-667578, 667636.

AN INSTITUTION FOR ORPHANED DISABLED CHILDREN

** Donations are Tax exempt*

Visit us at : www.unitedhandicapped.org

Created by Time's, as part of a humble mission.

பொய்யில் பூத்த நிஜம்

“சகுந்தலாவிடமிருந்து இதுவரை எந்தக் கடிதமும் அவனுக்கு வரவில்லை என்பது ஆச்சரியமாக இருந்தது. ‘எனக்கு ஏதாவது லெட்டர் உண்டா?’ என்று கேட்ட போதெல்லாம் இல்லையே என்று அம்மா சொல்வது எத்தனைத் தூரம் உண்மையாக இருக்கும் என்று அவன் யோசித்திருக்கிறான்.”

வாஸந்தி

அண்ணா மேம்பாலத்து டிராஃபிக் விளக்கின் சிவப்புக்குக் கட்டுப்பட்டு வாகனங்கள் நின்றன. ராஜா அமர்ந்திருந்த பக்கத்து ஜன்னலை யாரோ தட்டினார்கள். படித்துக் கொண்டிருந்த புத்தகத்திலிருந்து கவனம் கலைந்து அவன் நிமிர்ந்து பார்த்தான். ஓர் இளம் பெண் கையில் சுமார் ஒரு வயதுக் குழந்தையை ஏந்தியபடி, பிச்சை கேட்கும் பாவனையில் கையைக் குவித்து அவனை நோக்கி நீட்டினாள். குழந்தையின் கையை நீட்டிக் காண்பித்தாள். ராஜா ஒரு வினாடி பிரமைபிடித்தவன் போலப் பார்த்தான். அவள் தமிழ்ப் பெண் இல்லை. அது ஓர் அசாதாரண முகம். எந்த மாநிலத்துப் பெண் என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாத முகவெட்டு. மாநிறத்துக்கும் மேற்பட்ட கோதுமை நிறம். அந்தக் குழந்தை அவனைப் பார்த்துச் சிரித்தது. அவனுக்கு அடி வயிற்றில் ஏதோ கழன்றது! ‘அப்பாக்கு டாட்டா சொல்லு’ என்று அவள் சொல்வாளோ என்று பய மேற்பட்டது. அவன் சட்டென்று பான்ட் ஷர்ட் பாக்கெட்டை ஆராய்ந்தான். ‘சில்லறையே இல்லே’ என்று முணுமுணுத்தான். பழனி அப்போதுதான் அவளைக் கவனித்தவன் போல் தன் பக்கத்துக் கண்ணாடியை இறக்கி சிடுசிடுத்தான்.


“சீ போ அப்பாலே. இதே ரோதனையா போச்சு. நீங்க ஒண்ணும் கொடுக்காதீங்க சார்.”

“எங்கிட்டே சில்லறையும் இல்லே” என்றான் ராஜா தயக்கத்துடன். “டிராஃபிக் சிக்னல்லே பிச்சைக்காரங்களைப் பார்த்தா எனக்குத் தில்லி ஞாபகம் வருது.”

“இவங்கள்ளாம் வடக்கேந்து வந்தவங்கதான் போலிருக்கு. என்னென்னவோ பாஷை பேசறாங்க. பிச்சைக் கேக்கறதுக்கு எந்த மொழி இருந்தா என்ன? இடுப்பிலே குழந்தை ஒண்ணு நிச்சியம் இருக்கும். அது எவனையும் உருக்கிடும் என்கிற நினைப்பிலே எடுத்திட்டு அலையறாளுக.”

பிச்சைக்காரி வேறு வாகனத்தைத் தேடிப் போய்விட்டாள். தெருவைத் தாண்டி அமெரிக்க தூதரகத்துத் தாளிட்ட பெரிய கேட்டிற்கு இப்பால் நடைபாதையில் ஒரு பெரிய இளைய கும்பல் நின்றிருந்தது. அமெரிக்க விசாவுக்குத் தவிக்கும் கும்பலாக இருக்க வேண்டும். மனிதப் பிறவி எடுத்த எல்லாருக்கும் எல்லா காலகட்டத்திலும் ஏதாவது ஒரு தவிப்பு இருந்து கொண்டே இருப்பது இயற்கையின் நியதியாக இருக்க வேண்டும் என்று அவன் நினைத்துக் கொண்டான். அந்தக்





21

தவிப்பே பிரபஞ்ச இயக்கத்தின் உந்துசக்தி என்று பட்டது.

பிச்சைக்காரிக்கு வெற்றி. குழந்தையைக் கண்டு உருகி தங்க வளையல்களை அடுக்காக அணிந்த ஒரு கை ஒரு ரூபாயை அவனிடம் நீட்ட, அவன் சலாம் செய்தபடி அதைப் பெற்றுக் கொண்டு அடுத்த வண்டியை நோக்கி ஓடி னாள்.

"குழந்தையைக் காட்டி எப்படி ஏமாத்தறா பாருங்க" என்றான் பழனி.

சிக்னல் பச்சைக்கு மாற, வண்டிகள் உகப்பிக் கொண்டு கிளம்பின. பிச்சைக்காரி லாகவமாக நடைபாதைக்கு ஓடினாள். குழந்தை சிரித்தது. ராஜா புத்தகப் பக்கத்துக்குப் பார்வையைத் திருப்பினான்.

'குழந்தையைக்காட்டி அந்தப் பெண் பயமுறுத்தறா!' என்று அப்பா சப்தம் போட்டார். அந்தப் பெண் சளைக்காமல் "அப்பாவுக்கு டாட்டா சொல்லு!' என்றான். 'டாட்டா' என்று சிரித்தது குழந்தை.

அந்தப் பிச்சைக்காரியின் குழந்தை சிரித்த மாதிரி அடி வயிற்றில் மெல்லிய சங்கடம் ஏற்பட்டது. 'உன்னுடைய குழப்பம் எனக்குப் புரிகிறது. என்னுடைய கஷ்டம் உனக்குப் புரியுமோ?" என்று சகுந்தலா கேட்டது நினைவுக்கு வந்தது. எனக்குப் புரியுது என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். 'ஆனா என்னால செய்யக் கூடியது ஒண்ணுமில்லே. நீ அதைப் புரிஞ்சுக்கணும். இந்தப் பிச்சைக் காரியுடைய நிலை உனக்கு வராது நல்ல வேளை. நீ படிச்சவ. வேலைக்குப் போறவ. குழந்தையைத் தனியா வளர்க்கக் கஷ்டப்படுவே, உண்மை, ஆனா என்ன செய்ய முடியும் நான்? எனக்கு நீ அன்னியம் இப்ப, புரிஞ்சுக்க. என் நினைவு திரும்பும்னு நீ நம்பினா காத்திருக்கணும். அந்தக் காத்திருப்புனாலே உனக்குதான் கஷ்டம். நீ விவேகமுள்ளவளா இருந்தா என்னை மறக்கக் கத்துக்கணும். சட்டப்படி நீ என் மனைவியாயிருந்தா – ஆ, அது வேற விஷயம். அது என்னை நிர்பந்திச்சிருக்கும். குழப்பத்தோடயே உன்னோடு வாழ வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்கும். கடைசியிலே சட்டப்படி பிரிய வேண்டியிருந்திருக்கும். அப்

படிப்பட்ட சங்கடங்கள்லாம் இப்ப இல்லே நல்ல வேளை. பரஸ்பர புரிதல்லே நாம இப்ப பிரிஞ்சிருக்கோம்னு நா நம்பறேன்.'

திடீரென்று அவனுக்குத் தன் எண்ண ஓட்டத்தைக் கண்டு ஆயாசமேற்பட்டது. வெட்கமேற்பட்டது. தன் செய்கைக்குச் சப்பைக்கட்டு கட்டும் சமாதானங்கள் அவை என்று தோன்றிற்று. அந்தப் பெண் ஏமாற்றுக்காரி இல்லை. மிரட்ட முயற்சிக்கவில்லை. சட்டப்படி திருமணமாகாவிட்டாலும் குழந்தையைக் காட்டி, பிரசவ ஆஸ்பத்திரி சீட்டைக் காட்டித் தன் உரிமையை நிலை நாட்டியிருக்க முடியும். தன்னுடைய காதல் வாழ்வு பொய்த்து விட்ட துக்கம் அவளுக்கு. அவனை இழக்கிறோமே என்கிற பரிதவிப்பு அவளுக்கு. அவனுக்கு அது நன்றாகப் புரிந்தது. அவளை நிர்பந்திப்பதால் பலன் ஏதுமில்லை என்று அவளே புரிந்து கொண்டிருப்பாள். 'உன்மேல எனக்கு இருக்கிற காதலை நா கொச்சைப் படுத்த விரும்பல்லே'. கடவுளே! எப்படி இப்படி ஒரு பெண்ணை நான் சட்டப்படி மனைவி ஆக்கிக் கொள்ளாமல் விட்டேன்? அத்தனைப் பொறுப்பற்றவனாக, விடலையாகத் தான் இருந்திருக்க முடியுமா என்று அவனுக்குப் புரியவில்லை. அல்லது அப்படிப் பட்ட ஒரு சித்தாந்தம் தனக்கு இருந்திருக்குமா என்று நினைத்துப் பார்க்க முடியவில்லை. 'உங்களோடு நான் என்ன காரணத்துக்காகப் பேசாமல் இரண்டு வருஷம் இருந்தேன்' என்ற கேள்விக்கு அம்மாவும் அப்பாவும் பதில் சொல்வதைத் தவிர்த்தார்கள். அதை நினைவு கூர்வது சங்கடமான விஷயம் என்று அவன் உணர்ந்து அதைப்பற்றிப் பேசுவதை நிறுத்தினான். அவர்களது பெருந்தன்மையினாலேயே பழசை மறந்து தன்னிடம் அன்பு பொழிவதாக அவன் நம்பினான். அது மிகப் பெரிய ஆறுதலாக இருந்தது. அவர்கள் மட்டும் தன்னைக் காண தில்லிக்கு வந்திராவிட்டால் தன் நிலைமை எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே அவனுக்குத் திகிலேற்பட்டது. பழசையெல்லாம், அது என்னவாக இருந்தாலும் மறந்து புதிய வாழ்வு வாழ இயற்கையே அளித்த வாய்ப்பு இப்போது கிடைத்திருப்பதாகத் தோன்றிற்று.

வண்டி நின்றது. அவன் அலுவலகம் வந்துவிட்டதை அப்பொழுதுதான் கவனித்தான். சென்னைக்கு வந்து ஒரு மாதத்திற்குள்ளேயே உடம்பு நன்றாக குணமாகி விட்டது. மருத்துவ பரிசோதனையில் உடம்பு முழுவதுமாக இயல்பு நிலைக்கு மாறியிருந்தது தெரிந்தது. ஆனால் கடந்த நான்கைந்து வருஷத்து நினைவுகளை அவன் திருப்பிப், புரட்டிப் பார்க்க எத்தனை முயன்றும், உள்ளுக்குள் ஒரு கருப்புத்திரை தொங்கிற்று. சென்னையில் அவனுக்குப் பழக்கமான வீட்டில், மறக்காத சூழலில், உறவுகளின் நெருக்கத்தில் அன்றாட வாழ்க்கை வாழ எந்தத் தடுமாற்றமும் ஏற்படவில்லை என்பது நிம்மதியளித்தது. அவனுக்கு இங்கு பரிச்சயமானவர்கள் எல்லாருக்குமே அவனைப் பற்றிய நினைவுகள் பழையவை என்பதால் முரண்பாடு ஏற்படாதது தெம்பை அளித்தது. கடந்த ஐந்தாண்டு அரசியல் நிகழ்வுகளை ஒரு சமூகவியல் மாணவன் போல கானிமரா லைப்ரரிக்குச் சென்று தூசு படிந்த ஷெல்ஃப்களிலிருந்து விவரம் அறிந்து கொண்டான். தமிழ் நாட்டில் ஏற்பட்டுப்போன மாறுதல்களை உணர்ந்து அதிசயித்தான். வாகனங்கள் பெருகியிருந்தன. பன்னாட்டு நிறுவன கலாசாரம் சாப்பாட்டிலும் புகுந்திருந்தது. தமிழ் நாட்டுச் சாப்பாட்டுக்கு ஹோட்டலைத் தேர்ந்தெடுத்துப் போக வேண்டியிருந்தது. எல்லா ஹோட்டல்களிலும் வட இந்திய சாப்பாடோ, சைனீஸோ அதிகமாகக் கிடைத்தன. மத்திய வர்க்க இளம் பெண்கள் எல்லாம் தாவணியைக் கடாசிவிட்டு வட இந்தியர்கள் போல ஸல்வார் கமீஸ் அணிந்தார்கள், நெற்றியில் விபூதிக்கீற்றுடன். அவனுக்குச் சிரிப்பு வந்தது. உடையும் சாப்பாடும் மாறிப்போனதே தவிர, வீட்டிற்குள் பெற்றவர்கள் மாறவில்லை. வழக்கம்போல் பூஜை புனஸ்காரம், சமையல் சாப்பாடு. பொதுவாகச் சிந்தனைப் போக்கு மாறவில்லை. எந்த சித்தாந்தப் புரட்சியும் வெடிக்கவில்லை. புரட்சி செய்தவர்கள் எல்லாம் மறுபடி பழைய கூட்டைத் தேடிப் போவதாகப் பட்டது ஏதோ ஒரு வகையான பாதுகாப்பைத் தேடி. அதை ஒரு கூச்சமில்லாத விளம்பரத்துடன் செய்தது ஆச்சரியமாக இருந்தது. ஜனங்களின் ஆதரவு அதற்கு நிச்சயம் உண்டு என்று நம்பிச் செய்தவர்கள் போல. மற்றபடி எதுவும் மாறவில்லை. நல்லவேளை. அதனாலேயே மனசு வெகு சுலபமாக தில்லி நினைவிலிருந்து விடுபட்டு இதில் ஒன்றிக் கொண்டது. அவன் வேலை பார்த்த நினைவு இல்லாத அலுவலகத்திலிருந்து அவனது லீவு முடிவதாகவும் அவன் மீண்டும் பணியில் வந்து அமர வேண்டிய தேதியைக் குறிப்பிட்டும் கடிதம் வந்தபோது அவன் எந்தக்

''எதுக்கு இந்த வீட்டைக் காலி பண்ணலாங்கற?''

''என்ன ராசியோ தெரியல... இந்த வீட்டுக்குக் குடி வந்ததுலயிருந்து உங்கம் மாவுக்கும் எனக்கும் சண்டையே வர மாட்டேங்குது!''

— அம்பை தேவா



குழப்பமும் இல்லாமல் தான் வேலையை ராஜினாமா செய்வதாக பதில் போட்டான். இங்கு அதற்குள் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் வேலை கிடைத்திருந்தது. அவனுடைய ராஜினாமா விவரம் அறிந்த உடன் விவேக்கிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. 'அங்கேயே நீ தங்கிவிட முடிவு எடுத்திருப்பது துரதிர்ஷ்டவசமானது. சகுந்தலாவையும் குழந்தையையும் பற்றின நினைவு திரும்பப் போவதில்லை என்று தீர்மானித்துவிட்டாயா?' அவன் எதிர்பார்த்த கடிதம் என்பதால் பதில் எழுதுவதில் தயக்கம் ஏற்படவில்லை.

'இன்னும் எனக்கு நினைவு திரும்பவில்லை. ஆனால் இங்கிருக்கும் சூழலைப் பற்றின ஞாபகம் எனக்கு மாறாததால் எந்தத் தடுமாற்றமும் இல்லாமல் இருக்கிறேன். இங்கு எனக்கு வேலை கிடைத்திருக்கிறது. அதில் சேரப்போகிறேன். என்னுடைய நிலையில் நீ இருந்திருந்தால் நீயும் அப்படித்தான் செய்திருப்பாய் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.'

கடிதத்தைத் தபாலில் சேர்த்தபிறகுதான் அதில் சகுந்தலாவைப் பற்றித் தான் ஏதும் குறிப்பிடவில்லை என்று நினைவு வந்தது. சற்று நேரம் அது அவனைச் சங்கடப்படுத்திற்று. ஆனால் விரைவில் அதை மனத்திலிருந்து அப்புறப்படுத்த முடிந்தது. சகுந்தலாவிடமிருந்து இதுவரை எந்தக் கடிதமும் அவனுக்கு வரவில்லை என்பது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'எனக்கு ஏதாவது லெட்டர் உண்டா?' என்று கேட்டபோதெல்லாம் இல்லையே என்று அம்மா சொல்வது எத்தனைத் தூரம் உண்மையாக இருக்கும் என்று அவன் யோசித்திருக்கிறான். வந்த கடிதத்தை அவன் மறைத்திருந்தாலும் நல்லதிற்குத்தான் என்ற சமாதானத்தில் அவன் அந்தக் கேள்வியைக் கேட்பதை நிறுத்திக் கொண்டான். அவன் டிரைவர் இல்லாமல் வண்டியை எடுத்துச் செல்லக் கூடாது என்பதில் அம்மா உறுதியாக இருந்தாள். 'நீ ஓட்டிக்கிட்டுப் போனியானா திரும்ப வர்ற வரைக்கும் கவலைப்பட்டே நா செத்துருவேன்' என்று கண்ணீர் விட்டாள். அந்தக் கண்ணீர் தனக்கு நிறைவைத் தந்ததை நினைத்து அவனுக்குக் கூச்சமேற்பட்டது.

அலுவலகத்தில் நுழைந்து தன் அறைக்குச் சென்று கம்ப்யூட்டர் எதிரில் அமர்ந்ததுமே நிகழ்ந்த காலமும் எதிர்காலமும் காணாமல் போயின. நிகழ்காலத்தில் சரளத்துடன் ஐக்கியமாக முடிந்தது.

"ஹாய் ராஜமோகன்!"

அவன் நிமிர்ந்தான். மார்க்கெட்டிங் மானேஜர் சுதாகர் நின்றிருந்தான். "ஹாய்" என்று புன்னகைத்து 'என்ன' என்றான் ராஜா.

"பசிக்கல்லியா? மணி ஒண்ணரை!"

ராஜா கடிகாரத்தைப் பார்த்துச் சிரித்தான். 'நேரமே மறந்துபோச்சு!'

"பசி மறக்கல்லியே?"

"வேலை மும்முரத்திலே அதுகூட மறந்து போச்சு."

சுதாகர் அவனைக் கூர்ந்து பார்த்தான். "நா ஞாபகப்படுத்தினது மறந்து போறதுக்குள்ளே சாப்பிடலாம் வா."

"என்னுடைய மறதி வினோதமானது சுதாகர். நிகழ்காலத்தை நா மறக்கறதில்லே."

"குட் ஃபார் யூ!" என்றான் சுதாகர். "நேத்து ஒரு வீடியோ படம் பார்த்தேன். அபூர்வமான படம். மெமெண்டோன்னு பேரு. அதோட ஹீரோவுக்கு உன்னை மாதிரிதான் ஒரு விபத்திலே மறதி ஏற்படறது. அவனுடைய வைஃப் ரேப் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதாகச் சொல்வான். அந்த ஷாக்லே அவனுக்கு மறதி ஏற்படுது. ஆனா விசித்திரம். வினாடிக்கு வினாடி அவன் மறந்துகிட்டே இருப்பான். தன் பேரு, ஹோட்டல் ரூம் நம்பர், கார் நம்பர் இதையெல்லாம் நினைவுபடுத்திக்க உடம்பு பூராவும் பச்சை குத்தி வெச்சுப்பான்!"

ராஜா புன்னகைத்தான் தன்னுள் ஏற்பட்ட சலனங்களை மறைத்தபடி. "எங்கே பார்த்தே அந்தப் படத்தை?"

"என் தங்கை ஃபிலிம் இன்ஸ்டிட்டியூட்லே படிக்கிறா. இது நினைவுகளைப் பத்தின சர்ச்சை செய்யப்பட்ட படம்னு வீடியோ காஸட் வாங்கிக்கிட்டு வந்தா."

"நா அதைப் பார்க்க முடியுமா?" என்றான் ராஜா ஆர்வத்துடன்.

"நா கொண்டு வந்திருக்கேன் காஸட்டை. பார்த்துட்டுத் திருப்பிக்கொடு" என்று தன் கைப்பையிலிருந்து அவன் எடுத்து நீட்டியதை 'தேங்க்ஸ்' என்று ராஜா வாங்கிக் கொண்டான்.

"அது உன்னை டிஸ்டர்ப் செய்யலாம்" என்றான் சுதாகர் தயக்கத்துடன். "ஆனா எனக்கு அது சுவாரஸ்யமா இருந்தது. ரொம்ப சிக்கலான படம். எது நிஜம் எது பொய்யின்னே கடைசிவரைத் தெளிவாகாது. ஹீரோவுக்கு அந்தத் தவிப்பு இருக்கு. அவனுடைய பலவீனத்தை ஒரு போதைக் கும்பல் உபயோகிக்கப் பார்க்குது. நீ இதைப் பார்த்தி

யானா எச்சரிக்கையா இருக்கலாம்."

ராஜா சிரித்தான். அடிவயிற்றில் ஒரு மெல்லிய கூச்சம் ஏற்பட்டது. தனது நிலை ஒரு பேச்சுக்குரிய விஷயமாகிப்போனது அவமானமாக இருந்தது.

"சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். உனக்கும் அந்தப் படத்துக்கும் சம்பந்தமே இல்லைன்னு எனக்குத் தெரியும்."

"சில வருஷங்கள் மறந்து போச்சே தவிர எனக்கு வேற ஒண்ணும் சிக்கல் இல்லே சுதாகர்!"

"அது எனக்குத் தெரியும். நீ தில்லியை விட்டு இங்கு வந்தது நல்லது. அங்கே இருந்திருந்தா அந்த ஹீரோ மாதிரி குழம்பிப் போயிருப்பே!"

வீட்டுக்குத் திரும்பியதும் தன் அறையில் அமர்ந்தபடி அந்தப் படத்தைப் பார்த்தபோது அது உறுதிப்பட்டது. தன்னை நினைவுபடுத்திக் கொள்ளக் கதாநாயகன் தவிக்கும் தவிப்பைத் தத்ரூபமாக உணர்ந்து கொள்ள முடிந்தது. மனைவியைப் பற்றின சிந்தனை அவனுக்கு ஆறாத புண்ணா[illegible]ருக்கிறது. விநாடிக்கு விநாடி எல்லாமே மறக்கும்போது அவனுக்கு திகிலேற்படுகிறது. "நேரத்தையே என்னால் உணரமுடியாதபோது என் புண் எப்படி ஆறும்?"

"என்ன படம்டா அது?" என்றாள் காமாட்சி.

அவன் அதை மௌனத்தில் வைத்து விட்டு, "என் ஃப்ரெண்டு நல்லபடம்னு கொடுத்தான். என்ன, எங்கேயாவது போறியா என்ன?" என்றான். ஜரிகையும் பட்டும் நகையுமாகக் காமாட்சி காட்சியளித்தாள்.

"ஏண்டா, இன்னிக்கு ஒரு மாப்பிள்ளை அழைப்புக்குப் போகணும்னு சொல்லியிருந்தேனே மறந்துருச்சா?"

"ஓ, ஆமாம், மறந்துபோச்சு."

அந்த வார்த்தையை உச்சரிக்கும்போதெல்லாம் மனசு தடுக்கி விழுந்தது. பலவீனப்பட்டு நொண்டிற்று. தனக்கும் அந்தக் கதாநாயகன் போல நிகழ்கால விநாடிகள் அர்த்தமற்றுப் போகலாம். 'என் புண் எப்படி ஆறும்' என்ற கேள்வி எழலாம்.

"நல்ல பிள்ளை" என்று சிரித்தபடி காமாட்சி அவனிடம் ஒரு எவர்சில்வர் தம்ளரை நீட்டினாள்.

"என்னது அது?"

"சாத்துக்குடி ஜூஸ்."

"இப்ப எதுக்கும்மா? ஆபீஸ்லேந்து வந்தும்தான் டிபன் காப்பி கொடுத்தீங்களே?"

"அங்கே கல்யாண வீட்டிலே சாப்பாட்டுக்கு எத்தனை நேரம் ஆகுமோ. கொஞ்சம் ஜூஸ் குடிச்சியானா சோர்வில்லாம இருக்கும்."

"என்னை என்னவோ சின்னப்பிள்ளையாட்டம் நீங்க நடத்தறீங்க."

அவள் அவன் முகவாயைத் தொட்டுத் தன் விரல்களை உதடுகளில் வைத்துக் கொண்டாள்.

"என் செல்லப் பிள்ளைன்னா நீ!" மளுக்கென்று அவள் கண்களில் நீர் நிறைந்து அவனைப் பலவீனப்படுத்திற்று. விநோதமாக, அது இதமாகவும் இருந்தது புண்பட்ட இடத்தை இறகால் வருடுகிற மாதிரி. நடுங்கும் குளிருக்குக் கதகதப்பு கிடைத்த மாதிரி. அவன் புன்னகையுடன் அவள் நீட்டிய ஜூஸை வாங்கிக் கொண்டான். அந்தக் கதாநாயகன் பாவம் என்று தோன்றிற்று. அவனுக்குப் பெற்றோர்கள் இல்லாமல் போனது அவனுடைய துரதிர்ஷ்டம். என்னுடைய நிலையை யாரும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளப் போவதில்லை.

காமாட்சியுடன் அவன் மாப்பிள்ளை அழைப்புக்குக் கிளம்பிய போது அவன் முகத்தில் புன்னகை விரிந்திருப்பதை சரவணன் கவனித்தார். முன்பு அவரை வருத்திய பெருமிதப் புன்னகை.

(தொடரும்)

மரம்!

சேந்தங்குடி பகுதியைச் சேர்ந்த கற்பகச் சோலை தங்கசாமியை எல்லோரும் மரம் என்றுதான் அழைக்கிறார்கள். சுமார் நாற்பது ஆண்டுகளாக பல மரங்களைத் தனது வயலில் வளர்த்து வருகின்றார். அவரைப் பொருத்தவரை இது ஒருவகையில் 'நீண்ட கால ஊடுபயிர்'. முதலில் மரக்கன்றுகள் சிறியதாக இருந்த போது சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயம் செய்தார். மரம் வளர்ந்த போது இடங்களை மாற்றினார். இப்போது இருபது ஏக்கரில் பலவகை மரங்கள். நூற்றுக் கணக்கில்!



மரம் வளர்த்ததோடு நிற்கவில்லை. புதுமனை புகுவிழா என்றாலும் மணவிழா என்றாலும் அவர் தரும் பரிசுப் பொருள் மரக்கன்று. எந்த ஊர் போனாலும் அங்கே மரம் நடுவது அவரது வாழ்க்கை. அவரது பேச்சில் மரம் இல்லாமல் இருக்காது.

— இரா. சோமு

நடக்குமென்பார் நடக்கும்

மேஷம் : ராசிநாதன் செவ்வாய் ஆட்சி பெற்ற சூரியனுடன் ஐந்தில் சஞ்சாரம் என்பதால், எதிர்ப்புங்கிற விஷயம் எகிறிப் போகும். போனஸாக, பண நடமாட்டம் சுமூகமாக இருக்கும். உத்யோகம் சம்பந்தமாக வெளியூர் போறதுக்கு வாய்ப்பு வந்தா, கொஞ்சம்கூட தயங்காதீங்க. நல்ல செல்வாக்கும், மதிப்பும் கூட்டித் தரும் அனுகூலமான பயணமாக அது அமையக்கூடும். வியாபாரிகள் வளர்ச்சி அடைவார்கள். இந்த ராசி பெண்களுக்கு, மிகவும் மங்களகரமான பலன்கள் நடக்கும்.

ரிஷபம் : எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும். பிரிந்தவர்கள், மீண்டும் ஒன்று சேர்வார்கள். தினமும் ஏதோ ஒரு நோய் அல்லது வலி படுத்திக்கிட்டேயிருந்தது இல்லையா? இனி உடல் ஆரோக்கியம் மெள்ள மெள்ள மேம்பாடு அமையும். வெளிநாட்டுக்குப் போகும் முயற்சி கை கூடி வரும். கொடுக்கல் வாங்கல் இனம் லாபம் தரும். கூட்டுத் தொழில் செய்தால், நல்ல ஆதாயம் காத்திருக்கு. கணவன் - மனைவி உறவு நிலை மிகவும் இனிமையாக இருக்கும். ஸ்தல யாத்திரை, புனித காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்.

மிதுனம் : ராசிநாதன் புதன் 4ல் ஆட்சியாக உச்ச ஆரோக்கியமாக சஞ்சாரம் செய்கிறது. இதனால் இதுவரை இருந்து வந்த சஞ்சலமான மனநிலை மாறும். தெய்வ அனுக்கிரகம் கூடும். திட்டமிட்டபடி எல்லா காரியங்களும் வெற்றி அடையும். துணிவு, தன்னம்பிக்கை அதிகரிக்கும். சூரியன் செவ்வாய் 3ம் இடத்தில் சஞ்சாரம் என்பதால் உத்தியோக விஷயங்களில் அனுகூலமானத் திருப்பம் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் உயர்வு அடைவார்கள். குரு பலம் நிறைந்து இருப்பதால், பொன், பொருள், ஆபரணம் சேர்க்கை நிகழும் திருமணம், கிருக பிரதேசம் போன்ற சுபகாரியங்கள் நிகழும்.

கடகம் : குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் தாண்டவமாடும் என்பதால் கணவன் - மனைவி உறவு நிலை ஒற்றுமையாக இருக்கும். குரு, பூர்வ புண்ணியஸ்தானம் (5), களத்திரம் 7 மற்றும் பாக்கியம் (9) ஆகிய இடங்களைப் பார்ப்பதால், மக்கள் நலம், குல தெய்வப் பிரார்த்தனை, திருமணம் போன்ற நல்ல விஷயங்கள் கூடி வரும். மனை, நிலம், வீடு, வாகனம் போன்ற இனங்கள் அனுகூலம் தரும். சாதுக்கள், மகான் தரிசனம் நலமே விளைவிக்கும்.

சிம்மம் : உங்கள் ராசிநாதன் ஆட்சியாக ஜென்ம ராசியில் செவ்வாயுடன் 2ல் ஆட்சியாக, புதன் நல ஆட்சியாக சுக்ரன் சஞ்சாரம் என்பதால் தெளிவான உற்சாகமான மனநிலை இருக்கும். உடல் ஆரோக்கியம் மேன்மை தரும். உத்தியோகத்தில் சுதந்திரமாகச் செயல்படும் நிலைமை, பொருளாதாரத்தில் அபிவிருத்தி உண்டாகும். 10ம் அதிபதி சுக்ரன், 10ல் ராகு என்பதால் விபரீத ராஜயோகப் பலனைக் கொடுப்பார். இதனால் புதிய தொழில், லாபம் கொழிக்கும்.

கன்னி : கையெல்லாம் வறட்சி வேரோடி, கஜானா காலியாகக் கிடந்த காலமெல்லாம் காணாமல் போகப் போகுது. தேவைக்கு அதிகமாகவே, பணம் சரளமாக உண்டாகும். உத்தியோகத்தில் எல்லா முயற்சிகளும் வெற்றியடையும். பெயர், புகழ் கூடும். வழக்கு, விவகாரங்களில் அனுகூலமானத் திருப்பம் உண்டாகும். கணிதத் துறையைச்



கர்நாடக இசைப் பாடகி சுதாவின் கணவர் ரகுநாதனுக்குப் (ரிஷபம்) புனித காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்குமாம்.

அக்னி சர்மா பக்கம்

ஆகஸ்ட் 28 முதல் செப்டெம்பர் 3 வரை

சேர்ந்தவர்கள் கிடுகிடு முன்னேற்றம் காண் பார்கள். குடும்பத்துடன் உல்லாசப் பயணம் அல்லது தெய்வீக ஸ்தல யாத்திரை அமையும்.

துலாம் : ராசிநாதன், சுக்ரன் உங்கள் ராசியில் மற்றும் 11ல் சூரியன் என்பதால் சகல காரியங்களிலும் அனுகூலமானத் திருப்பம் உண்டாகும். நீண்ட நாளாகத் தள்ளிப் போய்க் கொண்டிருந்த குல தெய்வப் பிரார்த்தனை நிறைவேறும். நிர்வாகப் பணியிலிருப்பவர்கள் சுதந்திரமாகச் செயல்படும் சூழல் உருவாகும். வெளிநாடு பயணம் வாய்க்கும். ஏற்றுமதி இறக்குமதி அனுகூலம் தரும். குரு 10ம் இடத்தில் சஞ்சாரம் செய்தாலும், கவலைப்படத் தேவையில்லை. 11ல் உலவும் கிரகங்கள் பலம் என்பதால் நன்மையே நடக்கும்.

விருச்சிகம் : உங்கள் ராசிநாதன் செவ்வாய் 10ல் ஆட்சியான சூரியனுடன் குரு 9ல் உச்ச பலம் 11ல் புதன் ஆட்சியாக 12, சுக்ரனும் ஆட்சியாக விளங்குவதால், புதிய முயற்சிகள் அனைத்தும் கனிந்து நல்ல பலன்களையே தரும். அரசியல்வாதிகள் முன்னணிக்கு உயர்வார்கள். வெளிநாட்டுத் தொடர்புள்ள வர்த்தகம் மேன்மை தரும். பலம் பூரணமாக இருப்பதால், திருமணம் போன்ற சுப காரியங்கள் நடக்கும். பேச்சில் நிதானம் தேவை. பதற்றமில்லாமல் காரியங்களைக் கவனிக்கவும்.

தனுசு : தெளிவானச் சிந்தனை, திறமையான அணுகுமுறை என, எல்லா காரியங்களையும் மிக எளிதாகச் செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். தொழில் பகையிலிருந்து வந்த போட்டி, பொறாமை விலகும். உயர் பதவி, விரும்பிய இடத்துக்கு வேலை மாற்றம், சுதந்திரமான ஆளுகை என அலுவலகத்தில் பல நல்ல மாற்றங்கள் உருவாகும். 6ல் ராகு, 12ல் கேது, 7ல் சனி என்பதால் பயணத்தில் கவனம் தேவை. ஒரு சிலர் மேல் படிப்புக்காக, அயல்நாடு போகும் வாய்ப்பு கூடி வரும். தான, தருமம் நிம்மதி தரும்.

மகரம் : முதலாளி - தொழிலாளி உறவு மிகவும் சுமூகமாகவும், ஒற்றுமையாகவும் இருக்கும். ஹோட்டல், உணவு, அழகு சாதனம், மருத்துவம், அலங்காரப் பொருட்கள் ஆகிய இனங்கள் லாபம் கொண்டு வரும். சுப காரியங்களில் செய்யப்படும் முயற்சி, நன்மையும் மங்களமும் கொண்டு வரும். பெண்களுக்கு உற்சாகமான வாரம். திருமணம், மகப்பேறு, புதிய பொருள் சேர்க்கை என மகிழ்ச்சிகரமாக இருக்கும். உத்தியோகத்தில் நல்ல திருப்பம் உண்டாகும். சிந்தனையில் தெளிவும் அமைதியும் நிலவும். தனியார் நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள்.

கும்பம் : 'எடுத்த காரியத்தில் தடை; ஆரம்பிக்கும் பணியில் சறுக்கல்; எது எடுத்தாலும் இழுபறி என்று இருந்த நிலை மாறி, அனுகூலமான பலன்கள் ஏற்படும். பொருளாதார நிலையில் திருப்திகரமானச் சூழ்நிலை நிலவுகிறது. எதிர்ப்புகள் எகிறிப் போகும். தெய்வானுக்கிரகத்தால் எல்லாவற்றையும் சமாளித்து வெற்றிக் காண்பீர்கள். தொழில் சம்பந்தமாக வெளிநாடு போகும் வாய்ப்பு சிலருக்கு வாய்க்கும். பெண்கள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

மீனம் : 'உப்பு விக்கப் போனா, மழையடிக்குது; மாவு விக்கப் போனா காற்றடிக்குது' என்று புலம்பிக் கொண்டிருந்த மீன ராசி அன்பர்களே, இனி உப்பையும், மாவையும் கலந்து பூரி சுட்டுப் பிழைத்துக் கொள்வீர்கள். அப்படியொரு யோகம் அமைந்துவிட்டது. மக்கள் நலம் சீராக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். போட்ட திட்டமெல்லாம் அதிர்ஷ்டத்தை அள்ளி வரும். எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்திகள் வரும். புதிய உத்தியோக முயற்சிகள் நன்மை தரும். வார இறுதியில் தாய் நலனில் கவனம் தேவை. ஞானிகள் தரிசனம் மன அமைதி தரும்.

குறையொன்றுமில்லை 5

உட்கிரமணம் என்கிற ஆறாவது படிக்கட்டில் ஆத்மா சரீரத்தைவிட்டு வெளியேறுகிறது.

ஐந்து படிக்கட்டு நாம் ஏறி விடுகிறோம். ஆறாவதை நம்மால் ஏற முடியாது. வெளியே கிளம்புகிற ஆத்மாவை அவன்தான் வெளியேற்ற வேண்டும்.

நம் முதுகில் தண்டுவடம் இருக்கிறது. அது எல்லோருக்கும் தெரியும். கௌசீதகி உபநிஷத்தானது இந்தத் தண்டு வடத்தின் அமைப்பை அழகாக வர்ணிக்கிறது.

தண்டு வடத்தின் அமைப்பினால் நாம் நான்கு பக்கமும் திரும்ப முடிகிறது. அதற்கு இடையிலே, இயந்திரங்கள் தேயாமல் இருப்பதற்காக எப்படி grease போடப்படுகிறதோ, அதுபோல எலும்புகள் ஒன்றோடொன்று தேயாமல் இருப்பதற்காக, அவை வளைந்து கொடுப்பதற்காக, நடுவே பசையும் வைத்திருக்கிறான் எம்பெருமான்!

பசை கொஞ்சம் கொஞ்சமாகப் போய்விடுகிறது; எலும்பு உராய்கிறது; அதனால் கை – கால் வலி, உட்கார முடியவில்லை, நிற்க முடியவில்லை, என்று இப்போது புதிது புதிதாக வியாதிகள் சொல்லுகிறார்கள்.

அப்படி தண்டுவடத்து எலும்பை, பசையுடன் பாதுகாப்பாக வைத்திருக்கிறான் பரமாத்மா.

மேலே தலைக்கும், கீழே பாதத்துக்கும் இடையிலே எலும்பு மூன்றாய்ப் பிரிகிற இடம் இருக்கிறது. அதற்குத் த்ரிஸ்தானம் என்று பெயர். மூன்று எலும்புகள் த்ரிசூலம் மாதிரி இருக்கின்றன. அந்த த்ரிசூலத்துக்கு நடுவிலே பகவான் உட்காருகிறான். – எல்லாருக்கும் அப்படித்தான் உட்காருகிறான். பிராணன் வெளியேறுகிற நேரத்தில் உட்கார்ந்து கடைகிறான். அவ்வாறு கடைகிறபோது, இந்த ஆத்மா சரீரத்தை விட்டு வெளிக்கிளம்புகிறது.

வெளிக்கிளம்புதல் என்கிற காரியத்தை பகவான்தான் பண்ணுகிறான். அவ்வாறு கடைந்து, வெளிக்கிளம்பச் செய்கிற போது அந்த ஆத்மா ரொம்ப சிரமப்படுகிறது. அதைக் கட்டி அணைத்துக் கொள்கிறான் பரமாத்மா! 'ஐயோ, இப்படி சிரமப் படுகிறானே' என்று அரவணைத்துக் கொள்கிறான். அப்போது இந்த ஆத்மா பிரபன்னனாய், மறுபடி பிறவியில்லாத சாச்வதமான மோக்ஷத்தை அடையக் கூடியவன் இருக்கிறான் பாருங்கள்... அவ்வாறு இருக்கிற ஆத்மாவை சுகம்னா நாடி – இதற்கு மூர்தன்யநாடி, பிரும்மரந்த்ரம் என்று பெயர் – அதன் வழியே வெளிக் கிளப்புகிறான். இந்த சுகம்னா நாடி நமது சிரஸின் நடுவிலே, அதிசூட்சுமமாய் அமைந்திருக்கும். அதன் வழியே ஆத்மாவை வெளிக்கிளப்புகிறான் பரமாத்மா.

பிரபன்னனாய் இல்லாத இதர புண்யாத்மா, பாபாத்மாக்களுக்கு, இந்தச் சரீரத்தில் எத்தனையோ ரந்திரங்கள் இருக்கின்றன. அவற்றின் வழியே ஆன்மாவைக் கிளப்பிவிடுவான்.

ஆகவே, உட்கிரமணம் என்பது சரீரத்தைவிட்டு ஆத்மா வெளிக்கிளம்புகிற நிலை. இது ஆறாவது படிக்கட்டு.

ஏழாவது, அர்ச்சிராதி மார்க்கம்.

அர்ச்சி: என்று அக்னிக்குப் பெயர். – அக்னியை முதலாக உடைய சுக்லகதி அர்ச்சிராதி மார்க்கம். வெளுப்பான மார்க்கம் என்றும் பெயர். இதற்கு நேர் எதிர் மார்க்கம்தான் கிருஷ்ண மார்க்கம். – இருளானது.


அர்ச்சிராதி மார்க்கம், நேரே வைகுண்டத்துக்குப் போகும் படியான மார்க்கம். அங்கே போனால் திரும்பிவர முடியாது. அப்படி நம்மைக் கொண்டுபோய்ச் சேர்த்து வைத்துவிடும்! அவ்வளவு உயர்ந்த மார்க்கம் அது. அந்த மார்க்கத்திலே, பகல் பொழுதுக்கான அபிமானி தேவதை,



முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

சுக்லபக்ஷ அபிமானி தேவதையெல்லாம் வழியிலே நின்று கொண்டு வரவேற்கின்றனர். இங்கேயிருந்து போகிறவன் ஆதித்ய மண்டலத்தையும் தாண்டிப் போகிறான். போனால், அந்தப் பக்கம் விரஜா நதி என்று சொல்லும்படியான உயர்ந்ததான நதி வருகிறது.

சரீரத்தை விட்டு ஆத்மா வெளிக்கிளம்புகிறபோது, அந்த சூக்ஷ்ம சரீரத்துடன் போய் விரஜா நதியிலே ஸ்நானம் பண்ணுகிறது. அவ்வாறு பண்ணுகிறபோது, ஏதாவது கொஞ்சம் – நஞ்சம் பயம் இருந்தாலும் அது மொத்தம் விரஜா நதி ஸ்நானத்தோடு போய் விடுகிறது!



நதிக்கு அந்தப் பக்கத்திலே எழுந்திருக்கிறபோது, எம்பெருமான் எப்படி இருக்கிறானோ அதே மாதிரி இருக்கிறான்! சங்கு – சக்கர தாரியாய், பட்டுப் பீதாம்பரம் என்ன, ஆடை ஆபரணமென்ன, என்று பரமாத்மாவைப் போலவே ஆகிவிடுகிறான்! பரமாத்மாவைப் பார்த்தால் இவனைப் பார்க்க வேண்டாம்! அந்த மாதிரியான ஸாரூப்யம் அவனுக்குக் கிடைக்கிறது.

அப்போது, எதிரே 'மதிமுக மடந்தையர் ஏந்தினர் வந்தே...' என்ற பாசுரத்தில் விவரித்தபடி, அங்கே – அந்த இடத்திலே ஐந்நூறு அப்ஸர ஸ்த்ரீகள் எதிரே ஓடி வருகிறார்கள். ஒரு நூறு பேர் கையிலே பூமாலை; ஒரு நூறு பேரிடம் சந்தனம்; இன்னும் நூறு பேர் தூப – தீபாதிகள் ஏந்தியிருக்கிறார்கள். ஒரு நூறு பேர் பட்டுப் பீதாம்பரங்கள் ஏந்தி வருகிறார்கள் – இதெல்லாம் கொண்டு வந்து அந்த முக்த புருஷனுக்கு அலங்காரம் பண்ணுகிறார்கள்.

இந்த அலங்காரமே மிக உயர்ந்த அலங்காரம் என்று சொல்கிறது உபநிஷத். நாம் உலகத்திலே எத்தனையோ அலங்காரம் பண்ணிக் கொள்கிறோம். அதெல்லாமே சவத்துக்குப் பண்ணக் கூடிய அலங்காரங்கள்தான்! இந்தச் சரீரம் அழியப் போகிறது என்று தெரிந்தும், அழியக்கூடிய சரீரத்துக்கு நாம் பண்ணக் கூடிய அழகும் அழியக் கூடியது தானே!

அழியாத திருமேனி, விரஜா நதி ஸ்நானத்துக்குப் பிறகு வைகுண்டத்திலே கிடைக்கிறது. அப்போது அங்கே நமக்குக் கிடைக்கக் கூடிய அலங்காரத்துக்கும் அழிவு கிடையாது. அதனால் அதற்கு பிரும்மாலங்காரம் என்று பெயர்.

அலங்காரம் பண்ணிக் கொண்டு இவன் மேலே போகிறான். அங்கே, வித்யுத் புருஷன் என்று சொல்லக் கூடிய மின்னல் புருஷன் நின்று கொண்டிருக்கிறான். அவனுக்கு அமானவன் என்று பெயர். மானவன் என்றால் மனிதன். அமானவன் என்றால் மனிதன் அல்லாதவன் – அதாவது தேவ புருஷன். அவன் இவனைக் கைபிடித்து அழைத்துப் போகிறான்.

மணவாள மாமுனிகள் என்ற ஆசார்யர் உபதேச ரத்னமாலா என்கிற பிரபந்தத்திலே 'அமானவன் கரத்தாலே தீண்டல் கடன்' என்கிறார்.

'நமக்குக் கடமை என்ன...? நாம் எப்படி இருக்க வேண்டும் என்று கேட்டால், அமானவன் கரத்தாலே தீண்டி, நம்மைப் பிடித்து அழைத்துப் போகிற அளவுக்கு நாம் நம்மை உயர்த்திக் கொள்ள வேண்டும்...' என்று வலியுறுத்துகிறார்.

சரி, அமானவன் கை பிடித்து அழைத்துக்

கொண்டு போனான். உள்ளே வைகுண்டத்திலே, எம்பெருமான் இருக்கக் கூடிய இடத்துக்கு, துவார – பாலகர்களைத் தாண்டி, உள்ளே போகிறான். போனால், அங்கே பரமாத்மா, ஆதிசேஷன் மேலே, ஸ்ரீதேவி – பூதேவி – நீளாதேவி சமேதனாக வீற்றிருக்கிறான். வீற்றிருக்கும் திருக்கோலத்தில் ஒரு பாதத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு இன்னொரு பாதத்தை மடித்து வைத்துக் கொண்டு அமர்ந்த திருக்கோலத்தில் காட்சி தருகிறான். நித்ய சூரிகளெல்லாம் அவனை சேவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஸத்யம், அஸத்யம், தர்மம் அதர்மம் – இத்யாதி தேவதைகளெல்லாம் அவனுக்குச் சாமரம் போட்டுக் கொண்டிருக்கின்றன. ஆதிசேஷ சர்ப்பத்து மேலே உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.

இங்கேயிருந்து போகிற மோக்ஷ புருஷன் அந்தக் காட்சியைப் பார்க்கிறான். பார்த்து அதிசயித்து, தூரத்திலேயே நின்று கொண்டு விழுந்து விழுந்து ஸேவிக்கிறான். தூரத்திலேயே நிற்கிறான்; கிட்டே போவதற்குப் பயம்!

கை கூப்பி நிற்கிறவனைப் பார்த்து, எம்பெருமான் சிரித்தபடி கை தட்டிக் கூப்பிடுகிறானாம். 'கிட்டே வா!' என்று கூப்பிடுகிறானாம்.

இங்கேயிருந்து திருவல்லிக்கேணி கோயிலுக்குப் போகிறோம். கோயில் அர்ச்சகர் வெளியிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். "உள்ளே போய் பெருமாளைப் பார்த்துப் பெயரைச் சொல்லுங்கள்... இதோ வந்து விடுகிறேன்" என்கிறார் அவர். 'வந்து கற்பூர ஹாரத்தி பண்ணுகிறேன்' என்கிறார்.

உள்ளே போனவர் கை கூப்புகிறார். உடனே பார்த்தசாரதி பெருமாள் கைதட்டி, "வா!" என்று கூப்பிட்டார் என வைத்துக் கொள்வோம்... அங்கே நிற்கப் பிடிக்குமா நமக்கு! வெளியிலே ஓடி வந்துவிட அல்லவா தோன்றும்.

ஆனால் ஆழ்வார் என்ன கேட்கிறார்? 'பகவானே கைதட்டிக்கூப்பிடும்படியான அந்தக் காலம் வராதா!" என்று கேட்கிறார். 'கூவிக்கொள்ளும் காலம்' என்று ஆழ்வார் சொல்வது இதைத்தான்.

'கூவிக்கொள்ளும் காலம்' என்றால், நாம் இங்கேயிருந்தபடி கூவுதல் அல்ல. **அங்கே,** பகவான் நம்மைக் கூவி அழைத்துக் கொள்ளும் காலம்! வைகுண்டத்திலே கை தட்டிக் கூப்பிடுறான் பாருங்கள்... இங்கே வா! என்று, அதைத்தான் சொல்கிறார் ஆழ்வார்.

கூப்பிட்ட உடனே கிட்டே போகிறான் இவன். அங்கே பரமாத்மா சேஷ பர்யங்கத்தின்மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறான் – கராவலம்பம் செய்கிறான். 'வந்தாயா, வா!' என்று அவனைத் தூக்கி அப்படியே சேஷதர்ப்பத்தின் மேல் நிற்க வைக்கிறான். அது மாத்திரம் இல்லை... தன் மடியிலேயே உட்கார வைத்துக் கொண்டு விடுகிறான். உட்கார வைத்து, கட்டியணைத்து உச்சி முகர்ந்து, "இத்தனை நாளாக நீ எங்கே போயிருந்தாய்?" என்று கேட்கிறான்.

ஏகமாக குசலப் பிரச்னம்! இவன் வரிசையாக, "நான் அந்த ஊரில் இருந்தேன்; இந்த ஊரில் இருந்தேன்; அங்கே இருந்தேன் – இங்கே இருந்தேன்" என்று சொல்லிவிட்டு, கடைசியாக சென்னையில் இருந்தேன்" என்று பகவானைப் பார்த்துச் சொன்னால் எப்படி இருக்கும்?!

"சென்னை தெரியுமல்லவா? அந்தப் பட்டிணத்துல ஆஸ்திக சமாஜத்திலே உட்கார்ந்து உபன்யாசம் கேட்டுக் கொண்டிருந்தேன்; உபன்யாஸம் சொல்லிக் கொண்டிருந்தேன்..." – இப்படி இவன் பண்ணிய காரியமெல்லாம் பகவானுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறான்!

அப்போது பரமாத்மா, இவன் பண்ணிய காரியங்கள் ஒன்று விடாமல் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, "இப்போது நீ வரவேண்டிய இடத்துக்கு வந்திருக்கிறாய். இனி எங்கும் போகும் நிலை இல்லை..." என்று அவனை அமரும்படி பண்ணி, தன் திருவடியை அவன் சிரஸிலே வைத்து, அவனை பகவான் அனுபவிக்கிறான்; பகவானை இவன் அனுபவிக்கிறான்!

(வளரும்)

"ஆபரேஷன் ஃபீஸ் 7500 தானே டாக்டர், எக்ஸ்ட்ரா 4000 பில் போட்டிருக்கீங்களே?"

"ஆபரேஷன் போது என்னோட செல்ஃபோனை உங்க வயித்துக்குள்ள வச்சிட்டேன் அதுக்குத்தான்!"

– டி.என். சத்யா முருகவேல்



சிவாய நமோஓம் சிவாய நமஹ! சிவாய நமஓம் நமசிவாய



குறைவில்லா அன்னம் பாலிக்கும் காசியில் மஹாளயபட்க்ஷ அமாவாசையன்று அன்னதானம் செய்வோம் வாருங்கள்!



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் புனித க்ஷேத்ரமான காசியில் அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்டின் நான்காம் ஆண்டில் தொடர்ந்து அன்னதான சேவை!

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ அன்னபூரணி அன்னை தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

"பிரபஞ்சம் முழுவதற்கும் உணவுபடைக்கும் தாயாக விளங்கும் ஸ்ரீ அன்னபூரணி மாதா கொலுவீற்றிருக்கும் காசியில் மாதாமாதம் அமாவாசை அன்று அன்னதானம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஆன்மீக அன்பர்கள் அனைவராலும் காசியில் அன்னதானமிட முடியும் என்ற நிறைசிந்தனையோடு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" என்ற தனி அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இந்த அன்னதான இறைபணிக்கு தங்களால் இயன்ற நன்கொடையை வழங்கி "இறையருளால் காசியில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னம் அளிப்பதில் நாமும் ஓரளவேனும் பங்குகொண்டோம்" என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

- ★ தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ★ ரூ.500/ - அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.1000/ - அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.5000/ - அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர், திருமண நாள், பிறந்தநாள் மற்றும் திதி நாள் மேலும் தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவித்தால் அதன்படி தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி சொம்பும் காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும் ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்து தொடர்ந்து பத்து வருடங்கள் பிரசாதமும், "ஆன்மீகம்"மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்நதிகளில் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூரண அருளும் புனிதம் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீமத் பகவத் கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

காசி, கயா, பிரயாகை (திரிவேணி சங்கமம்) ஆகிய இம்மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் புண்ணிய காரியங்கள், பித்ரு காரியங்கள், பிண்டம் போடுதல், தர்மங்கள், ச்ராத்தம், திவசம், தர்ப்பணம் போன்றவற்றை அவரவர் விருப்பப்படி அன்னதானக் கைங்கர்ய அன்பர்களுக்கு செய்து தரப்படும்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு பிண்டப்பிரதானம் மற்றும் தர்ப்பணம் காசியிலும், கயாவிலும், பிரயாகையிலும் நேரில் சென்று செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் செய்யப்படுகிறது.

பித்ருக்களுக்கு பிண்டப்பிரதானம் செய்ய காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று பித்ரு க்ஷேத்ரங்களுக்கும் தனித்தனியாக ரூபாய் 1000/- அனுப்பும்போது யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். பிண்ட பிரதானத்திற்காக ரூ.5000/= அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை பத்து ஆண்டுகளுக்கு மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் எந்த இடத்தில் யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவர்களுக்கு ச்ராத்தம் செய்யப்படும். பித்ரு காரியங்களுக்குப் பணம் அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான 'அக்ஷய வடத்தின்' படமும், கயாவில் உள்ள விஷ்ணு பாதத்தின் படமும் அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் ச்ராத்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. மூன்று பித்ரு க்ஷேத்ரங்களில் ஏதாவது ஒரு அக்ஷய வடத்தில் (ஆலமரம்) பிண்டப்பிரதானம் செய்தால் ஏழு தலைமுறைக்கு பித்ருக்கள் கூட்டமே முக்தி அடைவதுடன் பித்ரு தோஷங்களும் நிவர்த்தியாகும்.

அன்னதான சேவையில் ஈடுபட விரும்பும் ஆன்மீக அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque/D.D/M.O மூலம் (Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கலியுகத்தில் அன்னதான சமுதாயப்பணி மகத்தான தெய்வீகப் பணியாக காசி திருத்தலத்தில் தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம்.

Cheque/D.D./M.O அனுப்ப வேண்டிய முகவரி:

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street, (Opp: Sri Kapaleeswarar Temple), Mylapore, Chennai - 600 004.

Tel: 4959302 Fax: (044) 4616311 E-mail:siva siva@vsnl.net

அடியார்களுக்கு அமுதளிப்பது சிவனுக்குச் செய்யும் ஜீவசேவையாகும்!


மயில்சாமிங்களா?



'கே.' டி.வியில் ராஜ்கிரண் வர்யசைத்த 'அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் மாற்றங்கள்' (பாண்டவர் பூமி) பாடலைக் காண்பித்தார்கள். உச்சியிலிருந்த அவர், இன்று வழக்கு, சம்மன் அனுப்பியும் ஆஜராகாதது என்று திசைமாறிப் போன கோலமும் நினைவில் நெருடியது.

ஸ்டார் விஜய்யில் "ஹோம் மேக்கர் டிப்ஸ்" என்ற பெயரில் ஒரு நிகழ்ச்சி (தமிழ் நிகழ்ச்சிதான்). "ஜலதோஷம் பிடிப்பதற்கு முதல் நாளே தொண்டையெல்லாம் ஒரு மாதிரி வறண்டு போகும். அப்போது இஞ்சி, மிளகு கலந்த டீ சாப்பிட்டால் ஜலதோஷத்தைத் தவிர்க்கலாம் அல்லது நிச்சயமாகத் தள்ளிப் போடலாம்" என்பது போன்ற சாதாரணமான உபயோகமான தகவல்களை வழங்குகிறார்கள்.

அப்படியொரு மட்டையடியை கிரிக்கெட் சரித்திரத்தில் பார்த்திருக்க முடியுமா என்பது தெரியவில்லை. தென்னாப்பிரிக்காவின் நிக்கி போயே பாகிஸ்தான் அணிக்கு எதிராக ஆடிய போது அது நடந்தது. தனக்கு வீசப்பட்ட பந்தை அவர் மட்டையால் தடுத்துவீச, அது நேராகப் போய் எல்லைக் கோட்டைத் தாண்டியிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யாமல் கோக் குடித்துக் கொண்டிருந்த பார்வையாளர்களின் கையிலிருந்த கோக் பாட்டில் மீது வேகமாகப் பட்டு அதைத் தெறித்துவிழ வைத்தது.



• நிக்கி போயே

ஆஸ்கரை மயிரிழையில் நழுவ விட்டு வந்த அமீர்கான் முதலில் நடித்தது 'யாதோன் கி பாராத்' படத்தில் - பத்து வயது பாலகனாக இருக்கையில்! பிடித்த பாடம் இயற்பியல். பிடித்த எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய். வண்ணம்? 'கறுப்புதான் எனக்குப் புடிச்ச கலரு'. எதற்கு இப்போது அமீர் புராணம் என்கிறீர்களா? அந்தக் கேள்வியை நீங்கள் கேட்க வேண்டியது இதையெல்லாம் பட்டியலிட்ட 'ஸ்டார் சானலிடம்.

காமெடி டைமில் மயில்சாமி ஃபார்முக்கு வந்து விட்டார். ஆரம்பத்தில் அவர் டெலிபோன் ரசிகர்களை 'ஆனாலும் ஓவர்' எனும்படி கலாய்த்ததைக் கைவிட்டு விட்டார். ஆனால் தொலைபேசியில் ரசிகைகள் 'ஐயோ மயில்சாமிங்களா?' என்று புல்லரிப்பதுதான் கண்றாவியாக இருக்கிறது.

அனிமல் ப்ளானெட்டில் ஒரு பெரிய மிருகத்தைக் காட்டினார்கள். ஆஸ்திரேலியாவில் எடுக்கப்பட்ட நிகழ்ச்சி அது. அரை மணி நேரத்துக்கு அந்தக் கரிய மிருகத்தின் ஆகிருதியான தோற்றத்தையும் அது மெதுவாகவும் கம்பீரமாகவும் நடந்து வருவதையும் காட்டினார்கள். அதன் மேல் கவலையின்றி சில மைனாக்கள் உட்கார்ந்து கொண்டிருந்ததையும் காட்டினார்கள். அந்த மிருகம் எருமை மாடு!

— சேனல்பாய்

ரிமோட்

சில தொலைக்காட்சிப் பேட்டிகள்...

எழுத்து ஓர் அனுபவம். எழுத்தின் ஒவ்வொரு துறையும் ஓர் அனுபவம். அது போலவே தொலைக்காட்சிப் பணி என்பது முற்றிலும் வித்தியாசமான இன்னொரு தனி அனுபவம். இது வேறு. அது வேறு.

எத்தனையோ பிரமுகர்களைப் பேட்டி கண்டு எழுதியிருக்கிறேன். ஆனால் தொலைக்காட்சிகளில் நான் கண்ட பேட்டிகள் சில, என்னைப் படுத்திய பாடு கொஞ்ச நஞ்சமல்ல.

பதிவு செய்து பிறகு ஒளி பரப்புவது என்ற ஏற்பாடு தொலைக்காட்சிகளில் இப்போதுதானே! முன்னெல்லாம் நேரடி ஒளிபரப்புத்தான் பெரும்பாலானவை. 'லைவ் ரிலே'யில் ரீ டேக்குக்கு வழி கிடையாது.

திருப்பூர் குமரனின் மனைவி ராமாயி அம்மாள் எனக்கு நன்கு அறிமுகமானவர்தான். என் தாயாருக்கு இணையாக நான் மதித்து வரும்கூட. அவரைப் பேட்டி காண வேண்டும் என்று தொலைக்காட்சியிலிருந்து அழைப்பு வந்த போது மகிழ்ச்சியோடு சம்மதித்தேன். ராமாயி அம்மாள் இது குறித்து தானும் சம்மதம் தெரிவித்திருப்பதாக அன்போடு எனக்கு ஓர் அஞ்சலட்டையில் எழுதியிருந்தார்.

குறித்த நாளன்று அவரும் நானும் நிலையத்திற்கு வர, பேட்டி ஆரம்பமாகியது. நேரடி ஒளிபரப்பு.

தன்மேல் ஒளி விழுவதைப் பார்த்தோ என்னவோ, ராமாயி அம்மாள் சற்று மிரட்சி அடைந்துவிட்டார். என்பது தாண்டிய வயது அவருக்கு அப்போது. தியாகிகள் யாரும் தங்கள் மேல் வெளிச்சம் விழ வேண்டும் என்று கருதித் தியாகம் செய்யவில்லை என்பது அன்று நிரூபணமாகியது! என்னிடம் வாயையே திறக்கவில்லை. ஒரு வார்த்தை, இரண்டு வார்த்தை, இரண்டு வார்த்தை பதில்களுக்கே கடின முயற்சி செய்ய வேண்டியிருந்தது.

"திருப்பூர் குமரனுக்குத் தலைல அடிபட்டது இல்லீங்களா?"

"ஆமுங்க!"

"மருத்துவமனைக்குக் கொண்டு போனப்ப, மண்டையோட்டுச் சில் உடைஞ்சு உள்ள போயிருக்கறதைக் கண்டு பிடிச்சாங்க இல்லீங்களா?"

"ஆமுங்க!"

"அந்தச் சம்பவத்தப் பத்திக் கொஞ்சம் சொல்லுங்களேன்?"

"நீங்களே சொல்லுங்க தம்பி!"

இப்படித்தான் அந்த அரை மணிப் பேட்டி முழுவதும்! என் கேள்விகள் மினி சொற்பொழிவுகள். அவர் பதில்களோ அரை வார்த்தை அல்லது ஒரு வார்த்தை. அவரைப் பற்றி நான் பேச, அதை அவர் உஊம் கொட்டிக் கேட்டுக் கொண்டிருந்த மாதிரித் தோன்றியது எனக்கு. நான் பெரிதும் மதிக்கும் அந்த அம்மா, பொதுவாக என்னுடன் நன்றாக உரையாடும் அவர் - அன்று கொஞ்சமாவது வாய் திறந்து பேசினால்தானே!

ஒரு வழியாக நிகழ்ச்சி முடிந்ததும், தொலைக்காட்சியினர் 'நல்லவேளை, சமாளித்தீர்கள்!' என்று என்னைப் பாராட்டினார்கள்.

"என்னம்மா, இப்படிச் செய்துவிட்டீர்களே! நீங்கள் அதிகம் பேசவே இல்லையே? நீங்கள் பேட்டிக் கொடுப்பவர். நீங்கள் அல்லவா நிறையப் பேச

• சி.சு. செல்லப்பா



திருப்பூர் கிருஷ்ணன்



வேண்டும்!" என்றேன் அவரிடம்.

"வெளிச்சத்தப் பாத்தா எனக்குக் கண்ணு கூசுது தம்பி. பேச்சே வர மாட்டேங்குது. நீங்கதான் நல்லாப் பேசறீங்களே? பெறகு நான் எதுக்கு ஊடால?" என்றார், பாசத்துடன் என் முகவாய்க் கட்டையைப் பிடித்தபடி!"

அன்று நான் வீடு திரும்பியதும் நண்பர்கள் பலர் என்னைத் தொலைபேசியில் விளாசித் தள்ளினார்கள். "என்னய்யா இது. அந்த அம்மாவை நீ பேசவே விடவில்லையே!"

இதைப் பிறகு சந்தித்தபோது, ராமாயி அம்மாளிடம் சொன்னேன்.

"அவங்க கெடக்காங்க தம்பி. என்னைப் பத்தி நானே என்னத்தைப் பேசறது! நீங்கதான் இனி என்னைப் பத்தி, என் புருசனைப் பத்தி எல்லாம் பேசோணும். எழுதோணும்!"

பாசம் பொங்கும் அந்தத் தாய்மைக் குரல் இன்றும் என் காதில் ஒலிக்கிறது. கூடவே 'ஆமுங்க... அஆமுங்க!' என்ற அவரின் ஒற்றை வார்த்தைப் பதில்கள் என் நினைவில் மின்னி, இதழில் முறுவல் பூக்கிறது.

இதற்கு நேர் எதிரான இன்னோர் அனுபவம், என்மேல் அன்பு நிறைந்த சி.சு. செல்லப்பாவை நான் கண்ட பேட்டி. பத்தே நிமிடம்தான் பேட்டி நேரம். செல்லப்பா நிறையப் பேசுவார். நீங்கள் சுருக்கமாகவே பேசுங்கள். பத்து நிமிடத்திற்குள் மூன்று நான்கு கேள்வியையாவது கேட்டு, அதற்கு நீங்கள் பதில் சொன்னாற்போல் இருக்க வேண்டும். அப்போதுதான் நிகழ்ச்சி நன்றாக இருக்கும்! என்றேன் பேட்டி தொடங்குவதற்கும் முன்பாக அவரிடம். அவர் என்னை ஒரு முறைமுறைத்தார். 'இதெல்லாம் எனக்குத் தெரியாதா! சும்மா இரு!' என்பதுதான் அந்த முறைப்பின் அர்த்தம். என் போன்றவர்களின் ஆதர்சம் அவர். கடும் கோபக்காரர். ஆனால் குழந்தை மாதிரி.

"பந்தயம் என்ற சிறுகதையை நீங்கள் எழுதியவுடன், சிறுகதை எழுதுகிற பந்தயத்தில் நீங்கள் ஜெயித்து விட்டீர்கள் என்று சிட்டி விமர்சனம் எழுதினாரே, ஞாபகமிருக்கிறதா? நீங்கள் எப்போது சிறுகதை எழுத ஆரம்பித்தீர்கள்?"

– இதுதான் என் முதல் கேள்வி. மனிதர் இதற்கே பத்து நிமிடம் பதில் சொன்னார்! நான் குறுக்கிட முயன்றபோதெல்லாம் அவர் என்னை அடக்கி, தாம் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். தள்ளி நின்று கொண்டிருந்த நிலைய அதிகாரிகள் நிகழ்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருமாறு சைகை செய்ய, நான் அவர் பேச்சினிடையே குறுக்கிட்டு வணக்கம் கூறி விடை பெற வேண்டியதாயிற்று. 'அதற்குள்ளா பத்து நிமிடம் ஓடி விட்டது!' என்றார் செல்லப்பா ஆச்சரியத்துடன். பிறகு அவரைச் சந்திக்கிற போதெல்லாம் இந்த நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து நாங்கள் சிரித்துக் கொள்வதுண்டு.

இதெல்லாம் நான் கண்ட பேட்டிகளில் சில. நான் காணாத, ஆனால் கண்டிருக்க வேண்டிய ஒரு பேட்டியும் உண்டு. அவ்விதம் பேட்டி கொடுக்க வேண்டிய பிரமுகர் மிகச் சிறந்த ஓவியர். அவர் விதித்த ஒரு நிபந்தனை ஒப்புக் கொள்ளப் படாததால், பேட்டி வாய்ப்பை நிராகரித்து விட்டார். அந்த நிபந்தனையோ இதுவரை யாரும் விதிக்காத விந்தையான நிபந்தனை. அவர் பேட்டி வாய்ப்பை நிராகரித்ததாலேயே என் மதிப்பில் மேலும் உயர்ந்தார். 'அவர் ஆர்யா?' என்று கேட்டால், அந்த கேள்வியேதான் அதற்கு பதில். அவர் ஆர்யா! மகாகவி பாரதியார் படத்தை வரைந்த ஆர்யா என்கிற பாஷ்யம் கொடுக்காத அந்தப் பேட்டி பற்றி...

(தொடரும்)

சக்தி கொடுத்தாயே!



இருபத்தி இரண்டு வயது கார்த்திக்கைப் பார்த்தால், 'இந்தப் பையனா பாபா படத்துல 'சக்தி கொடு தாயே!' பாடலைப் பாடினான்?' என்று நிச்சயம் ஆச்சர்யப்படுவார்கள்.

"குரலுக்கும் உருவத்துக்கும் சம்பந்தமில்லையே; அது வேறு, இது வேறுதானே, குயிலின் நிறத்துக்கும் குரலுக்கும் சம்பந்தம் பார்க்க முடியுமா என்ன?" என்று இனிமையாக ஆரம்பித்தார் கார்த்திக்.

சென்னை பல்கலைக் கழகத்தில் எம்.சி.ஏ. படித்துக் கொண்டிருக்கும் இந்த இளம் பாடகர், இப்போதும் ஆச்சர்யத்தில் மூழ்கிப் போகிறார்.

"பாபா படத்துக்கு ட்ராக்தான் பாடினேன். ரஜினிக்காக பாடுகிறேன் என்பதை உணர்ந்ததும் ஆளில்லாத அண்ணா சாலையில் வேகமாக பைக் ஓட்டிச் செல்லும் மகிழ்ச்சி. ஆனால் ரஜினி என் வாய்ஸை கேட்டுவிட்டு நன்றாக இருக்கிறதே என்று சொல்ல, என் குரலிலேயே 'சாயா, சாயா'வும் 'சக்தி கொடு தாயே' பாடலும் வெளிவந்துவிட்டது. அந்தச் சந்தோஷத்தை நான் எப்படிச் சொல்ல? 'சக்தி கொடுத்தாயே' என்று மாற்றிப் பாடலாம் போலிருக்கிறது! இதற்கு முன் நிறைய ஹிட் பாடல்களைப் பாடியிருந்தாலும் பாபாவுக்குப் பிறகுதான் நான் வெளியில் தெரிகிறேன்" என்கிறார்.

ரோஜா கூட்டம் படத்தில் 'அண்ணாசாலையில்', பார்த்தாலே பரவசம் – 'அந்த மூன்றெழுத்துக் கெட்டவார்த்தை', ஸ்டார் – 'நேந்துகிட்டேன் நேந்துகிட்டேன்', மனதை திருடி விட்டாய் – 'மஞ்சக் காட்டு மைனா', டும்டும்டும்– 'கிருஷ்ணா கிருஷ்ணா' என்று நீள்கிறது இவரது ஹிட் பட்டியல்!

"ஒவ்வொருவருக்கும் மனத்தில் ஒரு கனவு இருக்குமே அது மாதிரிதான் பாடுவது பற்றி என் கனவும். அது கனவாகத்தான் இருக்குமென்று நினைத்தேன். ஏதோ ஒரு வேலையில் உட்கார்ந்து கொண்டு சம்பளம், கல்யாணம் என்று வாழ்க்கை போகுமென நினைத்தேன். நம்ம போடற கணக்குக்கு மேல இறைவன் ஒரு கணக்குப் போடறானே!" என்று கொஞ்சம் தத்துவமாகப் பேசும் கார்த்திக்குக்கு, இசையறிவு எப்படி?



"ஆரம்பத்தில் கர்நாடக சங்கீதம் கொஞ்சம் படித்தேன். பிறகு ஈடுபாடு இல்லாமல் போய் விட்டது. இப்போது ஸ்ரீராம் பரசுராம் சாரிடம் இந்துஸ்தானி படித்து வருகிறேன். இசையை முறையாகக் கற்றுக் கொண்ட பிறகு எனக்கே என் பாடல்கள்



மீது நம்பிக்கை வருகிறது. முன்னேற்றம் தெரிகிறது'' என்று சொல்லும் கார்த்திக், தமிழ், தெலுங்கு, மலையாளம் கன்னடம் என்று பல மொழிகளிலும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியிருக்கிறார்.

ஏ.ஆர். ரஹ்மானிடம் இவரை அறிமுகப்படுத்தியது பாடகர் ஸ்ரீனிவாஸ்தானாம்.

"எனது வகுப்பு நண்பனின் உறவினர் அவர். நான் நன்றாகப் பாடுவேன் என்று



அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டேன். அவர் என்னை ஏ.ஆர். ரஹ்மானிடம் அறிமுகப்படுத்தினார். அதற்குப் பிறகு ரஹ்மானிடம் நீண்ட நாட்களாக கோரஸ் பாடினேன். இதன் மூலம் நண்பர்களிடத்தில் மதிப்பும் கல்லூரியில் ஓரளவு பாபுலாரிட்டியும் கிடைத்தது. பிறகு ரஹ்மான் சார் தான் முதல் பாடல் வாய்ப்பையும் கொடுத்தார். நான் பாடிய முதல் பாடல் 'நேந்து கிட்டேன்'. அது ஹிட்டானது. மகிழ்ச்சியில் மிதந்தேன். பிறகு இளையராஜா, ஹாரிஸ் ஜெயராஜ், கார்த்திக் ராஜா உட்பட பல்வேறு இசை இயக்குனர்களுக்கு டிராக் பாடியிருக்கிறேன்'' என்று சொல்லும் கார்த்திக், மனசு முழுவதும் இசையில் இருக்க, நாள் முழுவதும் ரெக்கார்டிங்கில் கழிய, எம்.சி.ஏ. படிப்புதான் கேள்விக் குறியாக இருக்கிறது என்கிறார்.

இவரது அப்பாவும் அம்மாவும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்களாம். "அதுக்காக காதலித்தால் வீட்டில் ஏற்றுக் கொள்வார்கள் என்று அர்த்தமல்ல; இப்போதைக்குக் காதல் எதற்கு? இசையைக் காதலிக்கிறேன். இந்தக் காதல்தான் இனிமையாக இருக்கிறது. அந்தக் காதலுக்கு நேரம் எங்கேயிருக்கிறது?" என்று கேட்கிறார்.

"பின்னணிப் பாடகர்கள் பி.பி. ஸ்ரீனிவாஸிலிருந்து எஸ்.பி.பி., ஹரிஹரன் உட்பட எனக்குப் பிடித்தவர்கள் நிறைய. சிறந்த பின்னணிப் பாடகராக வரவேண்டுமென்பது என் ஆசை. இசையில் நிறைய சாதிக்க வேண்டும், ஏதாவது பண்ண வேண்டும் என்று மனது துறுதுறுத்துக் கொண்டிருக்கிறது, கொதிக்கும் எண்ணெயில் விழுந்த தண்ணீர் மாதிரி. என்ன செய்யப் போகிறேன் என்பதுதான் தெரியவில்லை?" என்று கை விரிக்கும் இவருக்குச் சினிமாவில் நடிக்க அழைப்பும் வந்ததாம். ''என்னோட



பலம் எதுல இருக்குன்னு எனக்குத்தான் தெரியும். இசையை விட்டுட்டுப் போக மனம் வரவில்லை'' என்கிறார். சரிதானே!

— சலாம்ஜி

படங்கள்: வெங்கடேஷ்

ராமதாஸின் கோபம் எப்படி அடங்கியது?

● இரா. கல்யாணசுந்தரம், அனுப்பானடி.

? 'ரஜினி மட்டுமல்ல, இனி எந்த நடிகர் சங்கத்தின் போர்டும் எங்கும் தொங்கக் கூடாது' என்ற ராமதாஸின் கோபம் எப்படி அடங்கியது?

! போணி ஆகாது என்று புரிந்ததால்.

● ஆர். ராமசுப்ரமணியன், வடவள்ளி.

? ஜனாதிபதியால் எந்த மேல்நடவடிக்கையும் எடுக்க இயலாது என்று தெரிந்தும் எல்லா எதிர்க்கட்சிகளும் அரசுக்கு எதிராக அவரிடம் மனு கொடுப்பதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா?

! ஜனாதிபதியால் நடவடிக்கை எடுக்க முடியாதிருக்கலாம். ஆனால், அவர் அறிவுரை வழங்கலாம். ஒரு மனுவை, பரிசீலனைக்கு அவர் அரசிடம் அனுப்புகிறபோதே அந்த மனு கவனத்துக்குரியது என்று அவர் கருதுவது தெரியவரும். மேலும், அம்மனுவை எதிர்க்கட்சியினர் மக்கள் மன்றத்திலும் தாக்கல் செய்ததாக ஆகிவிடும்.

● என்.ஸி. தர்மலிங்கம், நாமக்கல். ❑

? உண்மையான மகான் சுவாமி விவேகானந்தர் எந்த சினிமாவிலும் நடித்ததில்லை. அவர் புகழ் உலகுள்ளவரை நிலைத்திருக்கும். அவரை விடவா 'சினிமா' மகான்களின் புகழ் நீடிக்கும் என்று நம்புகிறீர்கள்...?

! உங்க தலையில் அடித்து சத்தியம் பண்ணுகிறேன்; நான் அப்படி நம்பவே இல்லை சார்!

● கே. தெய்வசிகாமணி, சென்னை - 30.

? திருப்பதி கோவிலுக்கு ஜீன்ஸ், அரைக் கால் டவுசர், மிடி போன்ற ஆடைகளை அணிந்து வருவதாகவும், இதனால் இனி பாரம்பரிய ஆடைகள் மட்டுமே அனுமதிக்கப்படும் என்றும் ஆலோசிக்கப்பட்டு வருவது பற்றி..?

! மிக நல்ல காரியம். உடுத்தும் உடை, அதன் நிறம், நம் மனோநிலையை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்னும் போது இறைவனைக் காணச் செல்லும் வேளையில் மனம் குவியச் செய்யும்படி உடுத்துவதே முறை. ஞாயிறு தேவாலயம் செல்வோர் எப்படி அழகாகவும் பண்போடும் உடுத்திச் செல்கிறார்கள் என்று கவனியுங்கள்.

● ஜி.ஜி. சரவணன், மயிலாடுதுறை.

? பூம்புகாரில் நடந்த வன்னியர் மகளிர் பெருவிழாவில் கலைத் துறையினர், பத்திரிகையாளர்கள் அனைவரையும் கடுமையாக விமர்சித்துப் பேசியுள்ளாரே டாக்டர் ராமதாஸ்?

! தப்பில்லை; பத்திரிகைகளும் சினிமாத் துறையினரும் அரசியல்வாதிகளை விமர்சிக்க

• காண்கிறார் பகல்கனா!



❑ ரூ. 100/- பரிசு பெறுபவர் :
என்.ஸி. தர்மலிங்கம்,
31-121, KMC தெரு,
நாமக்கல் - 637 001.

✱ ரூ. 50/- பரிசு பெறுபவர் :
ஆர். வசந்தா,
MF 4/320,
விருந்தாவன் ஹவுசிங் காலனி,
பட்டோம்,
திருவனந்தபுரம் - 695 004.


நீங்கள் கேட்டவை - தராசு



• படிக்கிறார் வரலாறு!



• அழிக்கிறார் ஆசையை!



• மறுக்கிறார் பலன்சொல்ல!



• வாழ்கிறார் வரலாறாய்!

வில்லையா? ஆனால், இவரது விமர்சனம் வன்முறையைத் தூண்டுவதாகவும் தனிமனித துவேஷமாகவும் தொனித்ததுதான் பிரச்னை.

● **எஸ். அப்துல்லா அஹ்மது, நாகூர்.**

? மன்னிக்கக் கூடாத குற்றம் எது?

! மும்பை புறநகர் ரயிலில் மனநோயாளிச் சிறுமி பாலியல் பலாத்காரத்துக்குட்பட்ட போது, கூட இருந்த வேறு நாலு பயணிகள் பேசாமல் வேடிக்கை பார்த்த கோழைத்தனம்.

● **ப. காளிதாசன், வேட்டனூர்.**

? இலவச வேஷ்டி சேலையைப் பணம் கொடுத்து வாங்கச் சொல்கிறதே அ.தி.மு.க. அரசு?

! திட்டம் கட்டாயமாகத் தோல்வியுறும்! நாற்பது ரூபாய் கொடுத்து வாங்கும் புடைவை நாலு மாதம் கூட உழைக்காது என்பது யாவரும் அறிந்ததே. வாங்க மாட்டார்கள். கைத்தறி என்பது இன்றைய இயந்திர யுகத்தில் காஸ்ட்லியான விஷயம். ஆகவே, அதை உயர் மத்திய வகுப்பினர் தேவைக்கும் ஏற்றுமதி சந்தைக்கும் ஏற்ப நெய்வதும் விற்பதும்தான் அறிவுடைமை.

● **வி. ரூபஸ், கோவை.**

? தி.மு.க. இனி என்ன செய்ய வேண்டும்?

! குடும்பத் தகராறுகளை முதலில் சீர்செய்ய வேண்டும்.

● **கு. கணேசன், மறைமலைநகர்.**

? மதுரையில் தி.மு.க. கஞ்சித் தொட்டி நிகழ்ச்சியில் நடைபெற்ற கலவரத்தை 'ஜாலியன்வாலாபாக் படுகொலை' என இளங்கோவன் வர்ணித்துள்ளது குறித்து...?

! ஆர். வசந்தாவின் கேள்வியில் இருக்கிறது பதில்.

ஆர். வசந்தா, திருவனந்தபுரம் - 4.

? ஒரு மாருதி கார், தங்கள் அம்பாஸிடர் மீது மோதியது என்பதற்காக (எவ்வளவு பெரிய குற்றம்!) 'ஜெ'வுடைய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த எட்டு பேர், மாருதியில் இருந்த மூன்று பேரை வெளியே இழுத்துப் போட்டு, அவர்களுள் வயதானவர் ஒருவர், தங்கள் கால்களில் விழுந்து இரக்கம் காட்டும் படி கெஞ்சியதையும் அலட்சியம் செய்து, அவரைக் காலால் உதைத்து துப்பாக்கிக் கட்டையால் அடித்து, மற்ற இருவரையும் பலமாக அடித்து, காவல் துறையினர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே செய்த கொடுமை, அடிமை இந்தியாவில் நடந்த பிரிட்டிஷ் அட்டூழியங்களை நினைவுபடுத்துகிறது அல்லவா?

● **சி. மணி, புத்தனாம்பட்டி.**

? ஊழலை ஒழிப்பதே எனது லட்சியக் கனவு என்கிறாரே ஷெகாவத்?

! 'எனது லட்சியம்' என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், 'கனவு' என்ற வார்த்தையையும் சேர்த்துக் கொண்டு விட்டதால் அரசியல்வாதிகளுடன் சேர்ந்து ஷெகாவத்தும் நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.

● **க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.**

? நீங்கள் ஃப்ரெஞ்சு தாடி வைத்துக் கொள்ளவில்லையா...?

! வாயைச் சுற்றி சதுரமாய் ஒரு கட்டம்! மோவாயில் ஒரு 'லொய்' என்று சாலமன் பாப்பையா (சுதந்திர தின சிறப்புப் பட்டிமன்றம்) ஒரு வாரு வாரிய பிறகு, லேட்டஸ்டாக ஃபிரெஞ்சு தாடி வைத்த கபில்தேவே மோவாயைச் சொறிவதாகக் கேள்வி.

● **எல். மீனாட்சிசுந்தரம், திருவண்ணாமலை.**

? பழுத்த மரம் கல்லடி படுவது நியாயமாங்க?

! பின்னே... 'ரெய்டு'ன்னா சும்மாவா!

● **ஆர். அப்துல் சலாம், திருச்சி - 21.**

? மக்களின் நாடித் துடிப்பை அறிந்து செயல்படுகிறார் முதலமைச்சர் ஜெயலலிதா என்று காளிமுத்து பேசியுள்ளாரே?

! நாடி பிடித்துப் பார்க்கும் எல்லா வைத்தியர்களின் வைத்தியமும் நற்பலன் தந்து விடுவதில்லை; ஜெ. வைத்தியம் என்ன? பலன் என்ன? என்பதைக் காளிமுத்து சொன்னாரா பாருங்கள்! அதான் காளிமுத்து!

என்றும் வாழும் எல்விஸ்!





ஆகஸ்ட் 16.- புயல் காற்றும் மழையுமாய் வானம் வெடித்துச் சிதறிக் கொண்டிருக்க, "க்ரேஸ் லாண்ட் மாளிகை" என்ற, அமெரிக்காவில் வெள்ளை மாளிகைக்குப் பிறகு அதிக அளவில் பார்வையாளர்கள் வரும், அந்தப் பெரிய மாளிகையின் முன் முப்பதாயிரம் பேர் கூடியிருந்தார்கள். அவர்கள் காத்திருந்தது தங்கள் அபிமான கலைஞனுக்கு அஞ்சலி செலுத்த. இரவு பத்து மணிக்கு மேல் மழை ஓய்ந்ததும் அந்த மக்கள் கூட்டம் ஊர்வலமாய்ப் புறப்பட்டது. கைகளில் மெழுகு வர்த்திகளை ஏற்றி வைத்துக் கொண்டு, மலர் மாலைகளை ஏந்தியபடி கூட்டம் நகர்ந்தது. "இது கண்ணீரில் கட்டிய ஏணி, நினைவுகளில் போடப்பட்ட பாதை" என்பது போன்ற கவிதை வரிகள் தாங்கிய அட்டைகள் பாதையை நிறைத்தன. அந்த மாளிகைக்குள் இருந்த கல்லறையில் உணர்ச்சிகரமாய் விடிய விடிய அஞ்சலி செலுத்தினார்கள். ஆச்சரியமான விஷயம், அந்தக் கலைஞன் இறந்து பல வருடங்கள் ஆகிவிட்டது. இத்தனை உணர்ச்சிப் பிரவாகமும் அந்தக் கலைஞன் இறந்த இருபத்தி ஐந்தாவது வருட நினைவு விழாவில். அன்றைக்கு மட்டும் அஞ்சலி செலுத்த வந்தவர்களின் எண்ணிக்கை எழுபத்தைந்தாயிரம்!

கால் நூற்றாண்டுக்குப் பின்னரும் கண்ணீர் அஞ்சலி செய்ய வைத்த அக் கலைஞர், ராக் அண்ட் ரோல் இசை உலகத்தின் ராஜா என்று வர்ணிக்கப்படும் எல்விஸ் ப்ரெஸ்லி. எல்விஸ், அறுபதுகளின் மைக்கேல் ஜாக்ஸன். அந்தக் கால அமெரிக்க இசை உலகத்தின் புயல். அவரது இசைப் பாணி நாட்டுப்பாடல், காஸ்பெல், ராக் போன்ற எல்லா வித இசை நுணுக்கங்களையும் உள்ளிட்ட ஒரு விநோதக் கலவை. எல்விஸின் பாடல் விற்பனை ரிக்கார்டுகளுக்கு இணையாக உலகத்தில் எந்த ஒரு பாடகரின் ஆல்பங்களும் விற்றதில்லை.

சொல்லப் போனால், எல்விஸ் புகழின் உச்சியில் இருந்தபோது சம்பாதித்த செல்வத்தை விட அவர் இறந்த பிறகு ஈட்டியது பல மடங்கு அதிகம். எல்விஸ் எண்டர்பிரைசஸ் என்று அவர் மனைவியாலும் மகளாலும் நிர்வாகிக்கப்படும் அவர் நினைவாக இயங்கும் அறக்கட்டளை, எல்விஸ் சம்பந்தப்பட்ட பாடல்கள், அவர் உரிமைகள், தானங்கள் மூலமாய் வருடாந்தரம் சம்பாதிக்கும் தொகை எவ்வளவு தெரியுமா? கிட்டத்தட்ட 100 மில்லியன் டாலர். (500 கோடி ரூபாய்)

எல்விஸுக்கு இருக்கும் அளவுக்கு வேறு எந்த கலைஞருக்காவது ரசிகர்கள் இருப்பார்களா என்பது சந்தேகமே.

- ஆனந்த் ராகவ்

படங்கள்: நன்றி 'தி நேஷன்'

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Pvt. Ltd. Editorial Team : C. Egnath Raj, Anuradha Sekhar, Jesudoss. Layouts : S.Stephen, P.R. Rajan.
Editor : Seetha Ravi.
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Half Yearly Subscription : India : Rs. 165/-
Overseas (Air Mail) Annual : 62 U.S. Dollars, Srilanka Rs.2000/-

Media Dreams Ltd.

Chennai - 600 024. Ph : 3728702

Dreams Audio

பெருமையுடன் வழங்கும்

முகங்கள்

தமிழ் பாப் இசைப்பாடல்கள்



Anita Chandrasekaran






Music
Mahesh Shankar


Other New Releases



BOMBAY SISTERS
Sanskrit Devotional



KADRI GOPALNATH
Fusion Vol.2



SLOKAS FOR CHILDREN
S. Rajeswari

Marketed by : **Kosmic Music Pvt. Ltd.**

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka